www.tamilarangam.net

# சமர்

கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால்
அது
சக்தியாக உருவெடுக்கும்

இதழ் 13 நவம்பர் / டிசம்பர் அன்பளிப்பு 10 F

## சந்திரிகா முன்னணி அரசு ஒரு விடிவெள்ளியா ?



சந்திரிகா

சந்திரிகா குமாரணதுங்கா தலைமையிலான கூட்டுமுன்னணி இனப்பிரச்சனைக்கான தீர்வில் அக்கறையுள்ளதா? புதிய ஆட்சியாளர்கள் சமாதானத்தை நிலைநிறுத்துவார்களா? என்பதுதான் இன்று யார் வாயிலும் பேச்சாக இருக்கிறது.

இலங்கையின் கடந்த 17 வருட ஐ.தே.கட்சியின் ஆட்சியில் பாசிசத்தின் உச்ச வளர்ச்சியாலும் கொடூரமான அடக்குமுறையினாலும் நாடு முழுவதும் குருதியால் தோய்த்தெடுக்கப்பட்டது. அரசயந்திரத்தினதும் அதன் கூலிப் படைகளினதும் நடவடிக்கைக்கு தமிழ்பேசும் மக்களும், அப்பாவி உழைக்கும் மக்களும் பலிக்கடாக்கள் ஆக்கப்பட்டார்கள். அரசு, தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணயஉரிமைக் கோரிக்கைக்கு எதிராக கடும்பிடியான யுத்தம், ஆக்கிரமிப்பு, பொருளாதாரத்தடை என பலவழிகளில் தமிழர்களை ஒட்ட ஒடுக்கியது. ......... தொடர்ச்சி பக்கம் 31

உள்ளே உள்ளவை சில ......

சரிநிகர் சந்திரிகாவினது கொள்கைவிளக்கப் பத்திரிகையா ?

கியூபா நெருக்கடியும் அமெரிக்காவின் ஆதிக்க வெறியும்

பொருளாதார அடிக்கட்டுமானம் மீதே மதம், கலை, அரசியல் .. இயங்கும் . இதை ஏகலைவன் மறுப்பது மாக்ஸ்சிசத் திரிப்பே

2ம் உலக மகாயுத்தத்தின் 50 வது வருட கொண்டாட்டங்களின் ஊடாக மறைக்கப்பட்டு வரும் உண்மைகள் (தொடர் கட்டுரை)



பிரபாகரன்

## சந்திரிகா அரசின் வெறி பிடித்த கோர முகங்களின் நிர்வாணம்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகை ஆட்டிப்படைக்கும் காடையனாக பவனி வரும் இன்றைய நிலைகளில், தென்ஆசியாவிலும், இலங்கையிலும் தனது காடைத் தனங்களை நியாயப்படுத்த ஒலிபரப்பு நிலையம் ஒன்றை இலங்கையில் கட்டி வருகின்றனர்.

சிலநூறு ஏக்கர் காணியில் உட்புகமுடியாத இராணுவ அரண்கள் போல அமைந்த இடத்தினுள் கட்டப்படும் இவ் ஒலிபரப்பு நிலையத்தில் அப்படி என்ன நடக்கிறது என்பதே மர்மமாகவுள்ளது.

சிலாபத்தில் இரணவில்லில் கட்டப்பட்டு வரும் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' என்ற இவ் ஒலிபரப்பு நிலையத்தைக் கட்ட, அப்பகுதி வாழ் விவசாயிகள் நிலங்களை அமெரிக்காவுக்கு தாரை வார்த்துக் கொடுத்திருந்தது தரகுமுதலாளித்துவ யூ.என்.பி அரசு. இதற்கு எதிராக அப்பகுதியில் வாழ்ந்து வந்த விவசாயிகள் தன்னிச்சையாக போராடினர்.

இப்போராட்டம் அரசியல் போராட்டமாக மாறிவிடும் எனக்கணித்த 'ரோமன் கத்தோலிக்க திருச்சபை' இப்போராட்டத்துக்குள் மூக்கைநுழைத்து சமரசப் பாதையில் திருப்பிவிட முனைந்து நின்றது. .... தொடர்ச்சி பக்கம் 32

வெளியீடு : தமிழர் அகதிகள் இலக்கிய வட்டம் பதிவு செய்யப்பட்டது -3 /16956

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்களுடன் சமர்

சந்திரிகா ஆட்சி அமைத்ததைத் தொடர்ந்து சந்திரிகா மீது நம்பிக்கையைத் தெரிவிப்பதில் உலக ஏகாதிபத்தியங்கள் முதற் கொண்டு இலங்கை மக்களில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களைத் தவிர, அனைவரும் விழுந்தடித்துக் கொண்டு முண்டுகொடுப்பதில் முனைப்பு பெற்றுள்ளனர்.

இலங்கையிலும், புலம்பெயர்ந்த இலங்கையரிலும் ஒருசில தனிநபர்களும், 2,3 சஞ்சிகைகளையும் தவிர அனைவருமே சந்திரிகா அரசை முற்போக்கென ஏற்றிப் போற்றி நிற்கின்றனர். இந்தியாவில், புரட்சிகர சக்திகளைத் தவிர ஏனைய அனைவரும் ஆகா, ஓகோ என்பதுபோலவே உலகம் முழுவதும் இதே பாணியில் பரிந்துபேசி நிற்கிறது.

"முற்போக்கு" என்றால் என்ன என்ற கேள்விகளை திரும்ப எழுப்பவேண்டிய அளவுக்கு சந்திரிகா அலைகளில் அள்ளுப்பட்டுச் செல்லும் குப்பைகளாக பலர் தம்மை இனம்காட்டி உள்ளனர். முற்போக்கு என்பதை கேவலம் எதிர்க் கட்சியாக மட்டும் இனம்காட்டிய இப் போலிகளின் முகங்கள் கிழிபடத் தொடங்கும் இன்றைய நிலையில், ஒரு உண்மையான முற்போக்கு என்பது இச் சமூக அமைப்பை அப்படியே தூக்கி எறிவதில் உள்ள விருப்பு மட்டுமே என்பதை மீண்டும் சுட்டிக்காட்ட வைத்துள்ளது.

சந்திரிகா அரசாங்கம் -U.N.P அரசுக்கு ஒரு மாற்றீடு மட்டுமேயாகும். அரசை இயக்கிய தரகுமுதலாளிகளின் கைக் கூலிகள் இருந்த அதே இடத்தில் பழைய வாகள் சிலருடன, புதிதாக 225பேர் மாறியுள்ளனர் அவ்வளவே. இன்று தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்கூறும் கைக் கூலிகளும், துரோகிகளுமான PLOT,EPRLF, ENDLF,EROS,TULF,.. ஒருவரை ஒருவர் திட்டி ஆட்சிபிடிக்க முற்படுவதுபோலவே UNPயும், சந்திரிகா முன்னணியும்.

அரசுயந்திரம் எந்தவிதத்திலும் மாறாத அதே அமைப்பில் பொம்மைகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.பழைய பொம்மையின் ஊத்தையும், உடைந்த நிலையிலும் கவர்ச்சியான புதிய பொம்மை வாங்கப்பட்டுள்ளது. இது இவர்களுக்கு கவர்ச்சி காட்டி இன்று இலங்கையின் அரசபீடத்தில் ஏறி உட்கார்ந்துள்ளது. வழமைபோல பொம்மைகளைக் கண்டு மக்கள் மயங்குகின்றனர்.

அதே பொலீஸ், அதே இராணுவம், அதே சிறை, அதே சுரண்டல், அதே பணக்காரன், அதே ஏழை, அதே இனவாதம், அதே அடக்குமுறை...., எல்லாம் அதுவாகவே உள்ளது. அது அதுவாக உள்ள வரை எதுவும் மாறாது. முற்போக்கு என்பது அது அதுவாக உள்ளதை ஏற்பது அல்ல. மாறாக அது அதுவாக இருப்பதை மாற்றி அமைப்பதேயாகும்.

சந்திரிகா அரசால் தமிழ் மக்களின் பிரச்சனைகளை ஒருக்காலுமே தீர்க்கமுடியாது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத எந்த நிலைகளிலும், இன வாதம் என்பது ஒரு தொடர் கதைதான்.சுய நிர்ணயத்தை அங்கீகரித்தல் என்பது சந்திரிக்காவின் தரகுமுதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ அரசில் சாத்தியமே இல்லை. தேர்தல் முடிந்து 2 மாதங்களும், ஜனாதிபதித் தேர்தல் நடந்த இந்நாள் வரைகூட தமிழ் மக்களின் பிரச்சனைக்கான குறைந்த பட்சத் தீர்வையும் வைக்கத் தயாரற்று உள்ளதைக் காணமுடியும்.

தமிழ் மக்கள் மத்தியில் ஒருவிதமாகவும், சிங்கள மக்கள் மத்தியில் வேறோர் விதமாகவும் பொய் வைத்துப்பேசும் சந்திரிகா அரசும் ஏமாற்றும் ஏனைய கட்சிகள் போன்றதே. கடந்த வரலாற்றில் தமிழ் மக்களுக்கு வழங்கிய அற்ப உரிமைகளைக்கூட காலத்துக்குக்காலம் இதே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எதிர்த்து நின்றதும் இன்று அவை பற்றி எந்த விமர்சனமும் இன்றி சந்திரிகா அரசு தீர்வுவைக்கப் போகிறதா?

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையே ஒரு முழுமையான தீர்வாக உள்ள அதே நேரத்தில்கூட, மற்ற எல்லோரும் எதிர்பார்க்கும் அற்ப சலுகையைக்கூட இந்த இனவாத அரசு வழங்கப்போவது இல்லை.

இந்நிலைமையை விடுதலைப் புலிகள் மதிப்பிடத் தவறியது என்பது தமிழ் மக்களின் போராட்டத்தை பின்தள்ள வைத்துள்ளது. இலங்கை அரசு போர் நிறுத்தம் செய்யத் தயாரற்ற நிலையில் புலிகள் மன்னாரில் கடற்படைமீது செய்த தாக்குதல் அரசியல் ராஜதந்திர ரீதியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பாதகமான செயலாகும்.

தமிழ் மக்களுக்கு அற்ப தீர்வைத்தன்னிலும் வழங்கத் தயாரற்ற சந்திரிகா அரசு உலகையும், சொந்த மக்களையும் ஏமாற்ற, இனப்பிரச்சனைக்குத் தீர்வு என ஆரவாரம் செய்யும் இன்றைய நிலையில், அதை அம்பலப்படுத்துவதாக புலிகளின் செயற்பாடுகள் ஒரு சொட்டுமே அமையவில்லை. புலிகளின் தாக்குதல் யுத்தநிறுத்தத்தை அமுல்செய்வதற்கு பதிலாக தமது ஆதரவுகளையே இழக்க வைத்துள்ளது.

சந்திரிகா அரசின் மீதான சர்வதேச ஆதரவு பெருகியுள்ள கட்டத்தில், புலிகளின் தாக்குதல் பயங்கரவாத நடவடிக்கையாகவும், "இனப்பிரச்சனைத் தீர்வில் அக்கறையற்ற புலிகள் " என்ற பிரச்சாரத்திற்கு உலகம் சென்று சந்திரிகா அரசைப் பலப்படுத்த வழிசமைத்துள்ளது.

சந்திரிகாவின் இனவாத அரசு ஒரு தீர்வை முன்வைக்கமுடியாத இன்றைய நிலையைத் தொடர்ந்து பேணவும், இனவாத அலையை தொடர்ந்து ஊக்குவிக்கவும், புலிகள் குழப்புவதாகப் பறைதட்டவும், இனவாதிகள் தமது கதிரைகளை மேலும் பலப்படுத்தவும், இத்தாக்குதல் அமைந்து செல்கிறது. சந்திரிகா அரசு யுத்தப் பிரகடனத்தை எந்தவித எதிர்ப்பும் இன்றிச்செய்ய, இத்தாக்குதலானது இலகுவாக வழிவிட்டுச் சென்றுள்ளது. யுத்தம் தொடங்கினால் அதைப் புலிகள் அம்பலப்படுத்த பெலனில்லாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

புத்திசாலித்தனமான ராஜதந்திரமும், அதனூடாக தமிழ் மக்களின் சுயநிர்ணயமும் தான் தமிழ் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒரே தீர்வாக இருக்கும். இதை அடைய அரசையோ, புலிகளையோ நம்புவதிலும் பார்க்க மக்கள் தமது கைகளில் அதிகாரங்களைப் பெற்றேயாக வேண்டும். அதற்காக போராடவேண்டும்.

## மக்கள் யுத்த அரங்கில்.......

### ☐ சபாடிஸ்டா கெரிலாக்கள் போருக்கு தயாராகின்றார்கள்.

மெக்சிக்கோவின் தென்கிழக்கு மாநிலமான 'சியாபஸ்' இல் இவ்வருட புத்தாண்டு தினத்தில் திடீர் எழுச்சியை நிகழ்த்திய சபாடிஸ்டா தேசிய விடுதலைச்சேனை தனது போராளிகளுக்கு 'உஷார்நிலை' உத்தரவை வழங்கியுள்ளது. தை மாதத்தில் மெக்சிக்கோ அரசாங்கமும் சபாடிஸ்டா தேசிய விடுதலைச் சேனையும் உடன்பாடு செய்து கொண்ட ஒப்பந்தங்களை மெக்சிக்கோ இராணுவம் மீறி வருவதையடுத்தே தமது போராளிகளை தயார்நிலைப்படுத்தியுள்ளதாக விடுதலைச்சேனை பத்திரிகைகளுக்கு அளித்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

மெக்சிக்கோ இராணுவம் விடுதலைச் சேனையின் செய்பாடுகளுள்ள பிரதேசங்களில் பெருமளவு துருப்புக்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குவித்தும், ரோந்துகளை அதிகரித்தும், பழங்குடி மாயா இந்தியன்களது கிராமங்களூடாக தொலைத்தொடர்புகளை ஏற்படுத்தியும், இராணுவ நடவடிக்கைகளுக்கு தயாராகி வருவதாக .தேசிய விடுதலைச் சேனை குற்றம் சாட்டியுள்ளது. "எமது போராளிகள் இராணுவத்தின் தாக்குதலை எதிர்க்க தயாராக உள்ளார்கள். எமது பிர தேசத்தை பாதுகாக்கவும் எமது மக்களுக்கு மோசமான முடிவு ஏற்படுவதைத் தடுக்கவும் அவர்கள் உறுதியுடனுள்ளார்கள்." என சபாடிஸ்டா விடுதலைச்சேனை தெரிவித்துள்ளது.

வறுமையில் உழலுகின்ற, மாயா இந்தியன் விவசாயிகளை பெருமளவு கொண்ட இவ்விடுதலைச்சேனை அம் மக்களின் நிலத்தின் மீதான அதிகாரத்துக்கும் நல் வாழ்வுக்குமாக போராடி வருகின்றது. சியாபாஸ் மாநில அடர்ந்த காடுகளில் நிலைகொண்டுள்ள இச்சேனை ஆயுதபாணிகளாக்கப்பட்ட 2000இற்கும் மேலான கெரிலாப் போராளிகளை கொண் டுள்ளதாக மதிப்பிடப்படுகிறது.

## ☐ இந்திய அரசு மாட்டுச்சாணம் இறக்குமதி செய்வதை எதிர்த்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம்.

இந்திய அரசாங்கம் 2.7 மில்லியன் தொன் மாட்டுச்சாணத்தை நெதர்லாந்தில் இருந்து இறக்குமதி செய்ய முடிவுசெய்திருப்பதை எதிர்த்து இந்திய விவசா யிகள் பாராளுமன்றத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்தனர். சுமார் நூறு விவசாயிகள் மாட்டுவண்டில்களில் சாணத்தை கொண்டுவந்து பாராளுமன்றத்தின் முன் குவித்து, 'பெஸ்டிசைட்' கலந்துள்ளதனால் நெதர்லாந்தில் பாவனைக்குட்படுத்தாமல் இந்தியாவுக்கு கள்ளத்தனமாக விற்றுள்ள சாணத்தை இந்திய ஊழல் அரசு இறக்குமதி செய்வதை எதிர்த்து கோஷமிட்டனர்.

"எமது கால்நடைகள் உற்பத்தி செய்வது எமது நிலத்திற்கு போதும்."
"நெதர்லாந்து சாணத்தைவிட எமது சாணம் நல்லது, 'பெஸ்டிசைட்' இல்லாதது." என கோஷமிட்டனர்.
நகரத்துக்கு வெளியே அவர்களைத் தடுத்து நிறுத்த முயன்ற பொலிஸ் அதிகாரிகள் மீது சாணத்தை வீசி எறிந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## ☐தமிழகத்தில் விவசாய நிலங்களை விழுங்கும் பெருமுதலாளிகளுக்கு எதிராக கூலி விவசாயிகள் போராட்டம்.

திறந்த சந்தைப் பொருளாதாரம், புதிய பொருளாதாரக்கொள்கை என்கின்ற பெயரில் இலங்கை, மற்றும் இந்தியாவில் அந்நியநாடுகளின் சுரண்டலுக்கும், பெருமுதலாளிகளின் கொள்ளைக்கும் கதவுகளை அகலத்திறந்து விட்டுள்ளன. இந் நாடுகளின் தரகுமுதலாளிய அரசுகள். இப்புதிய கொள்கைகளினால் விவசாயத்தையும் வாழ்வையுமிழக்கும் விவசாயிகள் பல இடங்களில் தற்கொலையை நாடிப்போவதை இலங்கையின் அண்மைய நிகழ்வுகள் காட்டுகின்றன.

தமிழகத்தில் வளமுள்ள விவசாய நிலங்களை அபகரித்து இறால் பண்ணைகளை அமைக்க முயற்சிக்கும் பெருமுத லாளிகளுக்கெதிராக அப்பிரதேசங்களின் கூலிவிவசாயிகள் போராட ஆரம்பித் துள்ளனர். கடந்த ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் கிராம சுயாட்சி இயக்கம் என்கின்ற அமைப்பில் திரண்டு இறால் பண்ணைகளின் கட்டுமானப் பணிகளுக் கெதிராக கூலிவிவசாயிகள் போராட்டங்களை நிகழ்த்தி வருகின்றனர். கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் புல்டோசர்கள் முன் பெண்களும் குழந்தைகளும் அமர்ந்து மறியல் செய்து வருகின்றனர். இவ் விவசாயிகள் மீது இறால் பண்ணை முதலாளிகளும், தமிழகஅரசும் அடக்குமுறையை ஏவிவிட்டு வருகிறது. போராட்ட முன்னணியாளர்களாக இருந்த 36 கூலிவிவசாயிகளின் வீடுகளை தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர் பண்ணை முதலாளிகள். தமது வாழ்வுக்கு போராடிவரும் இவ் விவசாயிகள் மீது பொய்வழக்கு, தேடுதல் வேட்டையென அடக்குமுறைகளை ஏவிவிட்டுள்ளது முதலாளிகளின் காவலனான தமிழகஅரசு.

ஆயிரத்திற்கும் அதிகமான விவசாயிகள் திரண்டு இறால் பண்ணைமுதலாளிகளின் கட்டுமானப் பணிகளைத் தடுத்து முடக்கி வருகின்றனர்.

## ☐கழுகின் கால்களில் இன்னுமொரு ஏழை நாடு.

ஐக்கிய அமெரிக்காவுக்கு அண்மையாக அமைந்துள்ள கரீபியன் தீவுநாடான கெயிட்டியில் நிலவுகின்ற அரசியல் ஸ்திரமின்மை, இராணுவசர்வாதிகாரம் என்பவற்றை காரணம் காட்டி, அங்கு ஜனநாயகத்தை நிலைநாட்டப்போவதாக கூறி அந்நாட்டு விவகாரங்களில் ஆழமாகத் தலையிட்டு வந்தது அமெரிக்க அரசு. 1991 இல் தேர்தலில் வென்று ஜனாதிபதி யாக பதவியேற்றிருந்த ஜான். பேர்ட் றாண்ட். அரிஸ்டீட் விரைவிலேயே இராணுவத் தலைமையிலிருந்த செட்ராஸ் குழுவால் அதிகாரம் பறிக்கப்பட்டு அமெரிக்காவுக்கு தப்பியோடினார். அன்றிலிருந்து கெயிட்டியின் ஏழைமக்கள் மீது இராணுவச்சர்வாதிகாரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. அரிஸ்டீட்டின் ஆதரவாளர்கள் கொலைக்குழுக்களால் கொன்றொழிக்கப்பட்டனர். இதுவரை மத குருக்கள் உட்பட 3000 ற்கும் அதிகமானோர் இராணுவச் சர்வாதிகாரிகளின் கொலைக்குழுக்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கெயிட்டி மக்கள் அகதிகளாக அமெரிக்காவுக்கு இடம் பெயர்வதையும், அங்கு நடைபெறுகின்ற படுகொலை களையும் காரணம் காட்டி அரிஸ்டீட்டினை மீண்டும் பதவியில் கொண்டுவந்து ஜனநாயகத்தை நிலைநிறுத்தப் போவதாக கூறிக்கொண்டு அமெரிக்கா இந்நாட்டு விடயங்களில் தலையிட்டு வந்தது. முன்னைய ஜனாதிபதி அரிஸ்டீட் அமெரிக்கா உதவியுடன் மீண்டும் கெயிட்டியில் அதிகாரத்தைப் பெற அமெரிக்காவின் விருந்தாளியானார்.
இப்பின்னணியில் 93ல் ஒரு ஒப்பந்தம் அமெரிக்காவுக்கும் கெயிட்டியின் இராணுவச்சர்வாதிகாரிகளுக்கும் இடையே செய் யப்பட்டது. இது அரிஸ்டீட் மீண்டும் பதவிக்கு வருவதை உத்தரவாதப்படுத்தியபோதும் செட்ராஸ் குழுவினரால் விரை விலேயே அது காற்றில் விடப்பட்டது. ஐக்கிய நாடுகளின்பெயரில் கெயிட்டிமீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்ட போதும் அந்நாட்டு மக்களையே அது மோசமாக பாதித்ததேயொழிய இராணுவச் சர்வாதிகாரிகள் அதனாலேற்படும் நெருக்குதல்களை சமாளித்து வந்தனர்.

இந்நிலைமைகளில் இராணுவத் தலையீடு ஒன்றின் மூலமாக இராணுவச் சர்வாதிகாரிகளை விரட்டிவிட்டு மீண்டும் ஜனநாயகத்தையும், அரிஸ்டீட்டினையும் மீளக் கொண்டுவரப்போவதாக கூறிய அமெரிக்கா செப்ரெம்பர் நடுப்பகுதியில் 20,000 அதிரடிப்படைகளையும் 20 பாரிய யுத்தக்கப்பல்களையும், நூற்றுக்கணக்கான விமானங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யும் கொண்டுவந்து நிறுத்தியது. தாக்குதல் ஆரம்பிக்கப்போவதாக் கூறி, 67 விமானங்களில் பரா துருப்பினர் தாக்குதலுக்கு தயாராக வான் வெளியில் வட்டமிட அமெரிக்க அரசு இறுதிக்கணங்களில் கெயிட்டியின் இராணுவ சர்வாதிகாரிகளுடன் சந்தேகத்திற்குரிய ஒப்பந்தமொன்றைச் செய்து முடித்துள்ளது. இவ் ஒப்பந்தம் தொடர்பாக அரசியல் அவதானிகளும், கெயிட்டி மக்களின் பிரதிநிதிகளும் அதிருப்தியும் சந்தேகமும் தெரிவித்துள்ளனர்.

அரிஸ்டீட்டினை முதன்மைப்படுத்தி இவ்விடயத்தில் தலையிட்டுவந்த அமெரிக்க அரசு இவ் ஒப்பந்தம் தொடர்பாக அரிஸ்டீட் உடன் எவ்வகையிலும் கலந்தாலோசிக்கவில்லை. கெயிட்டி விடயம் தொடர்பான ஐக்கியநாடுகள் குழுவின் தலைமைப் பிரதிநிதியுடன் இவ்வொப்பந்தம் தொடர்பாக கலந்தாலோசிக்காததுடன் இவ்வொப்பந்தம் எட்டியது பற்றிக்கூட அவருக்கு அறியத்தரப்படாததையும் ஆட்சேபித்து அவர் உடனடியாகத் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

அண்மைக்காலங்களில் இராணுவச் சர்வாதிகாரிகளை கொலைகாரர்களாக வர்ணித்து வந்த அமெரிக்கஅரசு, தற்போது அவர்கள் அனைவருக்கும், கெயிட்டி மக்கள்மீது மிலேசத்தனமான படுகொலைகளை நிகழ்த்திய கொலைக்குழுக்களுக்கும் பொதுமன்னிப்பு வழங்கும் திட்டத்தை கெயிட்டி பாராளுமன்றத்தில் கொண்டுவர ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இராணுவச் சர்வாதிகாரிகள் நாட்டைவிட்டு தாங்களாக வெளியேறாவிட்டால் தாம் வெளியேற்றுவோம் என முழங்கியவர்கள் இவ்வொப்பந்தத்தில் அதுபற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

கெயிட்டியில் ஜனநாயகத்தையும் நீதியையும் நிலைநாட்டப் போவதாக கூறி அந்நாட்டு விடயங்களில் தலையிட்ட அமெரிக்க அரசு அவ்விடயங்களைக் கோள்விக்குறிகளாகவே விட்டுவிட்டு தனது நலன்களுக்கேற்ற வகையில் ஒப்பந்தத்தை செய்துமுடித்திருப்பதையே அண்மைய கெயிட்டியின் நிகழ்வுகள் காட்டுகின்றன. ஜனநாயகம் என்கின்ற பெயரில் அமெரிக்கா ஏழைநாடுகளின் விடயங்களில் தலையிடுவது உண்மையாக அம்மக்களது நலன்மீதான அக்கறையிலோ அவர்கள் பீற்றிக்கொள்வது போல ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்காகவோ அல்ல. தமது நாட்டினது நலன்களுக்காக, தமது பொருளாதார அமைப்பு நலன்களுக்காக ஏழைநாடுகளை அடிமைகளாகவும் தமது கைப்பொம்மைகளாகவும் ஆட்டிவிப்பதற்கே என்பதை கெயிட்டி நாட்டின்மீதான அதனது அணுகுமுறை மீண்டும் ஒரு முறை உலகிற்கு உணர்த்தி நிற்கின்றது.

ஏகாதிபத்திய பொருளாதார நலன்களும், மூன்றாம் உலக ஏழைநாட்டு மக்களின் நலன்களும் ஒன்றுக்கொன்று நேர்ரெதிர் முரணானவை. இவ் ஒடுக்கப்படும் மக்கள் தமது நெருக்கடிகள், ஒடுக்குமுறைகளை ஏகாதிபத்தியங்கள் உதவியுடன் தீர்க்க முடியுமென்று நம்பினால் அது அவர்களை மேலும் மோசமான சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் இட்டுச் செல்ல வழிவகுக்கும் என்பதையே உலகநிகழ்வுகள் உணர்த்தி வருகின்றன. ஒடுக்கப்படும் மக்கள் தமது பிரச்சனைகளைத் தீர்க்க நீண்டதும், கடினமானதுமாக இருப்பினும் தீர்வுக்கான போராட்டங்களை தமது கரங்களில் எடுத்துக் கொள்வதே அவர்களுக்கு விடுதலையளிக்கும்.

□ஆண் உறுப்பை வெட்டிய பொலீஸ்.

இளம் பெண் கடத்தல் தொடர்பாக ஜுக்தர்ராம் என்பவரை விசாரணைக்கு அழைத்துச் சென்ற இராசஸ்தான் மாநில பொலீஸ், அவரது ஆண் குறியைக் கூரிய பிளேட்டால் அறுத்தெறிந்துள்ளது. பொலீஸின் முதல் தகவல் அறிக்கையில் கூட இவரது பெயர் குறிப்பிடப்படவில்லை. இதனால் கொதித்துப் போன ஜெய்பூர் பர்மர் பகுதி மக்கள் "காட்டுமிராண்டிகளைக் கைது செய்ய"க் கோரி ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். இதன் பின் மாநில அரசு ஐந்து பொலீஸ்காரர்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய்வதற்கான உத்தரவினை மட்டும் இப்பொழுது இட்டுள்ளது.

□பாக்கிஸ்தானில் பெண்கள் மீது வன்முறை.

பாக்கிஸ்தானில் 70 சதவீத பெண் கைதிகள் பொலீசாரின் பாலியல் வன்முறைக்குப் பலியாகின்றனர். ஆனால் எந்தப் பொலீசாரும் இதற்காகத் தண்டிக்கப்பட்டது கிடையாது. சாட்சியங்கள் பலமாகவுள்ள கற்பழிப்பு வழக்குகளிலும் இதுதான் நிலை. 80 சதவீத பெண் கைதிகள் கல்வியறிவு அற்றவர்கள். 90 சதவீதம் பேருக்கு தாங்கள் எந்தச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளோம் என்பதே தெரியாது. விபச்சார வழக்குகளில் தரகர்கள் கைது செய்யப்படுவது அரிது. 50 முதல் 80 சதவீத பெண்கள் "ஹுதூத்" என்னும் இஸ்லாமிய சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இச்சட்டத்தின்படி ஓர் ஆணைத் தண்டிக்க நான்கு ஆண்கள் சாட்சி சொல்ல வேண்டும். பெண் என்றால் சந்தேகத்திற்கு இடமானவள் என்ற தோற்றமே போதுமானது!

□மதமென்ற பெயராலும் பெண் ஒடுக்குமுறை.

கல்கத்தாவில் நடந்த ஒரு மத விழாவில் கலந்து கொண்ட பூரி சங்கராச்சாரியார், அங்கு பெண்கள் வேதம் ஓதத் தொடங்கியதைக் கண்டு ஆத்திரமுற்று, "இது தனக்கும் மதத்திற்கும் செய்யும் அவமரியாதையென்றும், தான் உயிரோடு இருக்கும் வரை பெண்கள் வேதங்கள் ஓதுவதை அனுமதிக்க முடியாது"என்றும் எச்சரித்துள்ளார். மறுநாளே இதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திய முற்போக்கு மகளிர் அமைப்பினரை "அந்த முட்டாள்களைத் துரத்தியடியுங்கள்" என அடியாட்களை அனுப்பியுள்ளார். தற்பொழுது நாலாபுறமும் இருந்து எதிர்ப்புக் கிளம்பவே "எனது சடங்குகளை முடித்த பின் வேதங்களை ஓதுங்கள் என்று சொன்னதாகவும், பத்திரிகைகள் தான் பெரிதுபடுத்திவிட்டதாகவும்" புலம்பியுள்ளது இம்மதப் பண்டாரம்!

□கட்டை விரலை வெட்டும் துரோணர்கள்.

"டெல்கியில் இயங்கிவரும் அனைத்திந்திய விஞ்ஞான கழகத்தின் பட்ட மேற்படிப்பு வகுப்புக்களுக்கு நடந்த நுழைவுத் தேர்வில் தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு கிடையாது. 'தகுதி' அடிப்படையில் தன் மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும்" என மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இதைக் காரணம் காட்டி அதிகாரிகள் மேல் சாதி மாணவர்களை விட அதிக மதிப்பெண்கள் பெற்ற தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் இடம் கிடையாதென மறுத்துள்ளனர். இதை எதிர்த்து அக்கழகத்தின் மாணவர் தலைவர் தனது பதவியிலிருந்து விலகிவிட்டார். பலரும் இதை 'மகா பாரதத்தில் திறமையான ஏகலைவனின் கட்டைவிரலைப் பிடுங்கியதுடன்" ஒப்பிட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அம்பலப்படுத்தியுள்ளனர். ஆனாலும் மத்திய அரசு அசைந்து கொடுக்கவில்லை.இதுதான் காங்கிரசின் 'சமூக நீதி!

□இந்தியாவில் குழந்தைகள் மீதன பலாத்காரம்.

இந்து சமயமே புனிதமானது, உன்னதமானது, என போற்றிப் புகழ்ந்த படி ஆணாதிக்க வக்கிரகங்களுடன் கூடிய சமூக அமைப்பான இந்தியா இப்பொழுது நாற்றமெடுக்கும் அளவுக்கு புழுத்து நாறுகிறது.

பெண் குழந்தைகளுடன் ஒட்டிய ஆய்வென்றை எடுத்து நோக்கும் பொழுது, அதிர்ச்சியாகவும், வெட்கக் கேடாகவுமே உள்ளது. பெண்கள் மீதான வெட்கக்கேடுகளை வெளியே சொல்ல முடியாத சமூக அமைப்பைக் கொண்டிருக்கும் இந்தியாவில், அந்த அமைப்புள்ளாகவே வெளிவந்த புள்ளி விபரமே இப்படி என்றால்! உண்மைகள் எப்படியோ? இப் புள்ளி விபரம் நகரத்தில் எடுக்கப்பட்டது என்றால் கிராமப்புறங்களையும் எடுத்து நோக்கினால் சொல்லவா வேண்டும்?

20 பெண் குழந்தைகளில் 3 பேர் கற்பழிப்பு உட்பட பலவகையான பாலியற் பலாத்காரத்திற்கு உட்படுத்தப் பட்டவர்கள். (ஆதாரம: 'இந்தியா ருடே' யூலை21-94.) இதில் ஒரு பங்கினர் 10 வயதிற்கு உட்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. 10 பெண்களில் 5 பேர் குழந்தைகளாக உள்ளபோது பலாத்காரப் படுத்தப்பட முயலப்பட்டவர்கள். 10 பேரில் 8 பேருக்கு மிகச் சிறு வயதிலேயே மார்பகங்களைக் கசக்குவது, பின் பக்கத்தைக் கிள்ளுவது போன்ற பலாத்காரங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இச் சம்பவங்களில் 50 சதவீதமானவை அப்பாக்கள், சகோதரர்கள், மாமாக்கள், மற்றும் நெருங்கிய உறவினர்களால் நிகழ்த்தப்படுகிறது. பெண்களை பூசை அறைக்குள் முடக்கி, மொத்த உழைப்பையும் உறிஞ்சி, பிள்ளைப் பெறும் யந்திரமாகச் சிதைத்து, ஆண்களின் காம வெறியைத் தீர்க்கும் இச்சைப்பொருளாக்கியுள்ள இவ் ஆணாதிக்க சமூகம் நொருக்கப்பட வேண்டும். சிறு பெண்களைக் கூட விட்டுவைக்கத் தயாரற்ற இவ் ஆணாதிக்க சமூகம் தேவைதானா?-சிந்தியுங்கள்.

□இலங்கையில் 4000 பெண் 'சிசுக்கள்' படுகொலை!

கொள்கைரீதியில் நாம் கடந்த காலங்களில் கூறியவைகளை ஏற்றுக் கொள்ள மறுக்கும் பலருக்குள்: உண்மையைத் தேடுபவர்களுக்கு நடைமுறைகளும், விளைவுகளும், நல்ல படிப்பினைகளைக் கொடுக்கும்.

இலங்கையில் கடந்த நாலு வருடங்களில், கருவில் உள்ளது 'பெண்சிசு' எனத் தெரிந்தமையால் 4000 'சிசுக்கள்' கொல்லப்பட்டுள்ளது. (ஆதாரம்: 'வீரகேசரி 28.8.94.) இப்புள்ளி விபரங்கள் சட்டபூர்வமான வழிகளில் கிடைத்தவை என்றால், சட்டவிரோதமாகவும், வேறு பல காரணங்களுக்காகவும் எத்தனை 'சிசுக் கொலைகளோ'?! அம்மாடீயோ!!

பெண் விடுதலை அடைய வேண்டுமெனில் பெண்சிசுக்கள் பிறக்கக்கூடாது என்றும், அதற்கு கருக்கொலை செய்ய பெண்ணுக்கு உரிமை வேண்டும் என்றும், அதை நியாயப்படுத்த "உடல் சுதந்திரம்" வேண்டுமென்றும், 'பெண்நிலைக்கு' வாயுபச்சாரம் செய்வது மற்றுமொரு மோசடியே!

'பெண்சிசு'வை அழிப்பது, பெண் விடுதலை எனில்: அதற்கு சுதந்திரம் வேண்டுமெனில், இப் "பெண்நிலைவாதிகள்" யார்? என்று சொல்லாமல் புரியும். இவர்கள் இவ் ஆணாதிக்க சமூகத்தைத் தக்க வைக்கும் வேசதாரக் குள்ளநரிகளே!

இந்த வகையில் மனிதம், சரிநிகர், சக்தி, அஆஇ, கனடா 'தேடல்' ..... எனப் பல சஞ்சிகைகளில் பல எழுத்தாளர்கள் எழுதினர். அவர்கள் தம் கண்களை தாமே குத்திக் கொள்கின்றனர்.

சீனாவில் வருடம் பத்து லட்சம் பெண் குழந்தைகள் கருவிலும், பிறந்தவுடனும், கொல்லப்படுகின்றனர். சீனாவில் குடும்பத்திற்கு ஒரு பெண்குழந்தை வீதம் கொல்லப்படுகின்றனர். (ஆதாரம்: 'வீரகேசரி 13.2.94.) சீனாவில் இப்படி என்றால், இந்தியாவில் இதை விட அதிகமாகவே இருக்குமே ஒழிய குறைந்ததாக ஒருபோதுமே இருக்காது.

'பிரிட்டீஸ்ஸார்', ஆசிய இனத்தவர்களுக்கு என்ன குழந்தை எனக் கூற மறுக்கும் அளவிற்கு 'டாக்டர்கள்' சென்றுள்ளனர் எனில், யோசித்துப் பாருங்கள்.

இலங்கையில் 4000 கருக் கொலை நடக்கக் காரணமாகவுள்ள "அம்னியோ சென்தெசிஸ்" என்ற விஞ்ஞானம், ஆக்கத்துக்காக அல்ல அழிவுக்காகவே பயன்படுத்தப்படுகிறது என்ற விசயம் வெட்கப்படக் கூடியதாகவே உள்ளதே ஒழிய பெருமைப்படக்கூடிய விசயமேயல்ல.

□மனிதக் கறி தின்னும் இராணுவம்.

போராளிகளையும் கம்யூனிசப் புரட்சியாளர்களையும் பிற்போக்கு ஆட்சியாளர்கள் நர வேட்டையாடி வருவதொன்றும் புதிதானதல்ல. ஆனால் கம்போடிய 'ஜனநாயக' அரசின் இராணுவமோ புரட்சியாளர்களின் வயிற்றைக் கிழித்து குடலையும் கல்லீரலில் சுரக்கும் அமிலத்தையும் வறுத்துத் தின்பதை வாடிக்கையாக்கிக் கொண்டுள்ளது. இக் காட்டு மிராண்டித்தனத்தை விசாரித்து வரும் ஐ.நா. "இராணுவத்தில் இதற்காகவே 'S-91' என்று பிரிவு இயங்கி வருவதாகவும், அப் பிரிவு கடந்த ஒரு வருடத்திற்குள் மட்டும் 35 போராளிகளை விசாரணை இன்றிக் கொன்றொழித்துள்ளதாகவும்" குற்றம் சாட்டியுள்ளது.

□ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல!

கடந்த 93ல் மட்டும் இந்தியாவில் நுளைந்துள்ள பன்னாட்டு நிறுவனங்களின் மூலதனத்தின் மதிப்பு 8860 கோடி ரூபாய்கள். 1478 அந்நிய நிறுவனங்கள் சென்ற ஆண்டில் இந்திய தொழில் அதிபர்களுடன் கூட்டுச் சேர மைய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 273 அமெரிக்க தொழில் நிறுவனங்களும் இவற்றுள் அடங்கும். இது தவிர தொழில் நுட்பக் கூட்டு என்ற பெயரில் 140 அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியத் தொழில் துறையில் கூட்டு ஒப்பந்தமிட்டுள்ளன.

#-நன்றி புதிய ஜனநாயகம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ☹ தவறுக்கு மனம் வருந்துகின்றோம்.

☐ "ருவாண்டா நாட்டை தனது அடிமை நாடாக தக்கவைக்கும் முயற்சியில் பிரஞ்சு ஏகாதிபத்தியம்" என்ற தலைப்பில் 'சமர்'-12 இல் வெளிவிடப்பட்ட எமது கட்டுரையானது, கோட்பாட்டுத் தவறுகளை தாங்கியே வெளிவந்திருந்தது.
ருவாண்டாவில் போராடிய 'ருவாண்டா தேசபத்த முன்னணி (R.P.F)' பற்றிய எமது மதிப்பீடானது தவறாக அமைந்து விட்டது. R.P.F ஆனது ஏகாதிபத்திய எதிர்ப்பில் தேசிய முதலாளித்துவத்தை பிரதிபலிப்பதாக நாம் மதிப்பிட்டது தவறு. R.P.F ஏற்கனவே சில ஏகாதிபத்திய தொடர்புகளைக் கொண்டிருந்ததாகத் தெரிய வந்துள்ளது.

☐ 'சமர்' 12இல் பக்கம் 20 மீண்டும் 21 ம் பக்கத்தில் தவறாக அச்சாகி இருந்தது.

☐ "ஐரோப்பிய பாராளுமன்றத் தீர்மானமும் மாற்றுமொழிக் கட்டுரைகளும்" என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் ........ தமிழீழப் போராட்டம் பிழையானதென்றும் ஏகாதிபத்திய தயவுக்காக நியாயப்படுத்தப் படுகிறது. என்பதை திருத்தி தமிழீழப் போராட்டம் பிழையாகத்தன்னும் ஏகாதிபத்திய தயவுக்காக... என வாசிக்கவும்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# சரிநிகர் சந்திரிகாவினது கொள்கை விளக்கப் பத்திரிகையா?

கடந்த காலங்களில் 'சரிநிகர்' இன் மீது ஒரு சில விமர்சனங்களை வைத்தோம். ஆனால் இன்று சரிநிகர் சந்திரிகாவின் கொள்கை விளக்கப் பத்திரிகையா? என்ற கேள்விகளைக் கேட்குமளவுக்கு சரிநிகர் தன்னை மாற்றிக் கொண்டுள்ளது.

இன்று சரிநிகர் இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பரந்த அளவில் விநியோகமாகி வரும் ஒரு பத்திரிகை. இலங்கை அரசினதும், மற்றும் அராஜக இயக்கங்களின் போலி ஜனநாயகத்தின் மீதும் வெறுப்புற்ற நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் வெளிவந்த காலத்தில், அவர்களின் புதிய தேடல்கள் ஊடாக 'சரிநிகர்' தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முனைந்தது.

இவ் வரலாற்றுக் காலகட்டத்தில் சரிநிகர் தன்னை 'முற்போக்கு' என இனம் காட்டியபடி புதியதைத் தேடுபவர்கள் மத்தியில் கால்ஊன்ற நினைத்தது. ஆனால் உண்மையில் சரிநிகரின் ஆசிரியர் தலையங்கங்கள் முதல் பல எழுத்தாளர்களின் செய்திகள் வரை(90 வீகிதம்) இன்றைய தரகு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பைத் தக்கவைப்பதில் தலையெடுக்க நினைக்கின்றனர்.

சரிநிகர் ஆசிரியர் குழுவில் உள்ளோர் எமது சிறந்த நண்பர்களாகவும், சிலர் முன்னர் எமது தத்துவ வழி காட்டியாக இருந்தபோதும், காலத்தால் அவர்கள் சூழ்நிலைகளுக்கு இழுபட்டு, மக்களின் பின்னால் வால்பிடித்துச் செல்லும் நிலையில் நாம் ஒரு விமர்சனத்தைச் செய்ய நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம்.

சரிநிகரில் இடைக் காலத்தில் வந்து போன பிரதான ஆசிரியரின்


சந்திரிக்கா

கருத்துக்கள் அல்ல சரிநிகர் என்ற எமது நிலையிலிருந்தே விமர்சனத்தை வைக்கிறோம். பிரதான ஆசிரியரின் கருத்துக்கள் தான் 'சரிநிகர்' எனின் அதன் விமர்சனம் வேறுபல விடயங்களையும்(கடந்த காலங்கள்) உள்ளடக்கியதாகவே இருக்க வேண்டும்.

☐எமது விமர்சனம் இரண்டு நோக்கிலானது.

1. சரிநிகர் ஆசிரியருக்கு தன்னை மீள் பரிசீலனை செய்ய உதவுவது. சரிநிகர்

தொடர்பாக நேரடி விமாசனங்களை நாம் பல முறை செய்த போதும், அவர்கள் பதில் தரவில்லை. அதைப் பத்திரிகையில் பிரசுரிக்கவும் தயாராக இருக்கவில்லை.
2. சரிநிகர் பற்றிய மாயையை முற்போக்கு சக்திகள் மத்தியில் அம்பலப் படுத்துதல். எமது பத்திரிகை பரந்த அளவில் செல்லாவிட்டாலும் கூட குறைந்த அளவு இதற்காக முனைகின்றோம்.

எமது விமர்சனங்களை ஒட்டி, அல்லது வேறு பலரின் விமர்சனங்களுக்கு 'சரிநிகர்' தாம் ஒரு "கட்சிப் பத்திரிகை"அல்ல எனக் கூறி, இக் கூற்றின் மூலம் தமது சந்தர்ப்பவாத அரசியலை நியாயப் படுத்துகின்றனர். மக்களின் இன்றைய அரசியல் நிலைகளின் மீது வால்பிடித்துச் செல்ல முனையும் இவர்கள் ஒருபோதும் வழிகாட்டியாக இருக்கத் தயாராக இல்லை.

ஒரு 'கட்சிப் பத்திரிகைக்கு' மட்டுமே சமூகத்தின்மீது விமர்சனம் செய்ய உரிமை உண்டு என்ற விவாதம், மறு தலையாக தாம் இச்சமூக அமைப்பை நிலை நிறுத்துவதில் போய் முடிகிறது. இதை சரிநிகர் கட்டுரையில் தெளிவாகக்காணமுடியும். தமது சந்தர்பவாத நிலைக்கு முரணாக, மாற்றுக் கருத்துக்களிடம் சமூகத்தின் வழி காட்டியாக இருக்கக் கோருவது வேடிக்கையாகவே உள்ளது. உ+ம் : சிங்களப் பத்திரிகைகள் மக்களின் இனவாதத்தின் பினனால் வால்பிடித்துச் செல்வதுடன் முரண்படும் சரிநிகர், தாம் மக்களின் உணர்வுடன் வால்பிடித்துச் செல்வதை என்னவென்று சொல்லப் போகிறார்கள்?

சிங்கள இனவாதப் பத்திரிகைகள் மக்களின் பின் வால்பிடித்துச் செல்லும் நிலையில், இனவாதத்தினை வளர்த்தும் செல்கின்றன. சரிநிகரோ! மக்களின் பின் வால்பிடித்துச் செல்வதுடன், இச்சமூக அமைப்பை பாதுகாப்பதற்கு 'கைப்பந்தம்' பிடித்துச் செல்கின்றது.

சந்திரிகாவின் கூட்டு அரசாங்கம் வெற்றி பெற்றவுடன் அதை முற்போக்காக அங்கீகரிப்பதில், ஆசிரியர் தலையங்கம் முதல் அனைத்து கட்டுரைகளும் சந்திரிகா அரசின் மீது ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுகின்றன.

U.N.P, S.L.F.P இரண்டிலும் முதலாவது இரண்டாவது எதிரியை ஐந்து வருடங்களுக்கு ஒருக்கால் வாக்கு அளிக்கும் மக்கள் போல் சரிநிகரும் செய்ய முனைவது ஏன்? சந்திரிக்கா வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பவர், போன்ற கருத்துக்களை சரிநிகர் வாசகர் களுக்கு ஏற்படுத்தியும், மக்களின் உணர்வு அலைகளின் பின் வால் பிடித்து செல்ல நினைப்பதும் ஏன்? உண்மைகளை மறைக்கும், மக்களை ஏமாற்றும், கைங்கரியங்களில் ஈடுபடும் சரிநிகர் இச்சமூக அமைப்பின் இருப்பின் மீது தீராத காதல் கொண்டு உள்ளனர்.

சரிநிகர் 51 இல் "புதிய சந்திரிகையும் வால் வெள்ளியும்" என்ற தலைப்பில் எழுதும் ஆசிரியர் தலையங்கம் "மன்னனுக்குப் பதில் மகாராணி வந்தாலும் நிலமை ஒன்றுதான், என்பது சொல்லாமல் தெரிவதே.........ஐ.தே.க யின் 17 வருட கொடுங்கோல் ஆட்சிக்குப் பிற்பாடு ஒரு நம்பிக்கை சந்திரிக்கையாக.......இந்த நம்பிக்கை தமிழ் அரசியலாளர்கள் பலரையும் விட்டு வைக்கவில்லை(சரிநிகரையும் பின்னர் இது விட்டு வைக்கவில்லை.-இது நாம்)............. யுத்த நிறுத்தம், இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வு, மக்களுக்கு சுதந்திரமும் ஜனநாயகமும், என்ற கவர்ச்சியான கோசங்களை பொ.ஐ.முன்னணியில் முன்வைக்கப் படுகிறது........ 'முற்போக்கு வாதிகள்' எனப்பலரை முன்னணிக்கு கொண்டு வரப்போவதாக சொல்கிற பொ.ஐ.முன்னணியின் அடித்தளம் இன்னும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பதை தமிழ், முஸ்லீம் மக்கள் மறந்து விடக்கூடாது. (பின்னால், சரிநிகரும் இதை மறந்துபோனது.-இது நாம்.)..............." எனப்பல விளக்கத்துடன் ஆசிரியர் தலையங்கம் தொடர்கின்றது.

சரிநிகர் 54 இல்: "புதிய ஆட்சி" என்ற தலைப்பில் எழுதும் ஆசிரியர் தலையங்கம்– 51ம் சரிநிகருக்கு நேரெதிராகவே உள்ளது. அதைப் பார்ப்போம்: "புதிய ஆட்சி அமைக்கப் பட்டதோடு எல்லாத் திசைகளில் இருந்தும் நம்பிக்கையின் குரல் ஒலிகளைக் கேட்கக்கூடியதாக இருக்கின்றது(உங்களுக்கும் இது கேட்கின்றதா?–இது நாம்.)......... அரசியல் அமைப்பு மற்றும் அரசியல் வரலாற்றை ஆய்வு செய்து வருகின்ற, புகழ் பெற்ற பேராசிரியர் ஏ.ஜே.வில்சன் அவர்கள் கூட 'நம்பிக்கையின் ஒரு கிரணம்' தென்படுவதாக எழுதுகின்றார். (அவர் மட்டுமா? சரிநிகரும்தானே!–இதுநாம்)...................

சந்திரிக்கா குமாரணதுங்கா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிற்பாடு நாட்டு மக்களுக்கு வழங்கிய பொறுப்பு மிக்க உரையை இதுவரை கால ஆட்சித் தலைவர்கள் எவருமே தந்திருக்கவில்லை. (அப்படியென்றால், தமிழ் பேசும் மக்களே, சந்திரிகாவைப் பலப்படுத்துங்கள்! இப்படியா சொல்ல நினைக்கின்றீர்கள்? சரிநிகர் அவர்களே, சபாஷ்!!–இது நாம்.) 'மனிதத்துவம்', 'உண்மையான ஜனநாயகம்', 'சமாதானம்', தமிழ் மக்களுக்கு ஒரு 'நேசக்கரம்' (இவைகளை எல்லாம் இச்சமூக அமைப்புக்குள் பெற்றுவிடலாம் என நம்பி, சரிநிகரும் 'லொள்ளு'விடுவது ஏன்?–இது நாம்) என்ற முக்கியமான அம்சங்களைப் பிரதமர் தனது உரையினதும், ஆட்சியினதும் அத்திவாரமாக கொண்டுள்ளார் என்ற மனப்பதிவை அவர் எமக்குத் தந்துள்ளார்". (சரிநிகரும் இவரை நம்பி கொள்கை விளக்கம் செய்ய நினைப்பது விசனத் துக்குரியது.–இது நாம்.)

தொடர்ந்து அவர்களுக்கு ஆலோசனை வழங்கும் சரிநிகர்: "நீர்மேல் எழுத்துக்களாகிய நான்கு சகாப்த வரலாறு எங்களுக்குப் பின்னால் உள்ளது. அதுவும் குறிப்பாக 1970ல் ஆட்சிக்கு வந்த சுதந்திரக் கட்சி ஐ.முன்னணி அரசாங்கம் அரசயந்திரத்தின் பல்லிலும், சில்லிலும் தமது கட்சியைச் சார்ந்தவர்களை மட்டுமே பொருத்தி ஒருபக்கச் சார்பாக மாற்றியது ஒன்றும் ரகசியமானதல்ல. இது என்ன விளைவுகளை ஏற்படுத்தியது என்பதை இன்றய பொ.ஐ.முன்னணி அரசு உணர்ந்தாக வேண்டும்"(அடிக்கோடு நாம்.) எனக் கூறுவதன் மூலம் இச் சமூக அமைப்பில் தீர்வைக் கண்டுவிட முடியும் என்கின்றனர். 1970களில் அவ் அரசாங்கம் சீரழியக் காரணம் பல்லிலும், சில்லிலும் சுதந்திரக் கட்சி அங்கத்தினரை நியமித்ததே என்கின்கின்றனர். இவ்வாறு போலி இடதுசாரிகளை இணைத்திருப்பின் உன்னதமான எல்லா மக்களின் அரசு உருவாகி இருக்கும் என்கின்றனர். ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களை இணைத்ததின் மூலம் ஒரு பக்கச் சார்பாகி எல்லா மக்களின் அரசு உருவாக முடியாது போய் விட்டதாம்! இதைக் கண்டுபிடித்த சரிநிகரை நினைத்து சிரிப்பதா? அழுவதா?

இன்று பொ.ஐ.முன்னணிக்கு சரிநிகர் வழங்கும் ஆலோசனை பல்லிலும், சில்லிலும் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்களை இணைப்பது என்பது தான்.(சிலவேளை சரிநிகர் ஆசிரியர்கள், எழுத்தாளர்களையும் உள்ளிட்டோ?) இதன் மூலம் மேற்கூறிய "மனிதத்துவம்", "உண்மையான ஜனநாயகம்", "சமாதானம்" "தமிழ் மக்களுக்கு ஒரு நேசக்கரம்" அடைந்து விட முடியுமென சரிநிகர் சாதிக்க முனைகிறது. மேற்கூறியவை மக்களிடம் இருந்து பிரிட்டீஸ் ஆட்சியின் தொடர்ச்சியாக பொ.ஐ. முன்னணி பெற்றுக் கொண்டவையே ஒழிய 70 களில் தமது கட்சியை அரசயந்திரத்தின் பல்லிலும், சில்லிலும் இணைத்ததாலல்ல. காலம் காலமாகத் தொடரும் இச் சமூக அமைப்பை மாற்றுவதே இதைப் பெறுவதற்கான ஒரே தீர்வாகும்.

தொடர்ந்து 70 முதலே ஐ.தே.க இதை குத்தகைக்கு எடுத்ததாகக் காட்டுவதன் மூலம் சுதந்திரக் கட்சியின் ஐக்கிய முன்னணியை பல்லிலும், சில்லிலும் இணைத்ததையே இதன் மூலம் (அடிப்படை) என்கின்றனர். இதனூடாக 1970 ஆட்சியின் ஆரம்ப காலம் பொற் காலமெனவும் அது மீண்டும் வந்துள்ளது என்கின்றனர். பல்லிலும், சில்லிலும் எல்லோரையும் இணைக்க வேண்டும் என்கின்றனர். வாழ்க சரிநிகர்! வாழ்க சரிநிகரின் முற்போக்குப் போலித்தனம்!!

இதை செழிமைப்படுத்த தொடரும் சரிநிகர் "புதிய பிரதமரும் அவரைச் சூழ உள்ள புதிய சிந்தனையாளர்களும், வாசு தேவ நாணயக்கார, இத்திக குணவர்தன, பேர்னாட் சொய்ஸா, வை.பீ.டி சில்வா, கே.பி.சில்வா போன்ற இடதுசாரிகளும் புதிய ஆட்சியின் சமாதான நோக்கிற்கு பலம் சேர்ப்பவர்களாகக் கருதப்படுகின்றார்கள்". என்று எழுதும் சரிநிகர் ஆசிரியர்கள் தங்களையும் சேர்த்தே கூறுகின்றனர். இந்த இடதுசாரிகள் உண்மையில் இடதுசாரிகளா? என்பதை சரிநிகரிடமே விட்டுவிட்டு, இந்த இடதுசாரிகளின் பின் சரிநிகர் உட்பட அதன் வாசகர்களையும், மக்களையும், அணிதிரளக் கோருவது ஒரு மோசடியே!

இப்புதிய அரசாங்கம் முற்போக்கானது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ற முழக்கத்துடன் சரிநிகர் தனது போலித்தனத்தை தோல் உரித்துக் காட்டு கின்றனர். இது இச் சமூக அமைப்புக்குள் இதை மாற்றிவிடும் வல்லமையுள்ள "பலம் சேர்ப்பவர்களை" இனம் காட்டி சரிநிகர் துணைபோக நினைப்பது ஏன்?

தொடரும் ஆசிரியர் தலையங்கம் இரண்டு வாரகளில் பின்வருவனவற்றை செய்ய வேண்டும் என்கின்றனர்.

☐ பொருளாதாரத் தடைநீக்கம்.

☐ கொழும்பிலாவது(!) தமிழ் மொழிக்கு உரிய இடத்தை வழங்குவது.

"புதிய ஆட்சியின் 'புதிய' சிந்தனையாளர் இதுபற்றி உணர்திறனுடன் இருப்பார்கள் என்று நம்புவோம். இந்த நம்பிக்கை எங்களைப் பொறுத்த வரை மிகுந்த விழிப்புடன் கூடிய ஒரு நம்பிக்கையாகும்".- என்கின்றனர் சரிநிகர் ஆசிரியர் குழு. சந்திரிகாவிடம் கேட்டுக் கொண்டது போல் சிவற்றைச் செய்து விட்டார், எனவே சரிநிகருக்கும் உச்சி குளிர்ந்திருக்கும். மக்களை ஏமாற்றும் சில மோசடியான வாக்குறுதிகளும், மலிவுப் பிரச்சாரங்களும், தற்காலிக நம்பிக்கையைக் கொடுக்கும் தீர்வுகளும், மக்களை ஏமாற்றவே ஒழிய மக்களின் மீதான கரிசனையில் அல்ல. இது சரிநிகருக்குப் புரியாதா? மாவின் விலை குறைப்பு, வேலையில்லாதோருக்கு-1500, தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடைநீக்கம் என எல்லா மக்களையும் ஏமாற்றவும் அடுத்த தேர்தலைச் சந்திக்கவும் தம்மை நிலை நிறுத்தவும் செய்யும் மோசடிகளே! இதைச் சரிநிகர் சுட்டிக்காட்டத் தவறி அவர்களின் தொங்கல் பிடித்து கொள்கை விளக்கமும், ஆலோசனை வழங்கலும் செய்து விடுகிறது. ஏன்தானோ இந்தக் கைப் பந்தம்.

இதே ஆசிரியர் தலையங்கத்தில் தமது அலுவலக எழுத்தாளர் 'நாசமறுப்பான்' பார்க்கக் கோரும் ஆசிரியர் குழுவின் கட்டுரையைப் பார்ப்போம்.

"சந்திரிகா வளர் பிறையா? தேய் பிறையா?" என்ற தலைப்பில் 'நாசமறுப்பான்' எழுதும் கருத்துக்களின் ஐந்து அம்சத் திட்டத்தை முன்வைத்து இதை உடன் அமுல்படுத்த வேண்டும் என்கின்றார். இன்று இதில் பெரும்பாலானவை தீர்ந்துள்ளது. எனவே நாசமறுப்பான் பார்வையில் வளர் பிறையே. இந்த ஐந்து அம்சங்களும், இதைவிட அதிகமானவையும் கடந்த 15 வருட யுத்தத்தில் எத்தனை தரம் வந்து போனது. மக்களின் சமாதானம் மீதான விருப்புக்கள் எப்போதுமே இவைகளூடாக ஏமாற்றுவதிலும், மோசடி செய்வதிலும் முடிகிறது. இதை சரிநிகர் நியாயப்படுத்தி நாசப்படுத்தி விடுவது ஏன்? மக்களின் தீர்வு, அதற்கான சமாதானமும் இச் சமூக அமைப்பினுள் சாத்தியமானதா? இதைச் சரிநிகரே தெளிவாகக் கூறவேண்டும்.

சரிநிகர் இதுபோன்ற பல கருத்துக் களை கூறிச்செல்கின்றது. இனி நாம் சரிநிகரின் மற்றய பக்கங்களைப் பார்ப்போம். தேர்தல் காலம் சிறப்பாகவும், அதற்கு முன்பு இலவசமான மலிவுக் கட்சிப் பிரச்சாரங்களை பிரசுரித்து பக்கங்களை நிரப்பி விட்டிருந்தது சரிநிகர். மக்களின் தேர்வுக்கு அவர்களின் பொய்யான மலிவு அரசியல் வேடங்களைப் பிரசுரித்து, ஒரு மலிவு விளம்பரம் ஒட்டும் இடம்போன்று-ஒரு விளம்பரப் பத்திரிகையாக சரிநிகர் போனது ஏன்? இதைச் சில உதாரணம் மூலமாகப் பார்ப்போம்.

சரிநிகர் 49இல் தலைப்புச் செய்தியாக "அற்ப சலுகைகளை வெறுக்கிறோம், தியாகங்களை மதிக்கிறோம், பாராளு மன்றத்தை விரும்புகிறோம்," என்ற கூட்டணியின் பத்திரிகையாக மாறி விடுகிறது சரிநிகர். கூட்டணியின் பத்தரிகை கூட இதைத்தான் தலைப்பாகப் போடும். இதைவிட "வாக்குக்களை கொள்ளையடிக்க வந்தவர்களல்ல நாம்! புவி நாதனுக்கு பு.ஜ.கட்சியினர் பதில்" என்ற தலைப்பிலான கட்டுரை புதிய ஜனநாயக கட்சியின் இலவச விளம்பரப் பத்திரிகையாக சரிநிகர் மாறியது ஏன்?

சரிநிகர் 52இல் "தொண்டமான் செய்தது தவறு!"-என்ற செல்லச்சாமியின் கொள்கை விளக்கமும், "பெண்கள் குரல் அரசியல் கட்சிகளுக்கு ஏழு கோரிக்கை" என்ற தலைப்பில் சில பெண்கள் அமைப்பின் இவ் அமைப்புப் பிரச்சாரங்களுக்கு சரிநிகர் துணைபோகிறது. இதே இதழில் "நான் ஒரு சுத்தமான இணுவில் தமிழன்" என்ற தலைப்பில் 'ராஜரட்னம்' பொ.ஐ.முன்னணிக்கு செய்யும் பிரச்சா ரத்தை சரிநிகர் தூக்கிப் பிடித்தது.

சரிநிகர் 53இல் "தனித்துவம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது" என்ற தலைப்பில் செங் கொடிச் சங்கச் செயலாளர் ராமையாவின் துரோகத்தை மறைத்த பொ.ஐ.முன்னணி மின் பிரச்சார எடுபிடியாக சரிநிகர் மாறியது ஏன்? இதே இதழில் "இராசரத்தினத்திற்கு குமார் சவால் விடுகிறார்"என்று குமார்பொன்னம்பலத் திற்கு பாய்விரிப்பும், "வன்னியிலும் கிழக்கிலும் போட்டியிடுவது சரியானதே எனகிறார் சிவசிதம்பரம்" என்று கூட்டணிக்கு முந்தானை விரிப்புமாக சரிநிகர் சரசம் புரிந்துள்ளது.

அதே இதழில் "பெண்கள் அரசியலில் ஈடுபடுவதை விட அடுப்படி வேலை களில் ஈடுபடுவதே நல்லது". என்ற பொ.ஐ.முன்னணி வேட்பாளர் நில் ரூபசிங்காவின் தேர்தல் பிரச்சாரத்திற்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கும் சரிநிகர், "தமிழ் மனங்களை ஏன் கசக்கிப்பிழிகிறீர்கள்?" என்று சரோஜினி யோகேஸ்வரனின் கொள்கைக் கொடியையும் பிடிக்கிறது. "இனப் பிரச்சனையைத் தீர்க்கும் ஆர்வம் யாருக்கும் இல்லை" என்று E.P.R.L.F வின் வேட்பாளர் குமரசிங்கத்தின் முழங்கையைப் பிடித்தும், "புலிகள் பயங்கரவாதிகளா இல்லையா என்பதை தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும்." என்று ந.ச.ச. கட்சி வேட்பாளர் ஒருவருக்கு கையும் கொடுத்து, கொள்கை விளக்கம் செய்கிறது சரிநிகர்.

இதே இதழிலேயே "முஸ்லிம்களுக்கு எதையாவது பெற்றுத் தருமா?" என்று முஸ்லிம் காங்கிரசுக்கு, பொ.ஐ.முன்னணிக்கு சலாமும், "யாழ்ப்பாணத்தில் நியாயமான தேர்தல் நடைபெறுமானால் இப்பொழுது தெரிவு செய்யப்படுபவர்கள் ராஜினாமாச் செய்ய வேண்டும்."என்ற P.L.O.T.E மின் உப-தலைவர் கரவை கந்தசாமிக்கு சலாமும் என்று குத்துக்கரண கொள்கை விளக்கமும் செய்கிறது சரிநிகர்.

சரிநிகர் 54இல் "எந்த உடன்பாடும் மக்களுக்குத் தெரியாமல் செய்யக் கூடாது."என்று பொ.ஐ.முன்னணிக்கு விளக்கப் பிரச்சாரம் செய்யும் கலாநிதி உயங்கொட............, இப்படி கடந்த காலங்களில் சரிநிகரில் நிறைய உதாரணங்களைக் காணமுடியும். இந்தச் சமூக அமைப்புக்குள் எந்த விமர்சனமும் இன்றி, அவரவர் கொள்கை விளக்கங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலவசமாகப் போட்டு பத்திரிகையின் விற்பனையைப் பேண முயல்கின்றனர். இவற்றை வேறு பத்திரிகையில் பணம் கொடுத்தே போட முடியும். ஆனால் சரிநிகர் இலவசமாகப் போட்டு (இரகசியமாகப் பணம் பண்ணுகிறார்களோ தெரியாது. அப்படி சிந்திக்க வைக்கிறது.) அக்கட்சிகளின் கொள்கை விளக்கங்களை மக்களின் தெரிவுக்கு உட்படுத்துகின்றனர். இதில் மறந்தும் கூட U.N.P யை போடுவதிலும் பாரபட்ஷம். மக்களை இச் சமூக அமைப்பில் நிலைநிறுத்த முடிந்த வகையில் சரிநிகர் இவைகளுக் கூடாக தன்னால் இயன்ற அளவு முனைப்புப் பெற்றுள்ளது.

இதை மேலும் செழிமைப்படுத்த சரிநிகர் 54இல் "அம்பாறை: கோட்டைவிட்ட தமிழ் பிரதிநிதித்துவம்." என்ற தலைப்பிலும், "கொழும்பு மாவட்டம்: தமிழ் வாக்குக்களால் இலாபம் பெற்ற பெரும்பான்மையர் கட்சிகள்." என்ற தலைப்பில் கொழும்பில் இழந்த தமிழ்த் தொகுதிகளை ஒட்டி—என்.சரவணனும், "மட்டக்களப்பு: மண்கவ்விய தமிழ் இயக்கங்கள்! கணிப்புத் தவறியது ஏன்?" என்ற சிவராமின் கட்டுரையும், எனத் தொடரும் பல கட்டுரைகள் இச் சமூக அமைப்புக்கு அந்தரங்க சேவகம் புரிவதோடு, மக்களையும் இதற்குள் நிலைநிறுத்துவதே ஒழிய முற்போக்கானவைகள் அல்ல. "தமிழ் மக்களின் சார்பாக ஒரு தொகுதி கூட எடுத்தால் என்ன?" என்று தமிழ் மக்களின் உணர்வுகளுக்குத் தீனிபோட்டு தட்டி எழுப்ப என எழுதும் குறுகிய இன வாதத்துடன் கூடிய இச் சமூக அமைப்பை நிலைநிறுத்த முனையும் இக் கட்டுரைகளை ஏன் சரிநிகர் வெளியிடுகிறது. மக்களை ஏமாளிகளாக்கி, தமது இருப்பைத் தக்க வைக்கவும் இதுபோன்ற கோமாளித்தனங்கள் சரிநிகருக்குத் தேவைதானா? இதையே வீரகேசரியின் சில பக்கங்களும் செய்கின்றன. ஒவ்வொரு கட்சிகளும் தமது பத்திரிகையில் வெளியிட வேண்டியவைகளை— சரிநிகர் வெளியிட்டும், ஒவ்வொரு எழுத்தாளர்களின் எழுத்துக்களும் அக் கட்சியின் இருப்பில், இச் சமூக அமைப்புக்கென வாழ்வின் எழுத்துக்களை சரிநிகர் சுபீகரித்து நிற்கின்றது.

இனி சரிநிகர் போடும் தலைப்புக்களைப் பார்ப்போம்.
சரிநிகர் 52இல் ராஜரட்னம் அளித்த பேட்டிக்கு கொடுத்த தலைப்பு "நான் ஒரு சுத்தமான இணுவில் தமிழன்." என்றுதான். நான் ஒரு சுத்தமான வெள்ளாளன், நான் ஒரு சுத்தமான ஆண்மகன், நான் ஒரு சுத்தமான அப்பருக்குப் பிறந்தவன், நான் ஒரு சுத்தமான ஆரியன் என்பதற்கு அப்பால் இத்தலைப்பு அமையவில்லை. இத்த லைப்பைப் போட சரிநிகருக்கு மனம் வந்தது ஏன்?

சாதித் தடிப்புக்கள், பெண் அடிமைத்த னங்கள், இச் சமூக அமைப்பைப் பேணலும், நாசிகளின் ஆரிய கோசமும், இனம் காட்டிவிடும் இச் சொற்களூடாக இணுவில் தமிழன் என்பது—பிரதேச வேறுபாட்டையும், குறுந் தேசிய வெறியைக் கிளறியும், பிழைக்கும் இத் தலைப்பைப் போட சரிநிகர் முனைவது ஏன்? இதனூடாக வாக்குப் பலம் பெற மக்களை குறுக்கு வழிகளில் ஏமாற்ற முனைவது ஏன்? இதற்கு சரிநிகர் துணைபோவது ஏன்?

அடுத்து சரிநிகர் 54இல் "ஐ.தே.க: வெற்றியும் தோல்வியும் காரணம் என்ன?" என்ற பாலகிருஷ்ணன் கட்டுரை வெற்றி தோல்விக்குள் மக்களை இருத்தி வைக்க மக்களைத் இப்படியான தேர்தல்களின் மீது நம்பிக்கை கொள்ளச் செய்ய இத் தலைப்பு உதவுகின்றது. ஐ.தே.க யின் தோல்வியை அதன் சுரண்டல் காரணங்களை மறைப்பதாகவே தலைப்பும் அமைந்து விடுகிறது. இப்படிப்பல முடிவற்ற விமர்சனத்திற்கு எல்லாமே அமைந்து விடுகிறது.
"கட்சிப்பத்திரிகை அல்ல" என்ற கூற்றின் ஊடாக தாம் இச் சமூக அமைப்பின் சிறந்த பிரதிநிதிகளாக சரிநிகர் மாறி விடுகிறது. எல்லாக் கருத்துக்கும் வர்க்கம் உண்டு. இதை சரிநிகர் மறுக்காவிட்டால் உங்கள் கருத்துக்கும் வர்க்கம் உண்டு. உங்கள் கருத்து எந்த வர்க்கத்தின் கருத்து?—கூறுவீர்களா?

இனி சரிநிகர் தனிநபர்களுக்கு புகழ்பாடுவதை பார்ப்போம்: மக்களுக்கு பாதி உண்மையை மறைத்து கூறும் உண்மையால் சரியான பக்கத்தைக் கூட திரிக்கின்றனர். சரிநிகர் 44இல் இருந்து "இந்தியாவும் தமிழ்த் தேசியப் பிரச்சனையும்" என தொடர்ந்து எழுதும் டி.சிவராம் பற்றிய சரிநிகரின் புகழ் உரையுடன் கூடிய அறிமுகத்தைப் பார்ப்போம்.
"..............மட்டக்களப்பைச் சேர்ந்தவர். ஐலண்ட் பத்திரிகையில் 'தராகி' என்ற பெயரில் தமிழ் மக்களுடைய பிரச்சனைகள் தொடர்பாக எழுதி வருபவர். இவருடைய ஐலண்ட் கட்டுரைகள் 'பிரான்ஸில்' உள்ள ஆசியா நிறுவனத்தால் புத்தகமாக தொகுத்து வெளியிடப் பட்டுள்ளது. பின்னர் இவை யாழ்ப்பாணத்திலும் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு தொகுக்கப் பட்டுள்ளது.
ஆங்கிலத்தில் சிறந்த பத்தி எழுத்தாளர் என்ற வகையில் இவரால் எழுதப்பட்ட பத்திகள் கொழும்பு பல்கலைக் கழகத்தில் 'பத்திரிகையியல்' மாணவர்களுக்கான வழிகாட்டியாகச் சேர்க்கப்பட்டுள்ளது." என்று டி.சிவராம் பற்றிய புகழ் உரைகளுடன் சரிநிகர் ஆசிரியர் குழு சந்தர்பவாத நிலைமையைப் பேணுகின்றனர். இவருடைய எழுத்துக்கள் நிலப்பிரபுத்துவ, தரகு—முதலாளித்துவ எழுத்துக்கள் என்பதைத் திட்டமிட்டு மறைத்துள்ளனர்.

அத்துடன் அவரின் வரலாற்றின் ஒரு பக்கத்தை மறைத்தும் உள்ளனர். இவர் 'புளட்' அமைப்பின் முக்கிய உறுப்பினரும், மாக்சிஸம் பற்றிய கொள்கை விளக்க வாதியாகவும் செயல் பட்டவர்.
யாழ்.மண்ணில் இவர் எடுத்த அரசியல் வகுப்பொன்றில் (ஆண், பெண் உட்பட) "சோசலிஸம் என்பது, ஆணும்— பெண்ணும் விரும்பிய வரை மாறி மாறி உறவு கொள்வதே எனனக்கூறி, அதை நீங்களும் செய்யமுடியும்" எனக் கூறியவர். அன்றே சில சம்பவங்கள் அந்த நீண்ட பாசறையில் நடைபெற்றது. இவரின் அரசியல் வழிகளில் இதை வழிநடத்தி தானும் அதில் பங்குகொண்டார்.

அத்துடன் 'புளட்' டில் செல்வன், அகிலன், சந்ததியார் உட்பட பல நூறு கொலைகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்ட ஒரு கொலையாளி. இக் கொலையாளி டி.சிவராம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை மட்டக்களப்புக்கு திட்டமிட்டு (மாக்சிச பிதற்றல்கள் மூலம்) கூலி விவசாயிகள் மத்தியில் வேலை செய்வதற்கென அழைத்துச் சென்றார். இப்பெண் மீதான வக்கிரமான வன்மத்துடன் கூடிய (கற்பழிக்கும்) நோக்குடனே இத்திட்டம் அமைந்திருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'தீப்பொறி உடைவும், கிழக்கில் அகிலன் செல்வம் கொல்லப்பட்ட நிலமைகளும், அதைச் செய்த சிவராம் அப் பெண் மீதான ஆசையைத் தீர்த்துக் கொள்ள இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டார். அகிலன் செல்வனுடன் அதிக உடன்பாடு கொண்ட, அப்பெண்ணைக் கைது செய்து பலத்த சித்திர வதைகள் செய்த சிவராம் பாலியல் பலாத்காரங்களில் ஈடுபட்டபின் (கற்ப ழிக்கும் நோக்கிலான) பாலுறவுச் சித்திரவதைகளில் ஈடுபட முயன்று கொண்டார். அப்பெண் மக்கள் மத்தியில் வேலை செய்ததால், அம்மக்களே அப் பெண்ணுக்காக போராடினர். அப் பெண்ணின் உயிரை மீட்டதுடன், கற்பழிப்பிலிருந்தும் மீட்டுக் கொண்டனர். 'தீப்பொறியின் உடைவின் பின்னர் வெளிவந்த தீப்பொறி பத்திரிகையில் தன் மீதான(சிவராமின்) அடக்கு முறை களை 'கண்ணம்மா' என்ற பெயரின் ஊடாக வெளிப்படுத்தியும் இருந்தார் அப்பெண். இது சரிநிகருக்கும் தெரியும்.. ஆனால் சரிநிகர் இதை மறைப்பது ஏன்? பக்கங்களை நிரப்ப கட்டுரைகள் வேண்டும் என்ப தற்காகவா?

அடுத்து சரிநிகர் 39இல் வ.ஐ.ச.ஜெய பாலன் எழுதும் "சாதி - அமைப்பும் யாழ்ப்பாணத் தமிழர்களும்" என்ற கட்டுரைக்கு ஆசிரியர் பற்றிய புகழ் உரையைப் பார்ப்போம்.

"வ.ஐ.ச.ஜெயபாலன் ஒரு நாடறிந்த கவிஞர். ஏற்கனவே 'முஸ்லிம் மக்களும் தேசிய இனப்பிரச்சனையும்' என்ற சிறு நூலை வெளியிட்டவர்." என சரிநிகர் புகழ் உரையின் ஊடாக பல உண்மைகளை மறைத்துள்ளனர். இவர் ஒரு குட்டிபூர்சுவா வர்க்க பிரதிநிதி என்பதை கூற மறுத்ததுடன், இவர் 'புளட்' டில் இருந்ததையும் அதற்கு முந்திய செயற்பாட்டையும் மறைத்துள்ளனர். 'புளட்' டில் என்ன செய்தார் என்பதை எல்லாம் மறைக்கும் சரிநிகர் மக்களை ஏமாற்று கின்றது. ஜெயபாலன் பற்றி நாம் இனிக் கூறத் தேவையில்லை. பலரும் அறிந்ததே!

இவர் எழுதும் சாதியமைப்புக் கட்டுரை, வர்க்கப் போராட்டத்திற்கு எதிராக வரையப்பட்ட கட்டுரையே. அதைப் பார்ப்போம். "சாதியமைப்பும் வர்க்க அமைப்பும் முரண்பட்ட இரு சமூக நிறுவனங்களாகும்." என்பதன் ஊடாக வர்க்க அமைப்புக்கும் சாதியமைப்புக்கும் இடையில் உறவு இல்லை என்கின்றார். சாதி அமைப்பு வர்க்க நோக்கில் உருவாகவில்லை என்கின்றார். சாதியை திடீரென வானத்தில் இருந்து கடவுள் படைத்தவர் என்கின்றார்.

சாதி என்பது நிலவுடமைக் காலத்தில் தொழில் ரீதியாகப் பிரித்தலுடன் காரணப் பெயர்களாகத்தான் அமைந்தன. அங்கு வேலைப் பிரிவினை உயர் வர்க்கத்தால் சுரண்டும் வகையிலும், தொடர்ச்சியான அடிமைகளாக வைத்திருக்கும் வகையிலும், அடக்கியாள உருவாக்கப்பட்டதே.
ஒரு வர்க்கப் போராட்டம் மட்டுமே வேலைப் பிரிவினையை ஒழித்துக் கட்டுவதுடன், பொருளாதார மீட்சி ஊடாகவே சாதியை ஒழித்துக்கட்ட முடியும். இதை மறுக்கும் ஜெயபாலன் தனிமனித பொருளாதார மீட்சி சாதியை ஒழிக்க முடியாது என்கின்றார். அவர் இதை விளக்கும் போது தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலுள்ள பணக்காரர்களை உயர்ந்த சாதிகள் சமமாக மதிப்பதில்லை என்கின்றார்.

சாதி என்பது பொருளாதார அடிப்படையில் உருவாகி அதைப் பேண சமயங்கள் முதல் அனைத்தும் "இவை பின்தங்கியவை" என ஒரு கருத்தியலை உருவாக்கியுள்ளன. வெள்ளையன்–உயர்ந்தவன், கறுப்பன்–பின்தங்கியவன் என்ற மேற்கத்தைய கோட்ப்பாட்டை இதற்கு ஒப்பிட முடியும். சமூகத்தின் முரண்பாட்டின் வெளிப்பாட்டுடன் இதைக்காண முயலல் வேண்டும். சாதி முரண்பாடு தீவிரமாக உள்ள நிலையில், பொருளாதார வாழ்வுக்கு அப்பால் இது முதன்மை பெறுகிறது. வர்க்கமுரண்பாடு கூர்மை அடையும் போது சாதி முரண்பாடு பின்தள்ளப்பட்டு இரண்டு பிரிவிலும் உள்ள சுரண்டும் வர்க்கம் ஐக்கியப்படும். இதை நாம் நடைமுறையில் காணமுடியும். இங்கு திருமணங்கள் தொடக்கம் எல்லாமே இதன் தாக்கத்திற்கு உட்பட்டே நிகழ் கின்றது.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக் கிடையில் உள்ள முரண்பாட்டின் தன்மையைப் பொறுத்தே இவர்கள் தமக்கிடையிலான உறவுகளைத் தீர்மா னிக்கின்றனர். சொந்த இனத்திற்குள் வர்க்க மோதல் இனமுரண்பாடு கூர்மையாக உள்ளபோது மறைந்தும், வர்க்க முரண்பாடு கூர்மை அடையும் போது தமிழ், முஸ்லிம், சிங்கள சுரண்டும் வர்க்கம் வலுவேகமாக ஐக்கியப்படும். இதை அநேக உதாரணங்கள் மூலம் காணமுடியும். இது சாதிக்கும் பொருந்தும்.

அடுத்து சரிநிகர் 53இல் கரவை கந்தசாமி பற்றி ஆ.கு வினது புகழ் உரையைப் பார்ப்போம். "அறுபதுகளில் சண்முகதாசன் தலைமையிலான இலங் கை கம்யூனிஸ்ட் கட்சிமூலம் அரசியலுக்குள் நுழைந்த கரவை கந்தசாமி அவர்கள் எண்பதுகளில் ஈழவிடுதலைப் போராட்ட அமைப்புக்கள் பலவற்றுடன் உறவு கொண்டிருந்தார். மும் மொழிப் புலமைவாய்ந்த கரவை கந்தசாமி..............."
என்பதனூடாக ஒரு இடதுசாரி எனக் கூறி 'புளட்' வாக்குவேட்டை அங்கீகரித்து சரிநிகர் ஆலவட்டம் பிடித்துள்ளனர். 'புளட்'டைத் திருத்த சரிநிகர் நினைப்போ? உண்மைகளை கரவை கந்தசாமி மீது மறைத்து அவரின் துரோக அரசியலை மறைப்பதும் ஏன்? இப்படியாக முடிந்தவகையில் சரிநிகர் இச் சமூக அமைப்புக்குள் தன்னை இருத்தியபடி, அதன் பிரதிநிதிகளைப் புகழ்தல், பாதுகாத்தல், போன்றவற்றைச் செய்து வருகிறது. இச் சமூக அமைப்புக்குள் தேர்தல் குழுக்களுக்கு குடை பிடித்தும், மக்களின் தேர்வுக்கு விட்டும், புதிய அரசை வள்ர்பிறையாக படிப்படியாக இனம் காட்டியும், தமது முற்போக்குத் துரோகத்தனத்தை செய்ய முனைந்துள்ளனர். ●●

# கியூபா நெருக்கடியும், அமெரிக்காவின் ஆதிக்க வெறியும்.

அண்மைக்காலமாக குறிப்பாக மேற்கு நாட்டு செய்திகளிலும், உலகின் பல பாகங்களிலும், கியூபா அகதிகள் பிரச் சனையை பூதாகரமாக எழுப்பியிருந்தன.
சிறு வள்ளங்களிலும், சிறு துடுப்புகளின் துணையுடனும் அமெரிக்காவுக்குள் கியூபா அகதிகள் நுழைந்தவண்ணமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளனர். அங்கு யுத்தமா? ஏன் இவர்கள் வெளியேறுகின்றனர்? என்ற அமளிதுமளியான கேள்விகளுக்கு பொருளாதார நெருக்கடிகளும், வேலையில்லாத் திண்டாட்டமுமே அகதிகளாக மக்களை வெளியேற வைத்துள்ளது என்பது பதிலாக அமைகிறது.

கியூபாவில் அப்படி பொருளாதார கஸ்டங்கள் ஏற்படக் காரணம் என்ன? அமெரிக்க ஏகாதிபத்தியம் தன்னைச் சுற்றியுள்ள நாடுகள்மீது ஒரே ஒரு சண்டித்தனம்விடக்கூடிய காடையனாகத் தான் இருக்க விரும்பியதேயாகும். கியூபாவில் கஸ்ரோ ஆட்சிக்குவந்தது முதல் அவரைக் கொல்ல CIA மூலமாகவும், கியூபாக் கைக்கூலிகள் மூலமாகவும், முயன்று பலமுறை தோற்ற அமெரிக்கா, பலமுறை ஆக்கிரமிப்புச் செய்யவும் முயன்றது.



கஸ்ரோ

60களில் ஆக்கிரமிப்புக்கான முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டபோது, அமெரிக்க–சோவியத் போர் மூண்டுவிடும் அளவிற்கு நிலமை முற்றியிருந்தது. இன்று கியூபா தொடர்ச்சியான பொருளாதார நெருக்கடிகளைச் சந்திக்கும்போது, அது மக்களை அகதிகளாக ஓட்டமெடுக்கும் அளவுக்கு வைத்துள்ளது.

இவைகள் ஒருபுறம் இருக்க, கியூபாவில் நடந்தேறிய புரட்சி ஒரு தனி நபர் பயங்கரவாத அடிப்படையில் (புலிக ளைப்போல்) உருவானதே. மக்களை அணிதிரட்டி புரட்சியை நடத்துவதறக்குப் பதிலாக சிறு ஆயுதமேந்திய குழு ஆட்சியைக் கைமாற்றி இருந்தது. பின் அது அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் நிலையில்–1955 இல்– சோவியத்தில் ஆட்சிப்பீடம் ஏறிய குருசோவ் திரிபுவாதக் கும்பலின் தேவைகளுக்குப் பலியாகவேண்டி இருந்தது.

அமெரிக்கக்கண்டத்தில் சோவியத் ஏகாதிபத்தியத்திற்கு தேவையாக இருந்த இராணுவத்தளம், கியூபா ஊடாக சோவியத்துக்குக் கிடைத்துக் கொண்டது. அன்று கியூபாவின் உதவிக்குச் சென்ற ரஸ்சியா ஏகாதிபத்தியம், கியூபாமக்களை அணிதிரட்ட சோசலிஸத்தை (70 களில் சிறிமா ஆட்சிபோல) அமுல்படுத்த முனைந்தது. ரஸ்சிய ஏகாதிபத்தியம் கியூபாவை தனது பொம்மை அரசாக நடத்தியும், அதன் பொருளாதாரத்தை ரஷ்சியசார்பு பொருளாதாரமாகவும் மாற்றி அமைத்தது. அதாவது சுயபொருளாதார அடிப்படையைக் கொண்ட கியூபா பொருளாதாரத்தை ரஷ்யசார்பு பொருளாதாரமாக மாற்றினர். இதனால் கியூபா, ரஷ்யசந்தையை எப்பொழுதும் நம்பி தவங்கிடக்கவேண்டி இருந்தது. ரஷ்யாவின் வண்டவாளங்கள் இன்று வெளியே வந்ததும், கியூபா ஒண்டிக்கட்டையாக நடுரோட்டுக்கு வந்துவிட்டது. கியூபாவின் பொருளாதார வங்குரோத்துகளினால் இன்றைய அமெரிக்க பொருளாதார முற்றுகைக்குள் மூச்சுத்திணறி சீரழிகிறது.

கியூபாவின் போலிக் கம்யூனிஸ கட்சி, நிலைமைகளைக் கவனித்து மக்களை அணிதிரட்டவும், சரியான பாதையொன்றைத் தேடுவதற்குப் பதிலாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் காலடியில் தாட்சாங்கமாக விழுந்தது. விபச்சார விடுதிகளைத் திறப்பது முதற்கொண்டு–டிஸ் கோ, ஹபரே கிளப்புக்களை கோலாகலமாகத் திறந்துவைப்பதன் ஊடாக ஏகாதிபத்தியங்களைத் திருப்திப்படுத்தியது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க முடியாது போன போலிக் கம்யூனிஸ்டுக்கள், 1980 களில் அகதிகள் வெளியேற கதவுகளை மெல்லத்திறந்தனர். ஒரு லட்சம் அகதிகள் அமெரிக்காவுக்குள் புகலிடம் கோரினர். மீண்டும் அகதிகள் வெளியேறும் இன்றய நிலையில், அமெரிக்கா எங்கிலும் கடந்த ஒகஸ்டில் பழைய அகதிகள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.
தமக்கு வேலைவழங்கக் கோரியும், பாஸ் போட், மற்றும் விசாக்கள்கோரியும், அமெரிக்காவின் அரசியல் பம்மாத்துக்களை அம்பலப்படுத்தி வருகின்றனர்.

இன்று அமெரிக்காவின் போலிப்பிரச்சாரத்தில் நம்பிக்கைவைத்து வெளியேறும் அகதிகள், முள்ளுக்கம்பிகளினால் அடைக்கப்பட்ட சிறைகளினுள் ஆடு மாடுகள்போல அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இங்கும் போராட்டம் வெடித்து எழுந்தவண்ணமே உள்ளது. 15 வருடங்களுக்கு முன்வந்தவர்களுக்கு பாஸ்போட்டோ, விசாக்களோ கொடுக்க மறுக்கும் போலி ஜனநாயக அமெரிக்க ஏகாதிபத்தியம், இப்போது வரும் அகதிக ளுக்குமட்டும் எதைத்தூக்கிக் கொடுக்க போகிறது? வாயளவில் ஜனநாயகத்தை விட்டால் அதனிடம் கொடுப்பதற்கோ எதுவுமேயில்லை.

1983 களில் எம்மக்கள் லட்சக்கணக்கில் இந்தியாவுக்குச் சென்றது இந்த இடத்தில் ஞாபகம் வரும். இந்தியா எம்மை எப்படிப்பயன்படுத்தி, அகதிகளை சிறைகளில் அடைத்துவைத்து வதைத்ததோ, அதைப்போலத்தான் இதுவும். இன்றும் எம் தமிழ் அகதிகள் இந்தியாவில் படும்பாடு நாங்கள் அறிந்ததே. இது அமெரிக்காவுக்கு விதிவிலக்கு அல்ல. அமெரிக்காவின் ஜனநாயகம் என்பது, பசுத்தோல் போர்த்த புலி. அது ஆக்கிரமிப்புக்கு மட்டும் பயன்படுத்தும் வகையானது.

மக்கள் எப்போதும் பிச்சைக்காரர்கள் தான். அவை மறைக்கப்பட சேரிவாழ்வு கடவுளின கொடை என்பார்கள் இவர்கள். இக்கொடையைப் பாதுகாக்க ஆக்கிரமிப்புக்கள் அவசியம்தான் இவர்களுக்கு. ஆனால் மக்கள் இவைகளையும் வென்று வாழும்நாள் வெகுதூரத்தில் இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**❖இந்தியா வாசகர்களுக்கு.....**

'சமர்' இதழ்களைப் பெற்றுக்கொள்வதில் கஸ்டம் இருக்கிறதா? இதோ! கீழ் உள்ள முகவரியில், தேவையான 'சமர்' இதழ்களை பெற்றுக்கொள்ளலாம்.

**கீழைக் காற்று**
10, ஔலியா சாகிப் தெரு
எல்லீசு சாலை, சென்னை 600 002.
இந்தியா.

மற்றும் முற்போக்கு நூல்கள் முதற் கொண்டு மார்க்சிய நூல்கள் ஈறாக பலதரப்பட்ட முற்போக்கு ஒலி, ஒளி நாடாக்கள் முதல், பத்திரிகைகள், சஞ்சிகைகள் ...என மிகக் குறைந்த விலையில் இவ் வெளியீட்டக - விற்பனை நிலையத்தில் நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

☐ தொடர்பு முகவரி:
'SAMAR' 87,Rue De Coiombes
92600-Asnieres Sur Seine
FRANCE. Fax: 46 04 53 58.

**❖வாசகர் கவனத்திற்கு!**

கடந்த 12ம் இதழுடன் அநேகரின் சந்தாக்கள் முடிவடைந்துள்ளதை அறியத் தருகின்றோம். உங்கள் சந்தாக்களை காலக்கிரகத்தில் புதுப்பித்து உங்களது பத்திரிகைக்கு உதவுமாறு கேட்கின்றோம். பெருத்த பொருளாதார நெருக்கடிகளுக்கு ஊடாகவே தொடர்ந்தும் 'சமர்' ஐ வெளிக்கொணர வேண்டியுள்ளது. இந்த நெருக்கடிகளுக்குள்ளும் சமரை தொடர்ந்தும் நடத்துவது உங்கள் கைகளில்
-சமர் ஆ.கு.-

# பொருளாதார அடிக்கட்டுமானம் மீதே மேல் கட்டுமானமான மதம்,கலை, அரசியல்.... இயங்கும். இதை ஏகலைவன் மறுப்பது மாக்ஸ்சிஸத் திரிப்பே!

கடந்த காலத்தில் நாம் மனிதம், உயிர்ப்பு போன்றவற்றில் எழுதும் சிலருடன் 'மாக்சிஸம்' என்பது என்ன? என்ற விவாதத்தில் ஈடுபட்டு வந்தோம். இதன் தொடர்ச்சியாக உயிர்ப்பு 4 இல் சமரின் விமர்சனம் மீது ஏகலைவன் பெயர் குறிப்பிடாது விமர்ச்சிக்க முற்பட்டுள்ளார். இவ்வாறு

'பெயர் ஒளிக்கும்' விமர்சன முறை கூட, தப்பித்து திணிக்கும் நோக்கிலானதே. மாற்றுக் கருத்துக்குப் பதிலளிக்க ஒவ்வொருமுறை கோரிய போதும் அலட்டிக் கொள்ளாமல், நாம் கூறாத ஒன்றைக் கூறியபடி பிரச்சனையில் இருந்து விலகி புதிய விடயங்களுக்குள் தாவிச் செல்கிறார். மாற்றுக் கருத்துக்கு சுதந்திரம் வேண்டுமென எதிரியிடம்(வர்க்க எதிரியிடம்.) போய்க் கோருவது வேடிக்கையாகவே உள்ளது.

கடந்த கால எமது விமர்சனங்களுக்கு பதில் கூற முடியாமல் திசை திருப்ப முயன்ற நேரத்தில், இவர்களது தத்துவ வேர்கள் இந்தியாவிலும், வேறு பல இடங்களிலும் உள்ளனர் என்பதை சுட்டிக் காட்டியிருந்தோம். இதுவரை முகமூடியைக் கழட்டாது இருந்த இவர்கள், உயிர்ப்பு 4 இன் மூலம் முகமூடியைத் துறந்து அல்தூஸரின் கோட்பாட்டை மாக்ஸிச, லெனினிய, மாவோயிஸ(மாக்,லெ,மா) சிந்தனைக்குப் பதிலீடாக முன் வைத்துள்ளனர். அல்தூஸரைத் தமிழில் அறிமுகம் செய்த எஸ்.வி.ராஜதுரை முதல் அ.மாக்ஸ் வரை மாக்,லெ,மாவோயிஸ சிந்தனையை நிராகரிப்பதுடன் திரிப்பவர்களே! தமது திரிபையும், நிராகரிப்பையும் விரைந்தோடி வந்து பதுகாக்க முனைந்துள்ளதை 'மனிதம்' 27 இல் நாம் காணமுடியும்.



உயிர்ப்பு 4 கட்டுரையில் மாக்,லெ, மாவோயிஸ சிந்தனையின் அடிப்படைக் கோட்பாட்டின் மீதே தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது. இதில் சிலவற்றை சுட்டிக் காட்டி, பின் அவைபற்றி விவாக விமர்சிக்க முற்படுகிறோம்.

1. பொருளின்றி ஒன்று இருக்க முடியும் என்பது. அதாவது கருத்து முதன்மையானது.
2. முரண்பாடுகள் பற்றியும், அவையின் செயற்பாடுகள் பற்றியும் திரிபு படுத்தப்பட்டுள்ளது.
3. பொருளாதார வாதம் பற்றி மாக்,லெ சொன்னவைகளைத் திரித்து தவறாக வியாக்கியானம் செய்யப்பட்டுள்ளது.
4. மேல்க்கட்டுமானத்திற்கும், அடிக்கட்டுமானத்திற்கும் இடையிலான உறவை கருத்துமுதல்வாத அடிப்படையில் வியாக்கியானம் செய்யப்பட்டுள்ளது.
5. வரலாற்று பொருள் முதல்வாதத்தையும், இயக்கவியல் பொருள் முதல்வாதத்தையும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு அற்றவை என்று காட்ட முற்பட்டு, சமூக அடிப்படைகளை தவறாக வியாக்கியானம் செய்ய முற்பட்டுள்ளனர்.
6. இலங்கையில் 'தமிழீழ'மே ஒரே தீர்வு என்ற இயங்கியல் நிலையை மறுக்கும் வகையில், இலங்கைப் புரட்சியைப்பற்றி மறந்தும் கூட வாய் திறக்கவேயில்லை.
7. 'தமிழீழம்' சாத்தியமா? என்பதை ஒட்டி இயங்கியலை நிராகரித்த கருத்துக்களால் சோடனை செய்துள்ளனர்.

இவ்வாறு, இக்கட்டுரை பல மாக்சிஸ விரோதக் கருத்துக்களால் கட்டி எழுப்பப்பட் டுள்ளது. இதை மறைக்க நடைமுறை பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. மாக்,லெ, மாவோ சிந்தனையாளர்கள் வரட்டுவாதிகளாகவும், நடைமுறை வேலைமுறையை நிராகரிப்பவர்களாகவும், குறுங்குழுவாதிகளாகவும் உள்ளனர் என பிதற்றியுள்ளனர். அவர்கள் சமூகத்தில் எதையும் முன்னெடுக்க முடியாது போய் உள்ளனர் எனக் கூறி, நடைமுறைபற்றிப் பேசிக்கொண்டே தமது திரிபுவாதக் கருத்துக்களை பின்பக்கக் கதவுகளினூடாகத் திணித்துவிட முனைகின்றனர்.

உண்மையில் இன்று மாக்,லெ,மாவோ சிந்தனைகளை உயர்த்தும் கட்சிகள் மட்டுமே நடைமுறையில் உள்ளன என்பது இவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைத் தான். இந்தியப் புதிய ஜனநாயக கட்சி(தமிழ்நாடு), மாவோசிய மையம்(பீகார்), போன்று இன்னும் பல குழுக்களும்: பர்மா கம்யூனிஸ்ட் கட்சி, பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி, பேரு கம்யூனிஸ்ட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்சி, எல்சர்வோடர் கம்யூனிஸ்ட் கட்சி, மெக்சிக்கோ கம்யூனிஸ்ட் கட்சி, மலேசிய கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் உலகிலுள்ள ஏனைய புரட்சிகர கட்சிகள்(நடைமுறையில் இயங்கும்) அனைத்தும் மாக்,லெ,மாவோ சிந்தனைகளை உயர்த்துகின்றனவே ஒழிய அல்தூஸர் வழியை ஒருபோதும் ஏற்பவர்கள் அல்ல. மாறாக அல்தூஸரின் திரிபுகளையும், மாக்சிசத்துக்கு வாயுபதேசம் செய்யும் கருத்து முதல் வாதம் அனைத்தையும் நிராகரித்து அம்பலப்படுத்தும் புரட்சிக் குழுக்களாகும்.

உயிர்ப்பு 4 இல் ஏகலைவன் பிரச்சனைகள் என சிலவற்றைக் குறிப்பிட்டு,அதை மாக்,லெமாவோ சிந்தனைகள் தீர்க்கவில்லை அல்லது தவறாக வியாக்கியானம் செய்கின்றது எனக் கூறி அதை அல்தூஸரின் கருத்துக்கள் தீர்த்துள்ளதாக குதர்க்கம் செய்வதை சுருக்கமாகப் பார்ப்போம்.

1. தேசியப் பிரச்சனையை மாக்சிசம் சரியாக விளக்கத் தவறிவிட்டது என்ற விமர்சனத்தை இப்பொழுது பரவலாகவே கேட்க முடிகிறது. தேசியப் பிரச்சனை என்பது முதலாளித்துவத்தின் வெளிப்பாடே! எனவும், சோசலிசத்தின் வருகையுடன் இது மறைந்து விடும் எனவும் பொதுவாகக் கூறப்பட்டது உண்டு. அவ்வாறே சோவியத் யூனியனில் தேசியப் பிரச்சனை முற்றிலும் தீர்க்கப்பட்டு விட்டதாகச் சிலர் அண்மைக்காலம் வரையில் சாதித்து வந்தார்கள். ஆனால், சோவியத் யூனியன் பதினாறு குடியரசுகளாக சிதறுண்டதுடன், அக் குடியரசுகள் பலவற்றிலும் கூட மீண்டும் தேசியப் பிரச்சனைகள் தீவிரப்பட்டு வருவதும் மேற்குறிப்பிட்டு எதிர்வு கூறல்களை மறுதலிப்பவைகளாகவே உள்ளது. என ஏகலைவன் வாதிட்டுள்ளார்.

சோவியத் என்ற நாட்டின் இயங்கியலை மறுப்பதுடன், வரலாற்றுப் பொருள் முதல் வாதத்திற்கும், இயங்கியல் பொருள் முதல் வாதத்திற்கும் இடையிலுள்ள உறவு மறுக்கப்பட்டுள்ளது. ஒரு பொருள் என்ன நிலையில் இருந்து வந்துள்ளது என்பதை ஒவ்வொரு நிலையிலும் ஆராயப்பட வேண்டும். அது மட்டுமே இயங்கியலை சரியாக அணுகுவதாக அமையும். சோவியத் தேசியப் பிரச்சனை தொடர்பாக நாம் பலமுறை விவாதித்ததை வாசகர்கள் அறிவார்கள். ஆனால், அதுபற்றி ஏகலைவனுக்கு பதிலளிக்க முடியாது போனது ஏன்?

சோவியத் புரட்சிக்கு முன்பு தேசிய இன முரண்பாடு கூர்மையாக இருந்தது. சோசலிசப் புரட்சியைத் தொடர்ந்து தேசிய இனங்களுக்கான சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வு, அங்கு தேசிய இன முரண்பாட்டை அரங்கில் இல்லாதொழித்தது. ஆனாலும் அது முற்றிலும் மறைந்து விட்டதாக இல்லை. மாறாக அது சோசலிசகாலகட்டம் முடியும்(பண்பு மாற்றம்) வரையும் சுரண்டும் வர்க்கம் எப்படி தனது அதிகாரத்துக்காக, பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசுக்குள் போராடியதோ, அதே போன்று தேசிய இன முரண்பாட்டை முன்னுக்குத் தள்ள பல வகைகளிலும் அது முனைந்தது.

மக்களின் தேசிய கோரிக்கைக்கான அவர்களின் சுதந்திரத்தை பூரணமாக சோவியத் வழங்கி இருந்த போதிலும், ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட நட்பு முரண்பாட்டைக் கூட பகை முரண்பாடாக மாற்றி தேசிய இன முரண்பாட்டை முன்தள்ள, சுரண்டும் வர்க்கமானது தனது சுரண்டும் நலனுக்காக இடைவிடாது முனைந்து நின்றது. ஸ்டாலின் சில தவறுகள் விட்ட நிலையில் குருசேவ் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து சுரண்டும் வர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி அனைத்துத் துறைகளிலும் முதலாளித்துவத்தை படிப்படியாக மீட்டனர்.

சோவியத்தில் முதலாளித்துவம் மீட்கப்பட்ட நிலமைகளில் தேசிய இனங்களின் சுயநிர்ணயம் படிப்படியாக அங்கு நிராகரிக்கப்பட்டது. சுரண்டும் வர்க்கமானது தனது கனவுகளுடன் இன முரண்பாட்டை முன்னுக்குத் தள்ளியது. அது சோவியத்தின் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்துடன், அதன் சர்வதேச நிலமைகளுடன், 16 அல்ல தேவை ஏற்படின் (சுரண்டுவதற்கு) இன்னும் பல நாடுகளையும் உருவாக்கும் நிலமைகளுக்கு சென்ற வண்ணமே உள்ளன.

முதல் சோவியத்தின் இன முரண்பாடு எழுந்த காலம், ஒரு சோசலிச அரசிலல்ல. மாறாக அக்காலம் ஒரு முதலாளித்துவ அரசாகவே இருந்துள்ளது என்பது ஏகலைவனுக்கு மிக நன்றாகத் தெரியும். அப்படி இருந்தும் ஏன் பிழையான தகவலை வாசகர்களுக்குக் கொடுக்க வேண்டும்? ஏகலைவனுக்கு இது மட்டுமே தமது மாக்சிச விரோதக் கருத்தை நிலைநாட்ட ஒரே வழியாக உள்ளது. இதனூடு, சோவியத்தின் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தையும் அதன் இயங்கியல் பொருள்முதல் வாதத்தையும் புதை குழிக் குள் அனுப்பப் பாடுபடுகிறார் ஏகலைவன்.

அடுத்து தேசிய இன முரண்பாடு முதலாளித்துவ வெளிப்பாடே என்ற மாக்சிஸத்தின் அடிப்படைக் கோட்பாட்டை ஏகலைவன் நிராகரித்துள்ளார். இக் கூற்று மாக்சிஸத்தின் வளர்ப்பு அல்ல: மாறாக மாக்சிஸத்தை மறுதலிப்பதே! தேசிய இனமுரண்பாடு முதலாளித்துவத்தின் வெளிப்பாடே அல்ல என்ற ஏகலைவன், அல்தூஸரின் கருத்துக்கள் எதைநோக்கிச் செல்கின்றன.

ஒரு பொருளின்றி எதுவுமே உருவாவதில்லை. இதை மறுப்பவர்கள் கருத்துமூலம் சிலவிடயங்களை காட்டிவிடுகின்றனர். இவ்விரு கூற்றுக்களிலிருந்தே பொருள் முதல்வாத, கருத்து முதல்வாத கோட்பாட்டின் அடிப்படைகள் வரையப்படுகின்றன. தேசிய இனமுரண்பாடு, ஒரு முதலாளித்துவத்தின் வெளிப்பாடல்ல என்ற கூற்றின் ஊடாக பொருள்முதல்வாதம் மறுக்கப்படுகிறது. இன்னுமொரு பக்கத்தில் இது முதலாளித்துவ கோரிக்கை அல்ல எனின் இது பாட்டாளி வர்க்கக் கோரிக்கையா? ஒரு பொருளின்றி தேசிய இனமுரண்பாடு இருக்கவே முடியாது. தேசிய இன முரண்பாடு பொருள் சார்ந்தும், வர்க்கம் சார்ந்தும் விடுகிறது. இதை ஒட்டிய அடிப்படை மாக்சிஸமான லெனின் மேற்கோள்ளைப் பார்ப்போம்.

"ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் முதலாளி வர்க்கம் தனது சொந்தத் தேசிய சிறப்புரிமையை அடையவும், "சுதந்திர" நாட்டிலுள்ள தொழிலாளர், விவசாயிகளைச் சுரண்டுவதற்கான சிறந்த நிலைமைகளை நிலைநாட்டும் நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே சுயநிர்ணயம் கருக்கொள்கிறது." என்ற லெனினின் கூற்று- ஒரு அடிப்படை மாக்சிஸ விதியாகும்.

இதை மறுக்கும் ஏகலைவன், அல்தூஸர் அனைத்து மக்களும் வெட்ட வெளியில் தேசிய இனப்பிரச்சனை தோன்றுவதாக வரலாறு, இயங்கியல் பொருள் முதல் வாதத்தை, நிராகரித்தும் மழுப்பியும் வாதிட்டுள்ளனர்.

இலங்கையில் தேசிய இனமுரண்பாடு எப்படி எழுந்தது. அது முதலாளித்துவக்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோரிக்கை இல்லையா? தமிழ்–சிங்கள மக்களுக் கிடையில் திடீரெனக் இக்கோரிக்கை வந்து குதித்ததா? இல்லையே. ஆளும் வர்க்கம் தனது சுரண்டும் கனவுகளோடு தமக்கு எதிரான வர்க்கப் போராட்டத்தை தவிர்க்க தமிழ்த் தேசிய இனத்தை அடக்கினர். இதற்கு தமிழ் தேசிய இனப்பிரிவின் பிரதிநிதிகள் தமது சுரண்டும் ஆசைகளுடன் அதை குறுந் தேசிய இனவெறியாக வளர்த்தெடுத்தனர். இங்கு தேசிய இன முரண்பாடு எழுச்சி பெற்றது என்பது வர்க்கப் போராட்டத்தைத் தடுக்க சுரண்டும் வர்க்கம் முன்தள்ளியதே. ஆகவே இது சுரண்டும் வர்க்கத்தின் முதலாளித்துவக் கோரிக்கையாக பரிணாமித்து விடுகிறது. லெனின் எழுதுகின்றார்: "சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை உள்பட, ஜனநாயத்தின் பல்வேறு கோரிக்கைகளும், தனி நிலையில் இயங்குபவை அல்ல. அதற்குப் பதிலாக, பொதுவான ஜனநாயக (இப்போது பொதுவான சோசலிச) உலக இயக்கத்தின் ஒரு சிறுபகுதியே. அவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட சில திட்டவட்டமான சமயங்களில், பகுதி என்பது பொதுப் பிரச்சனைக்கு முரணாகப் போகக்கூடும். அப்படி முரண்படுகிறபோது, அதை நிராகரித்துவிட வேண்டும்." (லெ.தே.நூ. 19: 257–258). அனைத்து மக்களின் கோரிக்கையாக வானத்திலிருந்து விழுந்தது என வாதிடும் ஏகலைவன், இதை முதலாளித்துவ கோரிக்கை அல்ல என வாதிடும் அடிப்படை என்பது எதிர்காலத்தில் ஒரு ஐக்கியப்பட்ட வர்க்கப் புரட்சிக்கான எதிர்காலக் கோரிக்கைகளை நிராகரிப்பதில் போய் முடிகிறது. அதாவது இது முதலாளித்துவ கோரிக்கையே அல்ல என்ற வாசகத்தின் ஊடாக ஐக்கியப்பட்ட புரட்சிக்கான–எதிர்கால நிலைமைகள் பற்றிய அடிப்படைக் கோட்பாட்டை நிராகரித்து நிற்கின்றார். ஒரு செயலை நிலையானதாகவும்(தமிழீழம்), ஐக்கிய இலங்கைக்கான ஒரு புரட்சி நிலைமை வரமுடியாது என்ற நிலைக்கு வரக் காரணம் தேசிய இனமுரண்பாடு ஒரு முதலாளித்துவ கோரிக்கை அல்ல என வாதிடுவதில் கருக்கொள்கிறது.

50 வருட இலங்கை வரலாற்றிலும் சரி, அதற்கு முந்திய காலனி ஆட்சி வரலாற்றிலும் சரி, தேசிய இன முரண்பாடு எப்போதும் முதலாளித்துவ சுரண்டல் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டதே. பிரித்தானியா பிரித்தாளும் அரசியல் முதல், மலையக மக்களின் பிரஜா உரிமைப்பறிப்பு உள்ளீடாக இன்றைய நிலைமைகள் வரை அனைத்துமே முதலாளித்துவத்தின் சுரண் டல் அடிப்படை நோக்கங்களில் கட்டியமைக்கப்பட்டதே. இது முதலாளித்துவ கோரிக்கை அல்ல என வாதிட முனையும் ஏகலைவன், அல்தூஸரின் கூற்றுக்களை வாசகர்கள் தெளிவாக இனம் காண முடியும்.



ஒரு தேசிய இன முரண்பாடு ஒரு முதலாளித்துவ கோரிக்கையாக எழுந்த பிற்பாடு, அது அனைத்து மக்கள் கோரிக்கையாக, தொடர்ச்சியான அடக்கு முறைக்கு ஊடாக பரிணாமிக்கின்றது. இவ் முதலாளித்துவ கோரிக்கைக்கு பதிலீடாக பாட்டாளிகள் தலைமீட்டைச் செய்யாத நிலைமையில் இது ஏற்பட்டு விடுகிறது. அனைத்து மக்களின் கோரிக்கையாக மாறிய பிற்பாடு பாட்டாளிகளின் கடமை இதில் ஊன்றி நிற்க வேண்டியதாகிறது. ஆனால் பாட்டாளிகள் எப்போது தனது சொந்தத் தேசிய இனத்தை நேசிக்கிறார்களோ, அதே நேரம் சர்வ தேசியவாதிகளாகவும் இருப்பர். அந்த வகையில் ஒரு ஐக்கியப் புரட்சிக்கான அனைத்து வழிகளிலும் தொடர்ந்து போராடுவர். இதை கட்டுரையின் தொடர்ச்சியில் விரிவாக ஆராய முற்படுகிறோம்.

சித்தாந்தம் (IDEOLOGY) தொடர்பாக பிரதிபலிப்புக் கோட்பாடு (REFLECTIVE THEORY) இப்போது கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகி வருகிறது. என்பது வெறுமனே பொருளாதாரத்தின் பிரதிபலிப்பே என்று குறுகிய பார்வையானது கடந்த காலத்தில் சமூகத்தில் எழுந்த பல தீவிரமான பிரச்சனைகளை விளங்கிக் கொள்ளத் தடையாக இருந்துவிட்டதாக இப்போது விமர்சிக்கப்படுகிறது. என்ற ஏகலைவனின் மற்றுமொரு மாக்சிஸ விரோதக் கூற்றை ஆராய்வோம்.

சித்தாந்தம்,

பொருளாதாரத்தின் மேல்தான் உருவாகிறது என்ற மாக்சிஸ, லெனினிய, மாவோ சிந்தனைக்கு மறுதலையாக சித்தாந்தமானது பொருளாதாரத்தின் அடிப்படையின்றி உருவாக முடியும் என்ற அல்தூஸர், ஏகலைவன் கருத்துக்கு இடையில் விமர்சனம் எழுகிறது. சித்தாந்தம் பொருளாதாரத்தில்(பொருள் சார்ந்து) இருக்க முடியாது என்ற கோட்பாடு கருத்து முதல் வாதமே. மாக்சினால் முற்றாக முறியடித்து உருவாக்கப்பட்ட மாக்சிஸ சித்தாந்தம் பொருளை அடிப்படையாகக் கொண்டது. அதற்கு எதிராக இருந்தவை கருத்தை முதன்மையாகக் கொண்டு இருந்தது. இதை ஒட்டிய லெனினின் கூற்றைப் பார்ப்போம். "நீதி, மதம், அரசியல், சமுதாயம் சம்மந்தமான எல்லாவிதச் சொல்லடுக்குகளும் பிரகடனங்களும், வாக்குறுதிகளுக்கும் பின்னே ஏதாவது ஒரு வர்க்கத்தின் நலன்கள் ஒளிந்திருப்பதைக் கண்டுகொள்ள மக்கள் தெரிந்து கொள்ளாத வரையில் அரசியலில் அவர்கள் முட்டாள்தனமான, ஏமாளிகளாகவும் தம்மைத்தாம் ஏமாற்றிக் கொள்வோராகவும் இருந்தனர்."–நூல்திரட்டு.1

லெனினின் இக்கூற்றை மறுக்கும் ஏகலைவன், அல்தூஸர் மாக்சிஸத்தின் ஒரு அடிப்படை விதியை மறுதலிக்கின்றனர். சித்தாந்தத்திற்கு வர்க்கம் இருக்க முடியா தொன்பது கருத்து முதல் வாதமாகும். வர்க்கம் என்ற வரையறையும் பொருளாதாரத்தின் அடிப்படையில் வரையறுக்கப் பட்டது என்பதை வாசகர்கள் காண்பார்கள். மாக்சிஸத்திற்கு முரணாக இருந்த சித்தாந்தங்கள் எப்போதும் கருத்து முதல் வாதமாகவே இருந்து வந்துள்ளது. ஒரு பொருளின்றி கருத்தாக எப்போதும் இருந்துள்ளது. ஒரு சித்தாந்தத்திற்கு ஒரு வர்க்க அடிப்படை உண்டு. அது ஒரு பொருளாதாரத்தை பிரதிபிட்ட வண்ணமே இருக்கும். இந்த இடத்தில் மாக்சின் புகழ்பெற்ற கூற்றுக்களை கட்டிக்காட்ட முடியும். "மனிதர்களின் உணர்வு அவர்களுடைய வாழ்க்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலையை நிர்ணயிப்பதில்லை: அவர்களுடைய சமூக வாழ்க்கை நிலையே அவர்களுடைய உணர்வை நிர்ணமிக்கிறது."

–நூல் தொகுதி, 4–

உணர்வு என்பதில் இருந்தே சித்தாந்தங்கள் உருவாகுகின்றன. உணர்வு முதன்மையானது எனக் கருதும் கருத்து முதல்வாதிகளே சித்தாந்தங்களுக்கும் – பொருளுக்கும் இடையிலான உறவை மறுக்கின்றனர். சமூகவாழ்வே உணர்வுகளைத் தீர்மானிக்கின்றன. சமூக வாழ்வானது பொருளாதாரத்தால் தீர்மானிக்கப்படும் போது, அதன் உணர்வுகள் சித்தாந்தமாகப் பரிணாமிக்கும் போது, சித்தாந்தம் எப்படி பொருளாதாரம் சாராமல் இருக்க முடியும்?

பொருளாதாரம் சாராதது எனக்கூறும் சித்தாந்தவாதிகள் எப்பொழுதும் பொருள் சாராத கருத்தையே முதன்மைப் படுத்தினர். அவர்களே கருத்து முதல்வாதத்தின் அடிப்படையை உயர்த்திப் பிடிப்பவர்கள். ஒரு மனிதனின் சிந்தனை என்பது சமூக அமைப்புச் சார்ந்து அதன் உணர்வாக வெளிப்படும் பொழுது அச் சமூக அமைப்பின் பொருளாதாரத்தின் மேல் அது கட்டப்படுகிறது. சித்தாந்தம் வர்க்கம், பொருள் சார்ந்தது அல்ல என வாதிட முனையும் ஏகலைவன், அல்தூஸர் கருத்து முதல் வாதத்தின் ஊற்று மூலமாகத் தம்மை இனம் காட்டுகின்றனர். மாவோ விளக்கும் ஒரு கூற்றைப் பார்ப்போம்.

"சோசலிச மாற்றம் இரண்டு மடிப்புக்களிலான கடமைகளை உடையது. ஒன்று அமைப்பு முறையை மாற்றுவதற்கானது, மற்றது மனிதனை மாற்றுவதற்கானது. அமைப்புமுறை கடமையை மட்டும் உள்ளடக்கியதல்ல: அது மேல் கட்டு மானத்தை, முதன்மையாக அரசு என்ற கருவியையும், சித்தாந்தத்தையும் உள்ளடக்கியது. எடுத்துக்காட்டாக பத்திரிகைத் துறைக்கு வர்க்கத்தன்மை கிடையாது, வர்க்கப் போராட்டத்தின் கருவியல்ல என்று சிலர் சொல்லுகின்றார்கள். அவர்கள் தவறாகக் கொண்டுள்ளார்கள். குறைந்தது ஏகாதிபத்தியம் மறைந்து ஒளியும் வரை பத்திரிகைத்துறை மற்றும் சித்தாந்த அரங்கத்திலான பிறதுறைகளும் வர்க்க உறவுகளையே பிர தியலிக்கும். பள்ளிக் கல்வி, இலக்கியம், மற்றும் கலை ஆகிய அனைத்தும் சித்தாந்த பரிமாணத்தின் கீழ் விழுகின்றன. மேல் கட்டுமானத்தைச் சேர்ந்தவை, ஒரு வர்க்கத்தன்மை உடையவை. இயற்கை விஞ்ஞானத்தைப் பொறுத்தவரை, அவை இரண்டு அம்சங்களைக் கொண்டிருக்கின்றன. அப்படியே எடுத்துக் கொண்டால் இயற்கை விஞ்ஞானத்திற்கு வர்க்கத்தன்மை இல்லை– என்றும் யார் படிக்கின்றார்கள் யார் பயன்படுத்துகின்றார்கள் என்ற பிரச்சனைக்கு வர்க்கத்தன்மை உண்டு."

–மா ஓ–தொகுதி, 5.–

இன்று மட்டுமல்ல, அன்று இதுபோன்ற கோரிக்கைகள் பலதை எழுப்பினர். இது மாக்சிஸத்தைத் திரித்ததுடன்: அதைப்போல் இசைக்கும், சித்தாந்தத்திற்கும் வர்க்கம் இல்லையென வாதிட முனைவதன் நோக்கம் வர்க்கப் புரட்சிக்கு வேட்டுவைப்பதே. இதை மறுக்கவோ என்னவோ கட்டுரையின் தொடரில் எழுதுவதைப் பார்க்காது மேலோட்டத் தைப்பார்க்க கோருகின்றனர்.

அதாவது தாம் எழுதிய கட்டுரையைப் பார்க்காது, அதன் உள்ளடக்கத்தின் திரிபைப் பார்க்காது தன்னைப் புரட்சியாளனாக அங்கீகரித்து அணிதிரளக் கோருகின்றனர்.

அடுத்து சிந்தனை, சக்தி தொடர்பாக பார்க்கும்போது: ஒரு பொருளைத் தொட நினைக்கும் உங்கள் செயல்பாட்டில் பொருள் முதன்மையாகிறது. தொட நினைக்கும் முன் தொடும் பொருள் இருப்பதால் மட்டுமே தொடுகை என்ற சிந்தனையே வருகிறது. சிந்தனை, செயலுக்கு முன் கூட பொருளே முதன்மையாகிறது. பொருளின்றி அவைகள் இருக்க முடியாது. சிந்தனை என்பது பொருள் சார்ந்தே இயங்க முடியும். இல்லாது கடவுள் உள்ளார் என்பது, பொருள் இன்றி(கடவுள் இன்றி) பச்சையாக கற்பனையில் கூறப்படும் செயற்பாடானது கருத்து முதல் வாதமே. எனவே ஒரு சித்தாந்தம் பொருள் சார்ந்து மட்டுமே இருக்கமுடியும். அது மட்டுமே பொருள் முதல் வாதமாகும். அதுவே மாக்சிஸமாகும்.

ஒரு சித்தாந்தம் பொருளின்றி இருக்க முடியுமென ஏகலைவன் கருதுவது கருத்து முதல் வாதமாகும். இது மாக்சிஸத்தைச் சாட்டி, இவரின் திரிபேயாகும். இதை மேலும் விரிவாக, கட்டுரையின் தொடர்ச்சியாக விவாதிக்க முனைகிறோம்.

பெண்ணடிமைத்தனம் என்பதை தனிச் சொத்துடமையின் தோற்றத்தடன் சேர்த்து விளக்க முனைந்தவர்கள், தனிச்சொத்து உடமையின் மறைவுடன் பெண்ணடிமைத்தனமும் மறைந்த விடுமென எதிர்பு கூறியுள்ளனர். ஆனால் சோசலிஸ சமூகங்களில் பெண்ணடிமைத்தனத்தின் சில வடிவங்கள் தொடர்ந்து நீடித்து வந்ததுடன், இவை சட்டரீதியாக சோசலிஸ சமூகத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகள் கூட பெண்கள் அனுபவிப்பதற்குத் தடையாக இருந்தன என்பது இன்று வரலாற்றின் உண்மையாக உள்ளது. அத்துடன் முதலாளித்துவ சமூகங்களில் பெண்களது உரிமைகளின் போராட்டங்களை இடதுசாரிகள் அணுகும்போது சமவேலை, சம ஊதியம், என்பதற்கு மேல் அக்கறை காட்டாததினால் பெண்களது சொத்துரிமை, வாக்குரிமைக்கான போராட்டங்கள் இடதுசாரி இயக்கங்களுக்கு வெளியே நடைபெற்றன. இன்றும் கூட நமது சூழலில் பெண்கள் உடல், உடற்செயற்பாடுகள் மீது தமது சொந்தக் கட்டுப்பாட்டை நிறுவுவது பற்றி பேசும் போது, அவர்கள் வர்க்கம் பற்றி எதுவும் பேசவில்லை என்று குற்றம் சாட்டுபவர்களையும் காணமுடிகிறது. –என மற்றுமொரு எடுகோளை, ஏகலைவன் தனது கட்டுரையின் மூலமாக எடுத்துள்ளார்.

ஏகலைவன், ஒரு பிரச்சனை மீது மாக்சிஸம் பற்றிய முழுமையான கோட்பாட்டை காணத்தவறி ஒரு பிரச்சனையை அணுகும்போது இதுமாதிரிக் கோரிக்கையை முன் வைக்கவும், அனைத்துப் பெண்களின் கோரிக்கையாக மாக்சிஸத்தை சிதைக்கவும், கோரிக்கை விடுகிறார். ஏகலைவனின் எல்லா கருத்தமைவும் முன்பு விவாதித்தது போல் ஒரே தன்மை வாய்ந்தவைகளாகும். கடந்த காலத்தில் எமது கட்டுரைகளுக்கு பதில் எழுதியிருப்பின் இப்படி கோரமுடியாது போய் இருக்கும். சோசலிஸ சமூகத்தில் பெண் உரிமை களுக்கான பல சட்டங்கள் இருந்தன. பல விடயங்களில் பெண்கள் விடுதலை பெற்றும் இருந்தனர். ஆனால் பெண்ணடிமைத்தனத்தின் மிச்சசொச்சங்கள் தொடர்ந்தன என்பது உண்மையே. அரசை ஒரேயடியாக, உடனடியாக ஒழித்துவிட வேண்டுமெனக் கோரிய 'அராஜக'வாதிகளுக்கும் –ஏகலைவனின் கோட்பாடுகளுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடையில் எந்த வேறுபாடும் கிடையாது. பெண்ணடிமைத் தனம், தேசிய சுயநிர்ணய கூறுகள், பாட்டாளி வர்க்கம் ஆட்சிப்பீடம் ஏறியவுடன் திடும், திடுமென ஒழித்துக்கட்டப்பட்டு விட வேண்டுமென்ற நிலைக்குச் சென்று விடுகின்றனர். நீண்டுவந்த சமூதாயத்தில் ஒரு புரட்சி திடுமென எல்லாவற்றையும் மாற்றிவிடாது. அது படிப்படியாகவே மாற்ற முனையும். அம்முயற்சிகளின் ஊடே கூட பழையதை மீளமைக்க சுரண்டும் வர்க்கம் போராடும். எனவே சோசலிஸ சமூகம் உள்ளவரை போராட்டம் தொடர்ந்து நிகழ்கிறது. இரண்டுக்கும் இடையிலுள்ள முரண்பாடு முன்வர தீவிரமாக முனையும். பெண்களின் பூரணவிடுதலை, தேசிய இனத்தின் பூரணவிடுதலையை ஒரு வர்க்கமற்ற சமுதாயத்தில் மட்டுமே பெறமுடியும். அதுவரை அழிந்துவரும் வர்க்கம் நச்சு இட்டபடி பழைய சமுதாயத்தைப் பாதுகாக்க இடை விடாது போராடும்.

ஒரு சோசலிஸ சமூகமுள்ள காலம்பற்றிய மாக்சிஸத்தின் தெளிவான ஆய்வின் பின்னே ஏகலைவன் இவைகளைக் காண முயலல் வேண்டும். வரலாற்று இயக்கவியலையும், அதிலிருந்து இயக்கவியலின் இயக்க விதிகளை ஒவ்வொரு பொருளிலும் இயங்கும் தன்மையைக் காணல் வேண்டும். சோசலிஸ சமூகம் உருவான அன்றே பெண்ணும் விடுதலை அடைந்து விடுவாள் என்ற இயங்கியல் மறுப்புடன் கூடிய நிலையில் கோட்பாட்டை தெரிவு செய்யும் போது பெண் விடுதலை பற்றி கொச்சைத்தனமான நிலைக்குச் சென்றுவிடுகின்றனர். பெண் அடிமைத்தனம் தனிச் சொத்துரிமையின் உருவாக்கத்தில் உருவானது என்ற மாக்சிஸத்தின் அடிப்படைக் கோட்பாட்டை மறுக்கும் ஏகலைவனும், அல்தூஸரும் மாக்சிஸத்தை வளர்க்கவில்லை. மாறாக மறுதலித்துத் திரிக்கின்றனர்.

இக் கோட்பாட்டை வந்தடைய வரலாற்று, இயங்கியல் பொருள் முதல்வாதத்தின் தொடர்ச்சியை நிராகரித்து தனித்தனி அங்கங்களாக நிறுவ முயல்கின்றனர். தனிச் சொத்துடமையின் உருவாக்கத்துடனேயே பெண்கள் அடிமை கொள்ளப்பட்டனர் என்ற ஆய்வை மாக்சும், எங்கல்சும் பல நீண்ட விஞ்ஞானபூர்வமான கருத்துக்களுடன் முன் வைத்தனர். இதை லெனினும், மாவோவும் மேலும் வளர்த்தெடுத்து: இன்று - மாக்சிஸ, லெனினிய, மாவோ கட்சிகளால் மேலும் மேலும் வளர்த்து எடுக்கப்படுகின்றன.

இதை மறுக்கும் அல்தூஸர், ஏகலைவன் தனிச்சொத்துரிமை உருவாக்கம் இல்லாமல் பெண் அடிமைப்பட்டாள் எனக் கூறி வரலாற்று பொருள் முதல்வாதத்தையும், இயக்கவியல் பொருள் முதல்வாதத்தையும், நிராகரிக்கின்றனர்.

வரலாற்றுப் பொருள் முதல் வாதமும், இயக்கவியல் பொருள் முதல் வாதமும் நிறுவியுள்ளபடி சமுதாயம் ஆரம்பத்தில் பெண்களால் தலமை தாங்கப்பட்ட ஒரு சமுதாயமாக இருந்துள்ளது. அங்கு இருந்தசமுதாயத்தில்(புரதான கம்யூனிஸ சமுதாயம்.) பெண் அடிமைப்படுத்தப் படவில்லை. இதை எல்லாப் பெண்நிலைவாதிகள் முதல், சாதாரண அறிவுள்ளவர்கள் வரையும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றுதான். ஆனால் ஏகலைவனும், அல்தூஸரும் இதை மறுத்து ஆரம்பம் முதலே அல்லது திடீரென பெண் அடிமையானாள் என்பதன் மூலம் தனிச்சொத்துடமையுடன் பெண் அடிமையானாள் என்பதை மறுப்பதன் நோக்கம் பெண்களை இழிவுபடுத்தவே.

எப்படிப் பெண்ணானவள் தனிச்சொத்து உருவாக்கத்துடன் அடிமையாக மாற்றப்பட்டாள் என்பதை வரலாற்று பொருள் முதல்வாதம் இயங்கியலுடன் விளக்கியுள்ளது. அதுபற்றிய நீண்ட கட்டுரையை இதில் தவிர்க்கிறோம். இங்கு ஏகலைவன் இதை மறுப்பதன் மூலம் பெண் ஒடுக்குமுறை-பொருள்(பொருளாதாரம்) சாரவில்லை என நிறுவுவது அவசியமாகிறது. அது மட்டுமே புலிக்கும், இலக்கியத்திற்கும் வர்க்கசார்பு இல்லையென நிறுவி வர்க்கப் போராட்டத்தை சிதைக்க ஒரே ஒரு வழியாகும்.

தனிச்சொத்தின் உருவாக்கத்தில் பெண் அடிமை உருவாகவில்லை என்ற ஏகலைவனின் கூற்று: மறுபுறத்தில் ஆணாதிக்கம் பொருளாதார அடிப்படையில் உருவாகவில்லை என இலேசாக வரையறுக்கின்றனர். இதைவிட மோசடி எங்கே உள்ளது? ஆணாதிக்கம் உருவாகிய தனிச்சொத்துரி மையின் காலத்தில் பெண்வீட்டில் பொருளாதார நலன்களுடன் நிறுவி அடிமைப்படுத்தப் பட்டனர். குழந்தையைப் பெறுதல் முதல் அவளின் அனைத்து வஉழைப்பும் ஆணாதிக்க சமூகத்தால் உறிஞ்சப்பட்டு, சுரண்டப்பட்டதை மறுப்பது என்பது போராட்டத்தை திசைதிருப்பி தொடர்ந்து நிலைநிறுத்துவதே ஆகும்.

இடதுசாரிகளின் சம ஊதியம், சமவேலை என்றவகையில் மட்டும் போராடியதைத் தவறு எனக் கூறும் ஏகலைவன் பெண்ணின் வாக்குரிமை சொத்துரிமைக்கு போராட வேண்டுமென வாதிட்டுள்ளார். எல்லாவற்றுக்கும் போராட முனைவது வர்க்கமற்ற, அரசியலை நிராகரிக்கின்ற ஒரு கோரிக்கை. ஒரு சமுதாயத்தில் ஒரு பிரிவில் எழும் கோரிக்கை கண்மூடித்தனமாக ஆதரிக்கக் கோருவது மக்களின் பின்னால் வால்பிடிக்க கோருவதேயாகும். புரட்சியாளர்கள் மக்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டுமே ஒழிய தன்னியல்பாக போராட்டத்தின் பின் வால்பிடித்துச் செல்லக்கூடாது.

சொத்துரிமை கோரும் பெண்களின் கோரிக்கையை எப்படி இடதுசாரிகளால் ஏற்கமுடியும்? தனிச்சொத்துரிமையை ஒழிப்பதே இடதுசாரிகளின் பணியாகும். சொத்துரிமையை ஒழிக்கக் கோருவதே இடதுசாரிகளின் தீர்க்கமான பணியாகும். சொத்துரிமையைக்கோரி ஆதரிப்பவர்கள் தனிச்சொத்து உடமையை அங்கீகரிப்பதுடன், அதன் இருப்பில் உருவான பெண்ணடிமைத் தனத்தின் இருப்புக்காகவும் போராடுவதில் இட்டுச்செல்லும். தனிச்சொத்துரிமை உள்ள வரை பெண் விடுதலை அடைய முடியாது. ஆனால் பாட்டாளிகள் அல்லாத பெண் அமைப்புக்கள் ஆணுக்குச் சமமாக பெண்களின் சொத்துரிமைக்கு போராடும் போது விமர்சனத்துடன் ஆதரிப்பர். ஆனால் அது பாட்டாளிகளின் கோரிக்கை அல்ல. பாட்டாளிகளிடம் இதுபோன்ற சொத்துக்களே கிடையாது. உதாரணமாக: நிலப்பிரபுகளிடம் நிலத்தைப் பறிமுதல் செய்யும் புரட்சியாளர்கள், அதை சிறு விவசாயிகளிடம் பங்கீடு செய்கின்றனர். ஆனால் அது அவர்களின் இலட்சியமல்ல. மாறாக கூட்டுப் பண்ணை அமைப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பர். சொத்துரிமைக்கான கோரிக்கையை புரட்சிக்கான தன்மைகளின் மீது காலத்துடன், நிலமையுடன் மட்டுமே ஆதரிக்கப்பட முடியும். வாக்குரிமைக்காக போராடவில்லை என்ற ஏகலைவனின் கூற்று பாதியளவிலே உண்மையாகும். வாக்குரிமை என்பது ஜனநாயகம் என்ற போலியான முகமூடிக்குள் உள்ள இச்சமூக அமைப்பைப் பெறுவதே. இந்த வாக்குரிமை இடதுசாரிகளின் கனவுகளல்ல. ஜனநாய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கத்தை இடதுசாரிகள் கோரும்போது அது அவர்களின் கனவுகள் அல்ல. ஒரு பாட்டாளி வர்க்க அரசில் சுரண்டும் வர்க்கத்திற்கு ஜனநாயகம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

வாக்குரிமை பெண்களுக்கு மட்டுமல்ல, ஏழைக்கும்கூட வழங்காத காலத்தில் அது எந்த நிலைமை, எந்தக்காலத்தில் எழுந்தன என்ற அடிப்படையில் மட்டும் இடதுசாரிகள் போராடி உள்ளனர். எழுப்பப்படும் கோரிக்கையின் தொடர்பு அனைத்து அம்சங்களுடன் சம்மந்தப்பட்டன. மலையக மக்களுக்கு பிரஜா உரிமை மறுக்கப்பட்டபோது அதற்கு குரல் கொடுப்பது, அவசியமான நிலமைகள் மட்டும் அதைத் தீமானிப்பவையாக இருந்தன. சில நேரங்களில் பெண்களில் ஒருபகுதி வாக்குரிமையை கோரியபோது ஏழைகளுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டு இருக்கவில்லை. இடதுசாரிகள் முழுப் பெண்களுக்கும், முழு ஏழைகளுக்கும் வாக்குரிமையை கோரினர். இதை நிராகரித்த வசதியடைத்த பெண்களின் கோரிக்கையை நிராகரித்தனர். கோரிக்கைகள் மீதான ஆய்வு அதன் புரட்சிகரதன்மை மட்டுமே ஆதரிக்க, முன்னெடுக்க ஒரே அளவு கோல் ஆகும். இந்நிலையில் ஏகலைவன் கோரும் உடல், உடற்செயற்பாட்டின் மீது கட்டுப்பாடு வேண்டும் என்ற கோரிக்கையின் மீது இடதுசாரிகள் எப்படி ஆய்வை செய்ய வேண்டும். ஏகலைவன் நாம் முன்பு விவாதித்ததின் மீது பதில் அளித்து இருப் பின் இக் கோரிக்கையை எழுப்பவே முடியாது போயிருக்கும்.

இந்த இடத்தில் பெண்களை உடல், உடற் செயற்பாட்டில் கட்டுப்பாடு அற்ற, ஒரு வரைமுறை அற்ற பந்துபோல் விபச் சாரி போல் வாழ்கின்றாள் என்பது மறைமுகமாக நக்கல் அடிப்பதற்கு சென்று விடுகிறது. மாறாக பெண் சுரண்டப்படுகிறாள். ஆணாதிக்க பொருளாதார ஆதிக்கத்தினுள் அடிமையாக வைக்கப்பட்டுள்ளாள்.

உடல் மீதான கட்டுப்பாடு என்கிறபோது பெண் என்பவள் ஒரு தனியான ஒன்றுடன் ஒன்று தொடர்புபடாத ஒரு உயிரல்ல. எல்லா பொருட்களையும் போலவும் பெண் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டபடி இருக் கின்கின்றாள். முரண்பாட்டு விதியுடன், இயங்கியலுடன் இயங்கும் பெண்களின் கோரிக்கை மற்றய சமூக இயங்கியலை பாதிக்காது இருக்க வேண்டும். பெண்ணின் வயிற்றில் உருவாகும் 'கரு' தொடர்பாக ஆராயும் போது ஒரு பெண்ணின் மீதான பலாத்கார வகையான அனைத்துக் கருவையும் அப்பெண் அழிக்க பூரண உரிமை வழங்கப்பட வேண்டும். இதைவிடுத்து தனது பூரண உடல் கட்டுப்பாட்டுடன் ஒரு உடலுறவின் பின்னர் பெறப்பட்ட கருவை அழிக்கக் கோரும் உரிமை உடல் கட்டுப்பாட்டின் மீதான செயலல்ல. ஏனெனில் உடல் கட்டுப்பாடு கரு உருவாகமுன் உடறுறவின் போது தீர்மானமாகி விடுகிறது. முரண்பாடு கரு உருவாக முன்பே எழுகிறது இதை இக்குருட்டு ஜென்மங்கள் வேண்டுமென்றே காணமாட்டார்கள். முன் கூட்டி ஒரு நிகழ்வில் உடல் கட்டுப்பாட்டை பெண் தீர்மானிக்க முடியும். அதன்பின் அக்கருவை அழிக்கக் கூறும் அனைத்துக் காரணங்களும் பெண் ஒடுக்கு முறையின் தொடர்சியான வடிவமாகும். இதில் மருத்துவ காரணத்தை விட்டே விவாதிக்கிறோம்.

உடல் சுதந்திரம் என்ற கோட்பாட்டின் ஊடாக குழந்தையினதோ சமூகம் மீது ஆணாதிக்கம் புரியும் உரிமையை பெண் கோரமுடியாது. எல்லோரும் சமம் என்ற கோட்பாடே அடிப்படையாக இருக்க வேண்டும். இன்று உடல் சுதந்திரம் என்று அடிப்படையில் தான் தன்னினச் சேர்க்கையும், விபச்சாரமும், பால் கொடுமையும், கரு அழித்தலும் கருக்கொள்கிறது. ஒரு சமூகத்தில் தனிமனிதன் சுதந்திரமானவன் என்பது பொய்யான வாக்காகும். இதை லெனினின் "யாராலும் சமுதாயத்தில் இருந்து கொண்டு, அதே போதில் சமுதாயத்தில் இருந்து சுதந்திரமாய் இருப்பது முடியாத காரியம்." – நூல் திரட்டு, 1–

ஒரு பெண்ணுக்கும் இது பொருந்தும். சமுதாயம் ஆண்களையும் சேர்த்தே உள்ளது. சமுதாயம், மொத்தமாக ஆண், பெண் கூறுகளால் ஆனது. அச் சமுதாயம் மீது ஒரு பொருளாதார அடித்தளம் உள்ளது. ஒரு பெண் தனது சொந்த உறவைத் தீர்மானிக்கவும், வாழ்ந்து வரவும், சமுதாயத்தில் உள்ள உரிமையை சமமாக பெற்றுக் கொள்ளவும் உரிமை உண்டு. அதை விடுத்து தனிச் சலுகை கோர முடியாது. இன்று உள்ள ஆணாதிக்க சமூகத்திற்கு பதிலாக கூட்டு அமைப்பிலான சமுதாயத்திற்காக போராட வேண்டும். தனிச் சலுகை என்பது தொடர்ந்து ஆணாதிக்க சமூகத்திற்குள் பெண்ணை இருத்தி வைக்கவே கோரும்.

4 a– கலை, இலக்கியங்களில் பாத்திரம் குறித்து கடந்த காலத்தில் முற்போக்கு சக்திகள் நடத்திய விவாதங்களை இன்று திரும்பிப் பார்க்கும் எவரும் அத்தனை மகிழ்ச்சி கொள்ள முடியாத நிலையே இருக்கிறது. "கலை கலைக்காகவா" என்ற பூர்சுவா கோசத்தை நிராகரித்தது சரியானது தான் எனினும், அதற்கு மேல் உள்ளடக்கத்திற்கு கொடுத்த அதீத முக்கியத்துவமானது கலை, இலக்கியங்களின் அரசியல் அம் சத்தை ஒரேயடியாகப் புறக்கணிப்பதிலும், இறுதியில் அரசியல் கோசங்களை கலை இலக்கியத்தின் பேரால் எழுப்பியதிலும் நல்ல விளைவுகளைக் கொடுக்கவில்லை என்பதை இன்று திரும்பிப் பார்க்கும் எவரும் புரிந்து கொள்ள முடியும்.

b– இசையின் வர்க்கத் தன்மை பற்றிய விவாதம் ஒன்று சில காலத்திற்கு முன்பு தமிழகத்தின் சில பத்திரிகைகளில் நடைபெற்றது. என ஏகலைவன் தனது அல்தூஸரின் கருத்துக்காக எடுத்துக் காட்டும் மற்றுமிரு மாக்சிஸ விரோதக் கருத்துக்களே இவை.

மொத்தத்தில் ஏகலைவன் மேல் எடுத்தியம்பிய ஐந்து விடயங்களிலும் ஒரே மாதிரியான ஒத்ததன்மை உள்ள மாக்சிஸ மறுதலிப்பும், கருத்து முதல்வாத கோட்பாடும், மாக்சிஸ, லெனினிய, மாவோ சிந்தனைக்கு பதில் அல்தூஸரின் பிரதியீட்டையும் கோரி நிக்கிறது.

இசையின் வர்க்கத் தன்மை பற்றி எழுப்பும் போது இசைக்கு வர்க்கம் இல்லையென ஏகலைவன் வாதிட முனைகிறார். இது பற்றி ஒருவிவாதம் எழும் பொழுதே இசையில் இரு முரண்பட்ட கூறுகள் இருப்பதை அங்கீகரித்து நிற்கிறது. இங்கேயே ஏகலைவனின் முரண்பாட்டை நாம் காணமுடியும். இசை என்பது ஒருபொருள் சாராது உருவாகுவது இல்லை. இசைக்கான உபகரணம் வேறு வேறானதாக உள்ள அதேநேரம் இசையின் வேறுபட்ட ஒலிகள் வெளிவரும் போது, இசை பண்பால் இனம் பிரிந்து வெளிப்படுகிறது. துன்பம், காதல், சந்தோஷம், வீரம், போர், எழுச்சி, உற்சாகம்... என எல்லா வகையிலும் ஒவ்வொரு இசையும், இசையின் வெளிப்படும் பண்புடன் நாம் இனம் காணமுடியும். துன்பம், காதல், சந்தோஷம், வீரம், போர்....... என வெளிப்படும் ஒவ்வொரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இசைவடிவமும் சமூக பொருளாதாரம் சார்ந்து ஒரு மேல்கட்டுமானமாகவே இயங்குகின்றன. இந்த இசை சமூக பொருளாதார கட்டுமானமாக இயங்கும் போது அது சமுதாயத்தில் உள்ள வர்க்கசார்பாகவும் வெளிப்படுகின்றன.

ஏகலைவன் வாதிட முனையும் வர்க்கமற்ற இசை என்பது சுரண்டப்படும் மக்களின் இசையை மறுதலிப்பதற்கே. 'மனிதம்' – 7,8 இல் பொப் மாலியின் "றெகே" இசை என்ற கட்டுரையை வாசகர்களை மீண்டும் பார்க்கக் கோரும் நாம் பொப் மாலியின் இசை ஒடுக்கப்பட்ட மக்களைச் சார்ந்து இருந்தமையால், அவர்களை விழிப்புற வைத்தமையால் எப்படி அதற்கு எதிராக ஆளும் வர்க்கம் போராடமுனைகிறது என்பதற்கு ஒருசிறந்த உதாரணமாகும். ஆகவே வர்க்க உலகத்தில் இசை வர்க்கம் சார்ந்தே உள்ளது என்பதை ஏகாதிபத்திய நடவடிக்கைகளே காட்டி விடுகின்றன. ஆனால் ஏகலைவன் அல்ல.

சோவியத் சோசலிஸ காலத்தில் மிகத்தெளிவாகவே இசையில் வர்க்க வெளிப்பாட்டை வெளிப்படுத்தினர். அதுபோன்று சினிமாவிலும் ஒருமனிதனின் முகத்திலும் கூட ஒரு வர்க்கத் தோற்றத்தின் வெளிப்பாட்டையும் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தி உள்ளனர். எங்கள் ஊர்களில் காலையில் 'ரேடியோ'விலும், கோவில் 'மைக்கு'களிலும் பக்தி இசை போடப்படுவதை அனுபவரீதியாக கண்டுள்ளோம். அவ் இசை நாஸ்திகனுக்கு எதிராகவும், கடவுளின் பொய்மையை உணரும் மக்களை இழுத்துப் பிடிக்கும் வகையிலும், கருத்து முதல் வாதத்திற்காக, ஒருவர்க்கத்தின் கருவியாக எப்படி எல்லாம் இயங்குகிறது என்பதை நாம் காண்கிறோம்.

புல்லாங்குழலிலோ, நாதஸ்வரத்திலோ, மேளத்திலோ,........... இசைக்கப்படும் ஒரு இசையில் –ஒரு சினிமாப் பாடலை ஒரு பெண்ணுக்கு எதிராகவும், சாதி ஒடுக்குமுறையை ஆதரிக்கவும், வர்க்க இருப்பைப் பாதுகாக்கவும், கோரி இசைக்கமுடியும் என்பதை நாளாந்தம் நாமே காண்கின்றோம். இப்படிப் பல இருக்க இசைக்கு வர்க்கம் இல்லையாம், எப்படி இருக்கிறது இவர்களின் கூத்து.

ஒரு இசை சிறுபான்மை இனத்திற்கு சார்பாகவும், பெண் விடுதலை சார்பாகவும் இருக்கமுடியும். இவ்விசையை பெரும் தேசிய இனமும், ஆணாதிக்க சமூகமும்: கேட்கத் தயாரின்மையையும், தடை உத்தரவு பிறப்பிப்பதையும், நாம் காண்கிறோம்–அனுபவிக்கிறோம். இப்படியெல்லாம் இருக்கமுடியும் எனில், ஏன் வர்க்கப் போராட்டத்திற்கு இசை இருக்கமுடியாது? சோம்பேறியின் இசையும், அவன் ரசனையும், உழைக்கும் மக்களின் இசையுடனும், அதன் ரசனையுடனும் வேறுபட்டன. இசைக்கு வர்க்கம் இல்லையெனில் பொப்பிசையும், யுத்தவெறிப் பாசிஸ இசையும், கொலைவெறி இசையும் அங்கீகரிக்கப்பட வேண்டும் அல்லவா? இசையின் சரி, பிழைக்கான ஒரே அளவுகோல் அதன் வர்க்கத்தன்மை மட்டுமே. அதுவே முற்போக்கு பிற்போக்கு என்ற இசையின் அளவுகோலும்.

அடுத்து ஏகலைவன் தொட்டுச் செல்லும் அழகியல் தொடர்பாக அழகியலை மாக்சிஸம் நிராகரித்ததில்லை. அழகியல் எப்பொழுதும் உள்ளடக்கத்துடன் இணைந்து வெளிப்பட வேண்டும். உலகப் புகழ்பெற்ற சோவியத் 'மாகசீம் கார்க்கி முதல், நவசீன இலக்கியத்தின் பிதா 'லூசுன்'வரை இன்னும் எண்ணற்ற எழுத்துக்களில் அழகியலும், உள்ளடக்கமும் மிகச்சிறப்பாகவே வெளிப்பட்டு நிற்கின்றன.

ஓவியங்கள், கலைகள் எனப் பார்க்கும் போது கூட உலகில் சிறந்த உள்ளடக்கத்துடன் கூடிய அழகியலையும் வெளிப்படுத்தி இருப்பது இடதுசாரிகள் உடையது மட்டுமே. இங்கு ஏகலைவன் யாருக்காக குரல்கொடுக்க முனைகிறார் எனில் புரட்சிக் காலகட்டத்திலும், புரட்சிக்குப் பிந்திய சமுதாயத்திலும் தம்மை நடுநிலையாளர்கள் எனக் கூறிக் கொண்டவர்கள், உள்ளடக்கத்தில் நடுநிலை என்ற போலியுடன் புரட்சிக்கான கருத்தை மறைமுகமாகக் கொச்சைப்படுத்தி, அதிகளவு அழகியல் ஊடாகத் தம்மை இனம் காட்டுபவர்களே!

சோவியத் இலக்கியத்தில் தடை செய்யப்பட்ட பல புத்தகங்கள் சோவியத்தில் வெளிவந்த போது அதை ஆதரித்து நின்ற எஸ். வி.ராஜதுரை இதே கருத்தைக் கொண்டவரே. சோவியத் இலக்கியங்கள் மீதான விமர்சனங்கள், ஆய்வுகள் அவ் ஆசிரியர்கள் முன்னே வைக்கப்பட்டு அதில் சோசலிஸ சமூகத்திற்கு முரணானவை தடை செய்யப்பட்டன. இங்கு நபர்கள் எனத் தனியாக இனங்காணப்பட்டு தடை செய்யப்படவில்லை. மாறாக ஒரு கோட்பாட்டின் அடிப்படையில் அங்கு ஆய்வுக்கு உள்ளாகுகின்றன. இது சோவியத்தில் அன்று இருந்த சில கோட்பாட்டுத் தவறுகளும் சேர்ந்து சில தவறுகளை இழைத்து விட்டன என்பது உண்மையே. பின்னர் இவைகளில் சில நிவர்த்தி செய்யப்பட்ட போதும் முழுமை பெறவில்லைத்தான். உண்மையில் இலக்கியம் மீதான ஒரே அளவுகோல் சுரண்டும் வர்க்கம் சார்பானதா? இல்லையா? என்பது மட்டுமே. சுரண்டும் வர்க்கம் சார்பானவை மீது விமர்சனத்தடன் கூடிய தடையைச் செய்யமுடியும்.

சுரண்டும் வர்க்கசார்பை மூடிமறைக்கவே எப்போதும் அழகியல் உயர்த்திப் பிடிக்கப்படுகிறது. ஆனால் உள்ளடக்கத்துடன் அழகியலைச் சிறப்பாகப் பயன்படுத்தியது பாட்டாளி வர்க்கம் மாத்திரமே. மாறாக அழகியலை சுரண்டும் வர்க்கம் தனது பொருளாதாரக் கொள்ளைகளுக்காகவே எப்போதும் உபயோகித்து வருகின்றன. அழகிய பெண்களை ஆணாதிக்க சமூகத்தின் முன் காட்சிப்பொருளாக வைப்பது முதல் நிர்வாணமாக சந்தைப்படுத்துவதும், உற்பத்தியில் ஒரே பொருளின் பல மாதிரிகளைச் செய்து மக்களை ஏமாற்றிக் கொள்ளையடிப்பது வரை, கலை எழுத்துத் துறையில் அரசியலை முதன்மைப்படுத்தி அதற்குள் மக்களை இருத்திவைப்பது வரைக்கும், எண்ணற்ற வகையில் அழகியலைப் பயன்படுத்தி வருகின்றன. புரட்சி வீச்சு, எழுச்சி, புரட்சிகர ஆட்களில் பல நடுநிலை அழகியல் நபர்கள் அதே சுரண்டும் கனவுகளுடன் வெளிப்படுகின்றனர். அழகியல், நடப்பிலுள்ள சமூக அமைப்பைச் சார்ந்து இயங்குகின்றது என்ற கோட்பாட்டை ஒட்டி நடுநிலையாளர்கள், அல்லது போலிகளின் எழுத்துக்கள் சுரண்டம் வர்கத்தை இயன்ற வரை பாதுகாத்தல் என நகர்ந்து விடுகிறது. இதற்கு அதிகளவு அழகியல் வீச்சு அவசியமாகிறது. பாட்டாளிகளைப் பொறுத்த வரையில் அழகியலை நிராகரித்த எந்தக் கலையும் கலையாக இருப்பதில்லை. அது கோசமாக மாறிவிடும். அழகியல், உள்ளடக்கம் மிகவும் முக்கியமானது. அதனால் மட்டுமே புரட்சியை நடத்தமுடிகிறது. மாவோ அழகியலின் முக்கியத்துவத்தை சுட்டிக் காட்டவதைப் பார்ப்போம்.

"நாம் அரசியல், கலை இரண்டின் ஐக்கியத்தை, உள்ளடக்கம் சாத்தியமான அதி உயர்ந்த அளவு பூர்த்தியான கலையின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடிவம் இரண்டின் ஐக்கியத்தைக் கோருகின்றோம். கலை இயல் பண்பு குறைந்த கலைப்படைப்புகள், அரசியல் ரீதியில் எவ்வளவு முற்போக்கு உடையவை ஆனாலும் அவ்வளவு சக்திவாய்ந்தவை அல்ல. எனவே தவறான அரசியல் கண்ணோட்டமுடைய கலைப் படைப்புக்கள், சரியான அரசியல் கண்ணோட்டமுடைய: ஆனால் கலை ஆற்றல் குறைந்த "சுவரொட்டி அல்லது முழக்கமிடும் நடை" தழுவிய போக்கு இரண்டையும் நாம் எதிர்க்கிறோம்."

–மாவோ–

(எனான் கலை இலக்கிய கருத்தரங்கு உரை)

வெளிப் பொருளைக் கண்டு மயங்கின் உள்ளே புழுக்கள் தான் நெளியும். இரண்டும் மிகச்சிறப்பாக அமையும்போது மட்டுமே கலையும் அழகியலும் செழிப்பு அடையும். எம்மூர் கோவில் சிலைகள் முதல் Picasso ஓவியம் வரைக்கும் அழகியல் கலை அம்சமெனப் பார்த்தால் எல்லாமே இருக்கும். ஆனால் உள்ளடக்கமோ பெண்களை இழிவுசெய்யவும், ஏகாதிபத்திய சீரழிவுகளையும், இதில் ஒட்டு மொத்தமாக இனம் காணமுடியும். அழகியல் என்ற மேல்க்கட்டுமானம் பொருளாதாரம் என்ற அடிக்கட்டமானத்தில் வர்க்கம் சார்ந்து செயற்படும் போது மட்டுமே அது ஒடுக்கப்படும் மக்களுடையதாக இருக்க முடியும். இலக்கியம் குறித்த லெனினின் கூற்றைப் பார்ப்போம்.

"எழுத்துப் பணியைப் போன்ற மென்மையான, தனிமனிதத் தன்மையானதான, ஒரு செயலை கூட்டுக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்த விரும்புகின்றீகளே! விஞ்ஞானம், தத்துவஞானம், அல்லது அழகியல் பிரச்சனைகளை பெரும்பான்மை வாக்குகள் மூலம் தொழிளாளர்கள் தீர்மானிக்க வேண்டும் என்கிறீர்களே! முழுக்க முழுக்க தனிமனிதத் தன்மையான சித்தாந்தப் பணி முழுக்க முழுக்க சுதந்திரமானதாய் இருக்க வேண்டும் என்பதை மறுக்கிறீர்களே!

கனவான்களே, பதறாதீர்கள்! முதலாவதாக இங்கு நாம் விவாதிப்பது கட்சி இலக்கியம் குறித்தும், கட்சிக் கட்டுபாட்டுக்கு அது கீழ்படிய வேண்டியது குறித்தும், தாம் விரும்பியபடி, தடை ஏதுமின்றி, எழுதவும், பேசவும், ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. அதேபோதில், பலரது விருப்பபூர்வமான இணைவாகிய திருவனத்திற்கும் (கட்சியும் அடங்கலாய்), கட்சியின் பெயரை உபயோகித்துக் கொண்டு கட்சிக்கெதிரான கருத்தோட்டங்களை ஆதரித்து நிற்கும் உறுப்பினர்களை வெளியே தள்ளுவதற்கும் உரிமையுண்டு...........

முழுமுதலான சுதந்திரம் என்பதாய் நீங்கள் பேசுவது முழுக்க முழுக்க கபடமான புரட்டேயாகும்....... யாராலும் சமுதாயத்தில் இருந்து கொண்டு அதே போதில் சமுதாயத்திலிருந்து சுதந்திரமாயும் இருப்பது முடியாத காரியம். முதலாளித்துவ எழுத்தாளர்கள் அல்லது கலைஞர் அல்லது நடிகையின் சுதந்திரம் எல்லாம் பண மூட்டைக்கு, லஞ்ச ஊழலுக்கு, விபச்சாரத்திற்கு கீழ்ப்படியும் முகமூடிபூண்ட சார்பு நிலை அன்றி வேறல்ல."

–நூல் திரட்டு, 1–
1905.

மேல்வாதிட்ட ஐந்து விடயத்தையும் குறிப்பிட்ட ஏகலைவன் இதுஏற்பட மாக்சிஸத்தை பொருளாதாரவாதமாக குறுக்கிப் பார்த்ததுதான் காரணம் என வாதிட முனைந்துள்ளார். தொடர்ச்சியாக அவர் அதை மேலும் பொருளாதாரவாதமே பலதரப்பட்ட பிரச்சனைக்கும் தீர்வு என மாக்சிஸம் கூறிச் செல்கின்றதாம். அத்துடன் தொடர்ந்து அவர் சமூக மாற்றங்களும், சமூக மாற்றங்களுக்கான முயற்சிகளும், மோதலும் கட்சிக்கு வெளியில் நிகழ்கின்றதாம். அது ஏற்பட மாக்சிஸம் பொருளாதார வாதத்திற்குள் முடங்கி விட்டனவாம். இதனால் புரட்சிகர சக்திகளின் தேவையாக அல்தூஸரின் வழிகளில் கோரி நிற்கிறார் ஏகலைவன். முன்னேறிய பிரிவினர் சரியாகவும் உறுதியாகவும் இருந்தபோதும் இவர்கள் நேசிக்கும் கோட்பாடு இவர்களைப் பலப்படுத்த தடுக்கிறதாம். கம்யூனிஸக் கட்சிகள் புரட்சிகர தலைமீட்டை நிகழ்த்துகின்ற பொழுது போராட்டத்தில் ஈடுபடுவோர் பல படிப்பினைகளைப் பெறுகின்றனராம். சிலர் நம்பிக்கை இழந்து ஒதுங்கிக் கொள்கின்றனராம். முன்னேறிய பிரிவினரிடம் பலவிடயத்திற்கு பதிலளிக்க சித்தாந்த பலம் இருப்பதில்லை என மாக்சிஸ, லெனினிய, மாவோ சிந்தனைகள் மீது தாக்குதலைத் தொடுத்து அல்தூஸரை துணைக்கும் அழைத்தும் உள்ளார் ஏகலைவன்.

இங்கு இவர் சிரழிந்துபோன முதலாளித்துவ கம்யூனிஸக்(?) கட்சிகளை குறித்த விமர்சனமல்ல. மாறாக 'சமர்', புதிய ஜனநாயகக் கட்சி, மாவோ மையம், கம்பூச்சியா கம்யூனிஸக் கட்சி, பேரு கம்யூனிஸக் கட்சி ........ உலகில் இன்றும் புரட்சிக்கான மாக்சிஸ, லெனினிய, மாவோ வழிகளில் போராடும் கட்சிகள் மீது அல்தூஸரின் வழிகளில் நின்றே இத்தாக்குதலைத் தொடுத்துள்ளார்.

பொருளாதார வாதம் என்றால் என்ன?

பொருளாதாரவாதம் தொடர்பாக மார்க்ஸ், எங்கல்ஸ், லெனினின் தொடுத்த தாக்குதலை தவறாக வியாக்கியானம் செய்தது மட்டு மன்றி தனதுகருத்தாக அவர்கள் கோட்பாட்டைத் திரித்து விவாதத்திலும் இறங்கியுள்ளனர்.

பொருளாதார வாதத்திற்கு எதிரான ஏகலைவனின் விமர்சனம் மாக்சிஸ, லெனினிய, மாவோ சிந்தனைகளின் விமர்சன அடிப்படையில் எழுப்பப் படவில்லை. இவர் மாறாக பொருளாதார வாதத்திற்கு எதிரான கோசத்தை உயர்த்திய படி பிறிதோர் கோடிக்கே சென்று விடுகிறார்

மார்க்ஸ், எங்கல்ஸ், லெனினின் பொருளாதார வாதத்திற்கு எதிராக போராடியது என்பது: வெறும் பொருளாதாரக் கோரிக்கைக்குள்,அரசியல் அதிகாரம் பற்றிய அக்கறை இன்றி, வர்க்கப் போராட்டத்தை நிராக ரித்த கோட்பாடுகள் மீதே அமைந்தன. பாட்டாளிகள் அரசியல் அதிகாரத்திற்கு போராடுவதும், அதுவே அவர்களின் விடிவிற்கு வழிகாட்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் போராடிய மார்க்ஸ், எங்கல்ஸ், லெனினின், மாவோ அதற்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தையும், மற்றும் அனைத்துத் துறைகளும் வெறும் பொருளாதார வாதத்திற்குள் முடங்கியபோதே அப்பொருளாதார வாதத்திற்கு எதிராக போராடினர்.

இது இப்படியிருக்க ஏகலைவன், அல்தூஸர், இதைத் திரித்து மறுதலையாக பொருளாதாரம் என்ற அடிக்கட்டுமானம் மீது இயங்கும் மேல் கட்டுமானமான நீதி, மதம், இலக்கியம்....., போன்ற துறைகள் பொருளாதாரம் சார்ந்து இயங்க முடியாது என லெனினின், மார்க்ஸ் பெயரால் திரித்துள்ளனர். இதனூடாக அரசு, நீதி, மதம், இலக்கியம்......., போன்றன வர்க்கம் அற்றவையாக, அவைமீது வர்க்கப் போராட்டம் இல்லாதாகி விட்டது என வாதிடவே இப்பொருளாதார வாதம் என்பதை கொச்சையாகத் திரித்தும், புரட்டியும் உள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாக்சிஸம் என்பது ஒரு தத்துவமாகப் பரிணாமித்தது என்பது தற்செயலான ஒரு விபத்து அல்ல. மாறாக முதலாளித்துவத்தின் வெற்றியுடன், பாட்டாளி வர்க்கத்தின் உருவாக்கத்துடன் மாக்சிஸம் உயிர்தெழுந்தது.

உலகில் கருத்து முதல்வாதமே அனைத்தின் மீதும் ஆட்சி புரிந்தபோது, அதற்கு எதிராக பொருள்முதல்வாத அடிப்படையில் மார்க்ஸ்க்கு முன் ஓரளவு ஆராய முற்பட்டாலும் மார்க்ஸின் வருகையுடனேயே பொருள் முதல்வாதத்தினதும், மாக்சிஸத்தினதும் முழுமையான செயற்பாடு புரிய வைக்கப்பட்டது. மாக்சிஸத்தின் முழுமையும் பொருளாதாரம் என்ற அடிக் கட்டுமானத்திலேயே உள்ளன என்பதை மார்க்ஸ் கண்டுபிடித் ததன் மூலமே மாக்ஸின் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன. இதைஒட்டி எங்கெல்ஸ், கால்மார்க்ஸின் உடல் புதைக்கப்படும் போது நிகழ்த்திய உரையின் ஒருபகுதியை எடுத்துக்காட்ட முனைகிறோம்.

"அங்கக இயற்கையின் வளர்ச்சி விதியை 'டார்வின்' கண்டுபிடித்ததைப் போல், மனித சமூகவரலாற்றின் வளர்ச்சிவிதியை மார்க்ஸ் கண்டுபிடித்தார். மனிதன் அரசியல், விஞ்ஞானம், கலை, சமயம், இதரவற்றில் ஈடுபடும் முன்னர் முதலில் உண்ண உணவையும், இருக்க இருப்பிடத்தையும், உடுக்க உடையையும் பெற்றிருக்க வேண்டும் என்னும் சாதாரண உண்மை இதுவரை சித்தாந்த மிகை வளர்ச்சியினால் மூடிமறைக்கப்பட்டது. ஆகவே உடனடியான பொருளாதார வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்தல், அதன் காரணமாக ஒரு குறிப்பிட்ட மக்களின் அல்லது குறிப்பிட்ட சகாப்தத்தின் போது அடைந்திருக்கின்ற பொருளாதார வளர்ச்சியின் அளவு என்னும் அடிப்படையின் மீது சம்மந்தப்பட்ட அரசு நிறுவனங்கள், சட்டவியல் கருதுகோள்கள், கலை, மற்றும் மதக்கருத்துக்கள் கூட வளர்ச்சியடைகின்றன. ஆகவே அதன் ஒளியில்தான் அவற்றை விளங்க வேண்டுமே அல்லாது இதுவரை செய்யப்பட்டதைப் போல மறுதலையாக விளங்கக் கூடாது.

— நூல் திரட்டு, 10 —

இக்கருத்தை நிராகரிக்கும் ஏகலைவன், அல்தூஸர் மாறாக பொருளாதாரம் அல்லாத கோட்பாட்டைக் கோரிநிற்கின்றனர். இது மாக்சிஸ வளர்ப்பு அல்ல; மாறாக மறுதலிப்பாகும். இருப்பிடமும், உணவும், உடுதுணியும் என்ற அடிப்படைப் பொருளாதாரக் கட்டுமானத்தின் மீதுதான் ஒரு தத்துவம் கட்டிஎழுப்பப்படுகின்றன. ஒரு மனிதனிடம் இவைகள் இன்றி உயிர்வாழ்தல் என்ற கேள்விக்கே இடமில்லை.

இந்தஇடத்தில் பொருளாதாரவாதம் பற்றி மார்க்ஸ், லெனினின் விமர்சித்ததாகக் கூறும் அல்தூஸர், ஏகலைவன் அவர்களின் கூறியதைத் திரித்துவிடுகின்றனர். ஒரு இயக்கப் போக்கில் ஒருஅமைப்புத் தவறும் பொருளாதாரக் கோரிக்கையுடன் தன்னை நிறுத்திக் கொள்வதிலேயே இவர்கள் விமர்சிக்கின்றனர். சம்பள உயர்வு, இதுபோன்ற இச்சமூக அமைப்புக்குள்ளான கோரிக்கையுடன் ஒருஅமைப்பு, ஸ்தாபனம் நிறுத்திக்கொள்ளும் போது அது வெறும் பொருளாதாரக் கோரிக்கைக்குள் அமுங்கி அமுகி விடுகின்றன. இதை நிராகரித்த லெனின், மார்க்ஸ் பொருளாதார அடித்தளத்தின் மீதான சமூகஅமைப்பை மாற்றக் கோரினர்.

பொருளாதாரக் கட்டமைப்பின் மீது அமைந்த ஒரு போராட்டத்தை அரசியல் புரட்சியாகவும், ....., என அனைத்துத் துறைகளிலும் மாற்றக் கோரினர். இச்சமூக அமைப்புக்குள், பொருளாதாரக் கோரிக்கை பொருளாதாரவாதமாக சீரழிந்து போவதையே எப்போதும் எதிர்த்து வந்தனர். இப்படி அவர்கள் வாதிட்டதை ஏகலைவன் சமூகத்தில் உள்ள அரசியல், தேசியம், மதம், பெண்விடுதலை, கலாசாரம், இசை, கலை...., போன்றவை பொருளாதார அடிக்கட்டுமானத்தின் மேலே கட்டியமைக்கப்படவில்லை எனத் திரித்துள்ளார். உலகின் இயக்க விதிகளையும், அடிப்படைகளையும் மார்க்ஸ் பொருளாதார அடித்தளத்தின் மீது உருவாகுவதை எப்போது கண்டாரோ, அப்பொதே மாக்சிஸத்தைப் படைத்ததுடன், பெறுமதி மிகுந்த 'மூலதனம்' என்ற நூலையும் எழுதினார். இதை ஒட்டி லெனினின்:

"பொருளாதார அமைப்புமுறை என்று அடித்தளத்தின் மீதுதான் அரசியல் மேல்க் கட்டமானம் கட்டப்படுகிறது என்று தெளிந்து ஏற்றுக்கொண்டவுடன், மார்க்ஸ் தனது பெரும்பாலான கவனத்தை இந்தப் பொருளாதார அமைப்பின் மீது செலுத்தினார்"

—"மாக்சிஸத்தின் மூன்று தோற்றுவாய்களும்"

— லெனின் —

அனைத்து மேல்க் கட்டுமானமும் அடிக் கட்டுமானமான பொருளாதாரத்தின் மீதே உருவாகுகின்றன. இதைமறுக்கும் ஏகலைவனின் கருத்துக்களை ஒட்டியே கரிகாலனின் புலிகள் வர்க்கமற்ற குழு, என்ற கருத்தும் அமைகிறது. புலிகளின் அரசியல் மீது பொருளாதார அடிப்படை எதுவுமில்லை என வாதிட்டது என்பது பொருளாதாரம் மேல்க்கட்டமானம் மீது ஆதிக்கத்தைச் செலுத்தவில்லை என்ற முடிவுகளில் இருந்தே எழுந்தது. இவ் முடிவு என்பது அடிக்கட்டுமான மாற்றமின்றி மேல்க்கட்டுமானத்தில் மாற்றங்களை நிகழ்த் தவும், புரட்சியை நடத்தவும் முடியுமென்ற முடிவுக்கும் வந்துவிடுகின்றனர். இதை ஏகலைவன் கட்டுரையின் தொடர்ச்சியில் இப்படி விபரிக்கின்றார். அதாவது உற்பத்தி சக்தியையும் உற்பத்தி உறவுகளையும் கொண்ட பொருளாதாரத்தை மார்க்ஸ் அடித்தளம் என்றார். கலை, இலக்கியம், மதம், சட்டம், அரசியல், போன்ற சிந்தனைகளை மேல்க்கட்டுமானம் என்றார். இவற்றில் மேல்க்கட்டுமானமானது இறுதியில் பொருளாதார அடித்தளத்தால் நிர்ணமிக்கப்படும் என்றார். மார்க்ஸின் இந்த ஆய்வானது அதனொரு கோடிக்கு இட்டுச் செல்லப்படுகையில் பொருளாதாரவாதம் ஆகிறது,, என்ற மார்க்சின் கோட்பாட்டை அல்தூஸரின் கூற்றுடன் நிராகரிக்க முற்பட்டுள்ளார். அத்துடன் எங்கல்சின் பிறிதொரு கூற்றை எடுத்துக் கையாண்டுள்ளார். அதாவது இறுதியாக வாரலாற்றை நிர்ணயிப்பது உற்பத்தியும், யதார்த்த ஜிவிதத்தை மறுஉற்பத்தியும் செய்வதுதான். இதற்கு மேலாக நானோ மார்க்ஸோ எதுவும் சொல்லி விடவில்லை. நாங்கள் சொல்லாததை யாராவது வேணடுமென்றெ திரிபு பண்ணி பொருளாதாரமேதான் எல்லாவற்றையும் நிர்ணயம் செய்யுமென்று சொன்னால் அது அர்த்தமற்றது. தவறானது. பொருளாதாரச் சூழல் அடிப்படையானது. ஆனால் மேலக் கட்டுமானத்தைச் சார்ந்த வர்க்கப்போரின் பலனாக ஏற்படும் சட்டவிகசகம் நீதிகளும், நிர்ணயங்களும், போராட்டத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈடுபடுபவர்கள் தன்னிச்சையாக மூளையில் ஏற்படுத்தும் அரசியல், நீதி, தத்துவ, மதக்கருத்துக்களும் வரலாற்றை நிர்ணயம் செய்கின்றன.,, என்ற எங்கல்சின் கூற்றை ஏகலைவன் கையாளும்போதே தவறானவகையில் தனது கருத்துக்குத் திரித்தும் விடுகிறார். ஏகலைவன் எடுத்துக் காட்டியிருந்த எங்கல்சின் இக்கூற்றும் மிகத் தெளிவாகவும் சரியாகவும் மாக்சிச அடிப்படையின் விதிகளை சரிவர உணர்த்தியுள்ளது.

எங்கல்சின் இக்கூற்றில் மேற்கட்டமானம், அடிக்கட்டுமானத்திற்கு இடையிலான உறவு, ஒன்றன் மீதான மற்றையதின் செயற்பாடு போன்றவற்றையும் அதன் வழிகளில் மிகமிகத் தெளிவாகவே உணர்த்திநிற்கின்றன. இன்று உலகில் பாட்டாளிவர்க்க அரசியல் கோரிக்கை மீது இதுபோன்ற பாட்டாளி வர்க்க இலக்கியம், கலை, கலாசாரம் ....., என அனைத்துக்கும் போராடாது, வெறும் பொருளாதார கோரிக்கை மீது தம்மை நிறுத்திக்கொள்ளும் பொருளாதார வாதிகள் மீதே இவர்களின் விமர்சனம் அமைந்து விடுகின்றன. இது ஒருபுறம் இருக்க, பொருளாதார வாதமென்ற இந்த விமர்சனத்தின் ஒரு கோடியைப் பிடித்த அல்தூஸரும், ஏகலைவனும் இதை மறுபக்கமாக திரித்துவிடுகின்றனர். அதாவது கலை, இலக்கியம்,அரசியல், ...., போன்றவற்றை பொருளாதாரம் சாராது இயங்க முடியுமென வாதிட முனைகின்றனர். இதை ஏகலைவன் மேல் வைத்த மேற்கோளே மறுத்துவிடுகிறது என்பதை காணாதது போல விட்டுவிடுகின்றனர். அடிக்கட்டுமானம் மீதுதான் மேல்கட்டுமானம் இயங்குகின்றது என்பதையும், பொருளாதாரமே அதனை நிர்ணயிக்கின்றன என்பதையும் (மேற்கோளைப் பார்க்கவும்), உற்பத்தியே வரலாற்றைத் தீர்மானிக்கின்றன என்பதையும், பொருளாதாரச் சூழல் அடிப்படையானது என்பதையும், தெளிவுபடுத்தி விடுகின்றன மேலே உள்ள மேற்கோள். அதாவது மேல்கட்டமானத்தில் தான் எப்போதும் வர்க்கப்போர்கள் மூள்கின்றன. அரசியல், கலை, மதம்......, என உள்ள இம் மேல்கட்டுமானம் பொருளாதாரம் என்ற அடிக்கட்டுமானத்தின் கோரிக்கையுடன் போர் மூள்கிறது. அது ஜனநாயமாகவோ, கலாசார மாகவோ, மதங்களின் போலித்தனங்களின் மீது எப்போது தாக்குவதன் ஊடாகவே அடிக்கட்டுமானம் மாற்றப்படுகின்றன. மேல் கட்டுமானத்திலான ஒருமாற்றம் பொருளாதாரத்தை மாற்றிவிடாது. ஒரு அரசியல் கட்சி மாற்றம், மதமாற்றம்,......., போன்றவை அடிக் கட்டமானத்தை மாற்றிவிடாது. அடிக்கட்டுமானமான பொருளாதாரம் மாறும் போதே எல்லாம் மாறும். இந்த இடத்தில் மாக்சின் ஒரு கூற்றை சுட்டிக்காட்ட முடியும்.

"எல்லாச் செல்வத்திற்கும் எல்லாக் கலாசாரத்திற்கும் உழைப்பே தோற்றுவாய்."

– நூல் திரட்டு, 9–

"சிவில் சமுகத்தின் உள்ளமைப்பை அரசியல் பொருளாதாரத்தில் தேடவேண்டும். ......உற்பத்தி உறவுகளின் கூட்டுமொத்தமே சமூகத்தின் பொருளாதார அமைப்பாக, அதன் உண்மையான அடித்தளமாக அமைகிறது. இதன்மீது சட்டம், அரசியல் என்ற மேல் கட்டம் எழுப்பப்பட்டு........ பொருளாதார வாழ்க்கையின் உற்பத்திமுறை சமூக, அரசியல், அறிவுலக வாழ்கையின் பொதுவான போக்கை நிர்ணயிக்கின்றது. மனிதர்களின் உணர்வு அவர்களுடைய வாழ்வை நிர்ணயிப்பதில்லை. அவர்களுடைய சமூக வாழ்க்கை நிலையே அவர்களுடைய உணர்வை நிர்ணயிக்கிறது...... பொருளாதார அடித்தளத்தில் ஏற்படும் மாற்றங்கள், அதன் மாபெரும் மேல்கட்டுமானம் முழுவதையும் சீக்கிரமாகவோ அல்லது சற்றுத் தாமதமா கவோ மாற்றி அமைக்கின்றன...... உற்பத்தியில் பொருளாதார நிலையில் ஏற்படுகின்ற பொருள்வகை மாற்றங்களும் (இயற்கை விஞ்ஞானத்தைப் போல இதைத் துல்லியமாக நிர்ணயிக்கமுடியும்.) சட்டம், அரசியல், மதம், கலைத்துறை அல்லது தத்துவ விஞ்ஞானத்துறைகளில் –சுருக்கமாகச் சொல்வதானால் சித்தாந்தத் துறைகளில்– இந்தப் போராட்டத்தை மனிதர்கள் உணர்ந்துகொண்டு........" – நூல் திரட்டு, 4–

எங்கல்சின் இதை ஒத்த இன்னுமோர் மேற்கோளை எடுத்துக்காட்ட விரும்பு கின்றோம்.

அரசியல்பொருளாதாரம் பொருள்களோடு சம்மந்தப்பட்டது அல்ல. அது நபர்களுக்கு இடையே உள்ள உறவுகளோடு, கடைசி நிலையில் வர்க்கங்களுக்கு இடையே உள்ள உறவுகளோடு சம்மந்தப்பட்டது. எனினும் இந்த உறவுகள் எப்பொழுதும் பொருள்களோடு பிணைக்கப்படுகின்றன: பொருள்களாகவே தோன்றுகின்றன.

அடிக்கோடு நமது – எங்கெல்ஸ் – நூல் திரட்டு, 4–

பொருளாதாரவாதம் என்பதை தவறாக வியாக்கியானம் செய்யும் ஏகலைவன் மேலக் கட்டுமானத்தின் மாற்றங்கள் பொருளா தாரத்தில் இல்லையென்ற நிலைக்கு சென்று விடுகின்றார். இதிலிருந்தே இசையில் வர்க்கம் இருக்கமுடியாது எனவும், கலை கலைக்காக என்ற கோட்பாட்டை ஆனால்., போடலும், 'தேசியம்' பொருளாதாரம் சார்ந்தது இல்லை எனவும், சித்தாந்தத்தின் மீது பொருளாதாரம் செயற்படவில்லை எனவும், பெண்களின் உடல் சுதந்திரம் பற்றிய வர்க் கப்பார்வை அற்ற கோரிக்கை மீது குரல் கொடுக்க முனைகிறார்.

தொடர்ந்து ஏகலைவன் விவாதிக்க முனையும் சமூக மாற்றங்களும், சமூகமாற் றத்துக்கான முயற்சியும், மோதலும் கட்சிக்கு வெளியே நிகழ்கின்றது என வாதிட்டுள்ளார். நாம் எங்கே? எனக்கேட்கும் அதேநேரம் கட்சிஅமைப்பு சாராத, வர்க்கம் பற்றித் தெளிவற்ற எந்தத் தன்னிச்சையான கோட்பாடும் சமூகமாற்றத்துக்கானது அல்ல. மாறாக அவை பெரும்பாலான அற்ப சலுகைகளுடன் பொருளாதார வாதத்திற்குள் முடங்கி விடுகின்றன. 50 களில் சோவியத்தில் முதலாளித்துவ மீட்சியும், 70 களில் சீனாவில் முதலாளித்துவ மீட்சியும், அக்காலத்தில் இருந்த கட்சிகளால் அதே சீரழிவுக்குள் சென்றதுடன் அதை உடைத்துக்கொண்டு வெளியில் வந்தவர்களும், புதியவர்களும் ஒரு புரட்சிகர எழுச்சிக்கான கட்டத்தில் தம்மை ஈடுபடுத்தி உள்ளனர். இது ஒருபுறம் நிகழ, பழைய திரிபுகளும் நவீனதிரிபுகளும் தொடர்ந்தும் இடைவிடாது மாக்சிசம் மீது சேறடித்துவிட இயன்றவரை முயல்கின்றன.

அந்தவகையில் உங்கள் கட்டுரைகூட பொருளாதாரவாதம் என்ற ஒருகோட்பாட்டை அதுதொடர்பான மாக்சிச, லெனினிய விமர்சனத்தை திரித்துவிட முனைந்து நிற்பதைக் காணமுடிகிறது. ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டத்தை பொருளாதாரவாதம் என்ற கோரிக்கைக்குள் முடக்குவதை எதிர்த்த மாக்ஸ், லெனின் போன்றவர்களது கோட்பாட்டைத் திரித்தது மேல் கட்டுமானத்தில் உள்ள அரசியல், மதம், கலை, இலக்கியம்,......, போன்றவற்றில் பொருளாதாரமும், வர்க்க உறவுகளும் எதையுமே தீர்மானிக்கவில்லை என்பது உங்கள் புரட்டல்களைச் செய்துவிடத்தான். அடுத்து ஏகலைவன் இவ் மாக்சிச விரோதநிலைக்கு வர மேற்கொண்ட மற்றுமொரு கோட்பாட்டைச் சுட்டிக்காட்ட முயல்கின்றோம்.

"உளவியல் சிக்மன் ஃப்பிராய்ட் பயன்படுத்திய கூறுகாண் படிப்பு என்பது வெறுமனே ஒருவரது படைப்புக்களை அவற்றில் எழுதப்பட்டவற்றை படிக்காமல், அவரது மனவோட்டத்தைக் கண்டறியும் நோக்கில் மாக்சின் முறையினை அவரது படைப்புக்களின் ஊடாக கண்டறியப் பயன்படுத்தப்பட்டது. அவ்வாறே பெக் சலாட் உடைய 'சிந்தனைக் கட்டு' என்ற கருத்தாக்கம், கறாரான கோட்பாட்டுத் தன்மையை வலியுறுத்தவும், அறிவுத்தோற்ற உடைவு என்னும் கருத்தாக்கம் மாக்சின் சிந்தனை வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களை பாச்சல்களை கண்டுகொள்ள அல்தூஸருக்கு பயன்பட்டது."- என ஏகலைவன் தொடர்கிறார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் மாக்சின் பெயரால், இது மாக்சின் முறையில் என கூறிக்கொண்டே மாக்சைப் பாதாளத்துக்குள் தள்ள நினைப்பதுதான். இதை மார்க்ஸ் எப்படிச் சொல்கிறார் எனப் பார்ப்போம்.

"ஒரு தனிநபர் தன்னைப்பற்றி என்ன நினைக்கிறார் என்பதைக் கொண்டு அவரைப்பற்றி முடிவு செய்வதில்லை. அதுபோலவே இப்படி மாறிக்கொண்டிருக்கும் காலகட்டத்தை அதன் உணர்வைக் கொண்டு முடிவுசெய்ய முடியாது. அதற்கு மாறாக இந்த உணர்வை பொருளாதார வாழ்க்கையின் முரண்பாடுகள் மூலமாக, சமூக உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையே உள்ள போராட்டத்தின் மூலமாகவே விளங்க முடியும்."

- நூல் திரட்டு, 4-

ஒருவனின் எழுத்துக்களில் அல்லாது மனவோட்டம் மூலமே ஒருவனைக் கண்டு அறியவேண்டும் என்று மாக்சின் பெயரால் ஏகலைவன், அல்தூஸர் புரட்ட நினைப்பது புரட்சிக்கு எதிரான கருத்துக்களை புரட்சிகர கருத்தாக தாம் நிலைநாட்டவே. ஒருவனின் எழுத்தும் அது இச்சமூகஅமைப்பின் மீது எதைப் பிரதிபலிக்கிறது என்பது மட்டுமே அவன் மீதான ஒரேஒரு அளவுகோல். தங்களின் குட்டிபூர்சுவா கருத்துக்களைக் கூட புரட்சிகர கருத்துக்களாக நீங்கள் முழங்குவதை வாசகர்கள் அளவிடுவதற்கும் இதுதான் அளவுகோல் ஆகும்.

அடுத்து ஏகலைவன் தொடரும் கருத்தைப் பார்ப்போம். "இயங்கியல் பொருள்முதல்வாதம், வரலாற்றுப் பொருள் முதல்வாதம் ஆகியவை இரண்டும் தனித்துவமான, வேறுபட்ட துறைகளென புரிந்து கொள்ளப்படாமல் ஒன்றோடு ஒன்று போட்டுக் குழப்பப்படுகிறது." என்ற அல்தூஸரின் அச்சொட்டான ஏகலைவனின் கருத்து, இயங்கியல் விதியையே மறுதலித்து விடுவதாகும். ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு துறையும் வேறுபட்டனவாக இருந்தபோதும் அவை ஒன்றுடன் ஒன்று நெருக்கமாக பின்னிப்பிணைந்தவை. வரலாற்றுப் பொருள் முதல்வாதம் இன்றி இயங்கியல் பொருள் முதல்வாதத்தை தனியாக உருவாக்கவே முடியாது. இயங்கியல் பொருள்முதல்வாதமின்றி வரலாற்றை, பொருள்முதல் வாதமாக உருவாக்க முடியாது. இதை மறுக்கும் ஏகலைவன் இவை தனித்தனியாக ஒன்று இன்றி மற்றொன்று படைக்கப்பட முடியும் என்று எல்லோரையும் தலைகீழாக சிந்திக்கச் சொல்கிறார்.

இப்படிக் கூறுவதால் மட்டுமே மதம், தேசியம், நிதி, பெண்விடுதலை, ....., போனறவற்றை திரித்துப் புரட்ட உதவும். வரலாற்று ரீதியில் ஒரு பொருள் எப்படித் தோன்றி மாறிவந்தன, மாறிச் செல்கின்றன என்றதை வரலாற்றுப் பொருள்முதல் வாதம் இயங்கியல் பொருள்முதல் வாதம் இரண்டையும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்தி ஆராயும்போது மட்டுமே இனம் கண்டுவிட முடியும்.

இதை மறுக்கும் ஏகலைவன் இவைகளைத் தனித்தனியாகப் பிரிப்பது தேசிய வரலாற்று ரீதியில் அதன் பொருள்முதல் வாதத்தை நோக்கில் ஆராயாது வானத்தில் இருந்து குதிப்பதாகவும், பெண் தனிச் சொத்து உடமையின் உருவாக்கத்துடன் அடக்கப்படவில்லை என வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தை இயங்கியல் பொருள்முதல் வாதத்துடன் நிராகரிப்பதும் என எல்லாவிடயத்திலும் தொடர முனைகிறார்.

இன்று சமுதாயத்தில் ஒரு கோரிக்கை எழும்போது அதை இயங்கியல் பொருள் முதல்வாதம் கொண்டு ஆராயமுன், அக் கோரிக்கை வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தில் எப்படி இருந்தது என ஆராயும் தொடர்ச்சியே உண்மையில் அதை விளக்கும். வரலாற்றுப் பொருள்முதல் வாதம், இயங்கியல் பொருள்முதல் வாதம் பிரிக்க முடியாததாகவும், அதேநேரம் வேறுபட்ட இரு விடயங்களே. இதைமறுத்து ஏகலைவன் இரண்டும் வேறானவை என மாக்சிசத்தையும், அடிப்படை விஞ்ஞானத்தையும் மறுத்த கருத்துமுதல் வாதத்திற்கு சென்றுவிடுகிறார். ஒவ்வொரு முரண் நிலையிலும் அதற்கு இடையிலுள்ள தொடர்பை எங்கல்ஸ் விளக்குவதைப் பார்போம்

"நெருங்கிச் சென்று ஆராய்கையில் ஒவ்வொரு முரண்நிலையில் இரு துருவங்களும்- உதாரணமாக: நேர் நிலையும் எதிர் நிலையும்- எந்த அளவு ஒன்றோடொன்று எதிராக இருக்கின்றனவோ, அதே அளவுக்கு பிரிக்க முடியாதவையாகவும் இருக்கக் காண்கிறோம். எவ்வளவுதான் ஒன்றோடு ஒன்று எதிர்த்தக் கொண்ட போதிலும், பரஸ்பரம் ஒன்றுடன் ஒன்று ஊடுருவக் காண்கின்றோம்.

- கற்பனாவாத சோசலிஸமும். -

எங்கெல்ஸ்.

வரலாற்றுப் பொருள்முதல் வாதத்திற்கும், இயங்கியல் பொருள்முதல் வாதத்திற்கும் உள்ள தொடர்- இப் பிரிக்கமுடியாத தொடர்பை- மறுக்கப்படுவது இயக்க மறுப்பியலே ஆகும். இது ஒவ்வொன்றும் பரிணாமத்தின் தொடர்ச்சியாக எழுவதை மறுத்து இயற்கையின் படைப்புக்கள் இல்லையென வாதிட முனைந்து நிற்கிறது. இதன் மூலம் ஒன்று திடீரென உருவாகி விடுகின்றது என திரித்து அதை ஒரு புதிய பிரச்சனையாகக் காட்டி மாக்சிசத்தைக் கொச்சைப் படுத்துவதே ஆகும். இதனூடாக மாக்சிசத்தைத் திரித்துவிட பார்க்கின்றனர். இதைப் பலதுறைகளில் செய்துவிடத் துடிக்கின்றனர். இதை ஒட்டி லெனின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூறுகின்றார்.

" திருத்தல்வாதிகளும் உடனே அவர்கள் பக்கம் சேர்ந்துகொண்டனர். தற்கால அரசு சம்மந்தமாய் அல்லாமல் முன்னேறிய வர்க்கத்தின் கட்சி சம்மந்தமாய் மதத்தை அவரவரது தனிப்பட்ட விவகாரமாக்க முயன் றனர்.

இவ்வாறு மார்க்ஸைத் திருத்தும் 'திருத்தங்களுக்கு' வர்க்க முறையில் மெய்யான பொருள் என்னவென்பது கூறாமலே விளங்கும். ......... அரசியல் துறையில் திருத்தல் வாதமானது மாக்சிசத்தின் அடித்தளத்தை, அதாவது வர்க்கப்போராட்டத் தத்துவத்தை திருத்த மெய்யாகவே பெருமுயற்சி செய்தது."

– நூல் திரட்டு, 1–
லெனின்.

இன்று ஏகலைவன் கூட பெண்ணின் உடல் சுதந்திரம் தனிப்பட்ட விவகாரம் என்றதன் ஊடாக ஆணுக்கும்– குழந்தைக்கும் உள்ள தொடர்பை மறுப்பதும், தேசியம் ஒரு தனிப்பட்ட விவகாரம் எனக்கூறி வர்க்க பொருளாதார செயற்பாட்டை மறுப்பதும், இசை, சித்தாந்தம் போன்றவை தனிப்பட்ட விவகாரம் எனக்கூறும் மொத்தக் கூற்றுக்களும் பொருளாதார வர்க்க அடிக்கட்டுமானத்தை நிராகரித்து நவீன திரிபுப்பாதையில் காலடிவைக்கும் கைங்கரியங்களே. இதை ஏகலைவன் எங்கெல்ஸ் பெயரால் திணித்து இப்படியல்லவா கூறுகின்றார்.

"அடித்தளம் போலவே மேல்கட்டுமானமும் நிர்ணய சக்தி படைத்தது. அடித்தளம் மேல் கட்டமானத்தைத் தீர்மானிப்பது போலவே அரசியலும், மரபின் சிந்தனைகளும் கூட மேல்க்கட்டமானத்தைத் நிர்ணயிப்பதில் ஒரு பங்கு வகிக்கிறன. மேல்க்கட்டுமானத்தால் வரலாறு தன்னை ஸ்தாபிக்கிறது. இப்படியாக அடித்தளமும் மேல்கட்டுமானமும் இடை விட்டு நிற்பதாவே எங்கெல்ஸ் கருதுவதாக அல்தூஸர் சுட்டிக்காட்டுகிறார்." எனக்கூறி ஏகலைவனும் சுட்டிக் காட்டகிறார். (அடிக் கோடு நாம்).

அடிக்கட்டுமானம், மேல்க்கட்டுமானத்திற்கு "இடைவிட்டு நிற்பதாக" கூறுவதன் மூலம் இரண்டுக்கும் இடையிலான செயற்பாட்டு விதி மறுக்கப்படுகிறது. இதன் ஊடாக மேலக்கட்டுமானம் தனியாக "வரலாறு தன்னை ஸதாபிக்க" முடியுமென வாதிட் டுள்ளனர். இது மேல்க்கட்டுமானம் வர்க்கம் அற்று இருக்கமுடியும் எனவும், அவை பொருளாதாரம் சார்ந்து இயங்க மாட்டாது என வாதிடப்பட்டு உள்ளது. இதைச் செழிமைப்படுத்தவே அடிக்கட்டுமானம், மேல் கட்டுமானம் என்பவற்றை "போலவே" போட்டு இரண்டும் தனித்தனியாக இயங்கமுடியும் எனவும், மேல் கட்டுமானத்தில் ஏற்படும் மாற்றம் ஒரு புரட்சியாக மாறமுடியம் எனவும் வாதிட்டுள்ளனர். மேல் கட்டுமானத்தில் அரசியல் மாற்றம் ஏற்படின் அது புரட்சியாக வர்க்கப்போராட்டமாக அமையும் என்கின்றார். உதாரணமாக: சந்திரிக்கா வென்றது முற்போக்கு என வாதிடமுயலலாம். எல்லாத்துறைகளிலும் இதைத் திரிக்க முடியும். மேல்கட்டுமானம், அடிக்கட்டு மானத்தின் மேலேயே இயங்குகின்றன என்ற மாக்சிசத்தின் அடிப்படைவிதி நிராகரிக்கப்படின் அது மாக்சிசமே அல்ல. இங்கு ஏகலைவன் மாக்சிசத்தைப் பாதுகாத்து வளர்க்கவில்லை. மாறாக திரித்து இருக்கின்ற சமூகஅமைப்பை பேண முயல்வதே ஆகும்.

முரண்பாடு.

முரண்பாடுபற்றி ஏகலைவன் குறித்துச் செல்லும் பகுதியில் தனது கருத்துக்கு சார்பாக முரண்பாட்டை லெனின், மார்க்ஸ், மாவோவின் பெயரைக் கூறியபடியே திரித்து விடுகிறார். ஒரு பொருளில் பல முரண்பாடுகள் இருக்கும். ஆனால் அதில் ஒரு முரண்பாடு பிரதான முரண்பாடாக இருக்கும். நேர் எதிரான இருகூறுகள் தன்னகத்தே செயற்படும் அதேநேரம், அவை வேறுவேறாக உள்ள அதேநேரம், அது பிரிக்க முடியாததாகவும் இருக்கும்.

ஒரு காந்தத்தை எடுப்பின் அதில் நேர்–எதிர்க் கூறுகள் உள்ளன. அவை வேறு வேறாக உள்ள அதேநேரம் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாததாகவும் உள்ளது. ஏகலைவன் எங்கும் நிறைந்த முரண்பாட்டை நிராகரித்து குறித்த தன்மை பற்றிய முரண்பாட்டையே முதன்மைப்படுத்தி உள்ளார். இதை ஒட்டி மாவோ கூறுவதைப் பார்ப்போம்.

"முரண்பாட்டின் குறித்த தன்மையைப் பற்றி பல தோழர்கள், குறிப்பாக வரட்டுவாதிகள் இன்றும் தெளிவாகப் புரிந்து கொள்ள வில்லை. முரண்பாட்டின் குறித்த தன்மையில் தான் எங்கும் நிறைந்த முரண்பாடு நிலவுகின்றது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை."

– முரண்பாடு பற்றி–

தேசியம், பெண் விடுதலை, ...., என்ற எல்லா வகையான போராட்டமும் முதன்மையானதாகவும், முன்நிலைக்கும் வரும் போது குறித்த முரண்பாட்டின் செயற்பாட்டை நாம் காணமுடியும். ஆனால் அதற்குள் எங்கும் தழுவிய முரண்பாடு உள்ளதைக் காணமறுப்பது, நிராகரிப்பது ஒரு புரட்சிகர பாட்டாளிவர்க்க அரசு உருவாகுவதை நிராகரிப்பதாகும். தேசியம், பெண்விடுதலை,.........., போன்ற முரண்பாட்டின் பின் எங்கும் நிலவும் வர்க்க முரண்பாட்டை நிராகரிப்பதை நாம் ஏகலைவன் கட்டுரையில் அலை அலையாக தொடர்ச்சியாகக் காணமுடியும்.

அரசியலைப் பொறுத்த வரையில் இருவித அறிவுப்போக்குகள் உண்டு. ஒரு குறிப்பிட்ட தனி இயல்பிலிருந்து பொதுவானதை அறிவது, மற்றது பொதுவானதில் இருந்து குறிப்பிட்ட தனி இயல்பை ஆராய்வது. ஆனால் ஏகலைவனோ தனிப்பட்ட செயலிலிருந்து பொதுவானதை அறியத் தயாரின்றி நிராகரிக்கின்றார். இசை, பெண்ணின் உடல் (பெண் விடுதலை), சித்தாந்தம், தேசியம், மதம்,......, என அனைத்தின் தனி இயல்பை மட்டுமே உயர்த்தும் ஏகலைவன் பொதுவானதை அறிய மறுக்கிறார். இதனூடாக இவ்வொவ்றிலும் உள்ள பொதுவான வர்க்கப் போராட்ட நிலையை நிராகரிக்கிறார்.

வர்க்கப் போராட்டத்தில் இருந்து தேசியத்தையும், தேசியத்தில் இருந்து வர்க்கப் போராட்டத்தையும் ஒருவன் புரிந்து கொள்ள முடியும். இது ஒருவனின் தேடுதல் மீதான, இயங்கியல் மீதான அறிவாகும். இதை நிராகரித்து தேசியத்தை மட்டுமே பிடித்துக்கொள்ளும் இயங்கியல் மறுப்பை, ஒரு பொருள் நிலையானதாகவும், பரிணாமத்தின் விதியை நிராகரிப்பதில் சென்று விடுகிறது.

பொதுவான உண்மைகள் வெறுமையில் இருந்து, சூனியத்திலிருந்து தோன்றுவதாகக் கருதும் ஏகலைவன் இவைகளை வெறுமையான அழவிடமுடியாத ஓட்டை வாய்ப்பாடுகளாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாற்றிவிட முனைகிறார். வரலாற்றுப் பொருள்முதல் வாதம், இயங்கியல் பொருள் முதல்வாதத்திற்கும் உள்ள தொடர்பை மறுத்தும், தேசியம், பெண் ஒடுக்குமுறை தனிச் சொத்துரிமையுடன் உருவாகவில்லை, இசையின் வெளிப்பாடு, சித்தாந்த வெளிப்பாடு போன்றன வெறுமையிலும் சூனியத்தில் தொன்றுவதாகவும், அது ஆழம் காணமுடியாத வகையில் வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தை நிராகரித்துத் திரித்து, இயங்கியல் பொருள் முதல் வாதத்தை கொச்சையாகவும் மாற்றி விடுகின்றார்.

"ஒரு பொருளை உண்மையாக அறிய வேண்டுமானால், நாம் அப் பொருளின் அனைத்துப் பகுதியையும், எல்லாத் தொடர்புகளையும் 'இடைத் தொடர்பு' களையும் தழுவிய வகையில் ஆராய வேண்டும். இதை நாம் ஒருபோதும் முழுமையாக சாதிக்க இயலாது. ஆனால் எல்லாப் பகுதிகளையும் ஆராய வேண்டுமென்ற கோரிக்கை, தவறுகளுக்கு எதிரான, வளைந்து கொடுக்காத, இறுகிய தன்மைக்கு எதிராக பாதுகாப்பு வழங்குகிறது."

– மீண்டும் தொழில் சங்கங்களும், தற்போதைய நிலமையும்: ட்ராட்ஸ்கி. புகாரின் ஆகியவர்களின் தவறுகளைப் பற்றியும் –

– லெனின் –

ஒரு பொருளின் முரண்பாட்டினை ஆழமாக ஆராயாது மேலோட்டமாக காண்பதும், அதற்குத் தீர்வை முன்வைப்பதும், அகநிலை நோக்கிலும், ஒருதலைப் பட்சமாகவும், மேலோட்டமாக அணுகுவதை ஏகலைவனில் காணமுடியும்.

தேசியம், அதன் உள் செயற்பாடு பற்றியும், பெண்ணின் உடல் சுதந்திரம் பற்றி அதன் உள் செயற்பாடு பற்றி ஆராய்வதும், இசை, சித்தாந்தம், போன்றவற்றில் உட் செயற்பாட்டைப் பற்றி ஆராயாது மேம்போக்காக அதன் மீது கருத்துக் கூறுவதும் முரண்பாட்டின் விதிகளை நிராகரிப்பதே ஆகும். மாவோ முரண்பாட்டின் விதிகளில் மேல்க் கட்டுமானம், அடிக்கட்டுமான விதிகளுக்குள் இடையிலான உறவை ஒட்டி விளக்குவதைப் பார்ப்போம்.

"சமூக வரலாற்று இயக்கத்தை ஆராவதற்கான பொருட்களிலுள்ள இந்த முரண்பாடு பற்றிய விதியை மார்க்சும், எங்கெல்சும், கையாண்டபோது, உற்பத்தி சக்திகளுக்கும் – உற்பத்தி உறவுகளுக்கும் இடையே உள்ள முரண்பாட்டை, சுரண்டும் வர்க்கங்களுக்கும் – சுரண்டப்படும் வர்க்கங்களுக்கும் இடையே உள்ள முரண்பாட்டை, இதனைத் தொடர்ந்து, இவற்றின் விளைவான பொருளாதார அடித்தளத்திற்கும் மேலடுக்குக்கும் (அரசியல், சித்தாந்தம் முதலானவை) இடையே ஏற்படும் முரண்பாட்டையும் கண்டறிந்தனர். அத்துடன் இம் முரண்பாடுகள் பல்வேறு வர்க்க சமுதாயங்களில் பல்வேறு வகையான சமூகப் புரட்சிக்குத் தவிர்க்க முடியாதபடி எவ்வாறு இட்டுச் செல்கின்றன என்பதையும் கண்டுபிடித்தனர்."

– முரண்பாடு பற்றி....... –

மாவோ.

தேசியம், மதம், இசை, பெண் ஒடுக்கு முறை, சித்தாந்தம்,........, என அனைத்துத் துறையிலும் பொதுவான முரண்பாடு குறிப்பான முரண்பாட்டின் மீது எப்படி செயற்படுகிறது என்பதை மாவோ விளக்குவதைப் பார்ப்போம்.

" மார்க்ஸ் எங்கும் நிறைந்த முரண்பாடு பற்றி மேலும் ஆழமாகவும்: வர்க்க சமுதாயம் அனைத்திற்கும் பொதுவாக உள்ள முரண்பாட்டின் எங்கும் நிறைந்த தன்மைதான் இது. உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையேயுள்ள முரண்பாடுதான் இது."

– முரண்பாடு பற்றி –

மாவோ.

ஏகலைவன் இதை மறுத்து வர்க்க முரண்பாடு எல்லாவற்றின் மீதும் ஆதிக்கம் செலுத்தவில்லை என வாதிடுவது மாக்சிசத்தை வளர்ப்பது அல்ல, மாறாக அடிப்படை மாக்சிசத்தைத் திரித்து புதைகுழிக்கு அனுப்ப முயல்வதே ஆகும். இசைமீது வர்க்கம் ஆதிக்கம் செலுத்த முடியாது என்றதுபோல் எல்லாவற்றுக்கும் உண்டு என்ற ஏகலைவனின் கருத்தைஒட்டியே கரிகாலன் 'புலிகளை' வர்க்கமற்ற குழு என வாதிட முனைந்ததுமாகும். இதிலிருந்தே பிழைப்புவாத புத்திஜீவிகளை உயிர்ப்பு ஆசிரியர் குழு 'உயிர்ப்பு'–3 இல் வர்க்கமற்ற உன்னதமான புரட்சியாளர்களாக காட்ட முனைந்ததுமாகும்.

தமிழீழம் சாத்தியமா? நடைமுறை, ஐக்கிய முன்னணி பற்றி

நாம் நீண்ட நடைமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டு தோல்விகளின் பின் புதியதைத் தேடுகின்றோம். நடைமுறையிலிருந்து பொதுவானதை பொதுவானதை சரியாக இனம்காணத் தவறியதை வரலாறாகக் கொண்டு பலர் இன்றும் உள்ளநிலையில் பொதுவானதில் இருந்து சரியான நடைமுறையை இனம்காணத் தவறியவர்களின் வரலாறு என இரண்டை எமது 15 வருடங்களுக்கு மேலான ஈழப்போராட்டம் வழங்கி வந்துள்ளது.

இன்றும் கூட ஏகலைவன் உட்பட பலர் பொதுவானதின் மீது நடைமுறையைப் பிரயோகிப்பதில் திரிபுகளை மார்க்சிஸத்தின் மீது செய்கின்றனர். ஒரு முரண்பாட்டின் தோற்றமும் அதன் பின்னுள்ள வர்க்க அமைப்பின் பிரதிபலிப்பை நிராகரிக்கும் போக்கு, எப்போதும் நடைமுறை பற்றி அதிகமாகக் கூச்சல்போடவே வைக்கிறது.

கடந்த எமது வரலாற்றில் ஒவ்வொரு இயக்கமும் மற்றைய இயக்கங்கள் மீது நடைமுறையை மட்டுமே ஒரு பிரதான புரட்சிகர சக்தியாக இனம்காட்ட முனைந்தனர். இது இயக்கத்திற்கு மட்டுமல்லாமல் மக்களையும் அதன்பால் நகர்த்தியதில் மக்கள் ஒவ்வொரு இயக்கத்தின் நடைமுறை மீதும் சினிமாப் படங்களின் பெயர்களைக்கொண்டு அழைக்கும் அளவிற்கு வளர்ந்து நின்றது. ஏழும் போராட்டத்தின் நடைமுறை என்பதற்குப் பதில் அதன் கோட்பாடும், அதன் வர்க்க அமைவும் மிகமுக்கியமானது. இது எழுத்துத்துறை, இசை என எல்லாவற்றிற்கும் பொருந்தும். எம்மண்ணின் புகழ்பெற்ற நாடகங்களான "மண் சுமந்த மேனியர்", "மாயமான்" போன்றவை நடைமுறையில் தீர்க்கமான பங்காற்றின. ஆனால் அதன் வர்க்கமூலம் புலிகளை வளர்ப்பதில் எப்படிப் பங்குவகித்தது என்பது தெளிவானது. புலிகளின் வளர்ச்சியின் பின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவைகூட கணிசமான பங்கு வகித்தன. இந்நாடகங்களை அன்று மாக்சிசத்தை ஏற்றிருந்த பலர் விமர்சனத்துடன் அணுகினர். இன்னொரு புறம் "சிந்திக்கத் தொடங்கி விட்டனர்" என்ற நாடகம் ஒடுக்கப்பட்ட மக்களின் மத்தியிலிருந்து வெளிவந்தன. நடைமுறையில் பல மேடைகளில் வர்க்கப் போராட்ட, தேசியவிடுதலை உறவை கூறியபடி வெளிவந்தது. இதை மழுங்கடிப்பதில் பலர் முனைந்து நின்றனர். இன்றும் அதைச்செய்ய முனைகின்றனர்.

நடைமுறையெனப் பார்ப்பதில் உள்ள பொதுவான முரண்பாடான வர்க்க முரண்பாட்டை நிராகரிக்கும் அனைத்துச் செயல்பாடும் விமர்சனத்திற்கு உட்பட்டதே. பெண்களின் வாக்குரிமை, சொத்துரிமை மீதான போராட்டங்களில்கூட வர்க்க அமைவு முக்கியமானது. அது பொதுவான முரண்பாட்டின் அனைத்தும் தழுவிய அம்சமாகும். இரண்டும் கவனத்திலுள்ளவை மட்டுமே நடைமுறையில் அங்கீகரிக்க முடியும். நடைமுறையின்றி ஒரு போராட்டம் இல்லை. வெறும் சித்தாந்த புத்திஜீவிகளாக இருக்கும் வரட்டுவாதிகளுக்குப் பதில் நடைமுறையுடன் கூடிய சித்தாந்தமே ஒரு புரட்சியின் ஊற்றுக்களாகும்.

சமுதாயத்தில் எழும் தன்னியல்பான போராட்டம் சித்தாந்தம் வழிகாட்டாத வரை அவை புரட்சியாக மாறிவிடமாட்டாது. சரியான தத்துவம் எழும் ஒவ்வொரு போராட்டத்தின் குறிப்பான முரண்பாட்டின் தன்மைக்குள் உள்ள பொதுவான முரண்பாட்டுடன் இணைந்ததாக இருத்தல் வேண்டும். இதை மேலும் விளக்க மாவோவின் கூற்று ஒன்றைப் பார்ப்போம்.

"புரட்சிகர தத்தவமில்லாமல் புரட்சிகரமான இயக்கம் இருக்க முடியாது." என லெனின் கூறிய காலத்தில், புரட்சிகர தத்துவ உருவாக்கமும், அதற்காக வாதாடுவதுமே முதன்மையான தீர்மானகரமான பங்கை வகித்தன. ஒரு கடமை எத்தகையதொன்றானாலும் கூடி நிறைவேற்றப்பட வேண்டிய நேரத்தில் வழிகாட்டும் பாதையோ, வழிமுறையோ, திட்டமோ, கொள்கையோ, இல்லாது இருக்கும்போது அதை உருவாக்குவது முதன்மையானது.

அதேபோன்று அரசியல்-பண்பாடு முதலிய மேலமைப்பு, பொருளாதார அடித்தளத்தின் வளர்ச்சியைத் தடுக்கும்போது, அரசியல் மற்றும் பண்பாட்டு மாற்றங்கள் முதன்மையானவையாகவும், தீமானகரமானவையாகவும் விளங்குகின்றன. இப்படிச் சொல்லும் போது நாம் பொருள் முதல்வாதத்திற்கு முரணாகச் செல்கிறோமா? இல்லை. ஏனெனில் வரலாற்றின் பொது வளர்ச்சியில் சடப்பொருள்களே சிந்தனையைத் தீர்மானிக்கிறது: சமூக வாழ்வு, சமூக உணர்வை நிச்சயிக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளும் அதே நேரத்தில் சிந்தனை என்பது சடப்பொருளின் மீதும்: சமுதாய உணர்வு என்பது சமுதாய வாழ்வின் மீதும்: மேலமைப்புகளானது பொருளாதார அடித்தளத்தின் மீதும் பிரதிபலிப்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம்."

-முரண்பாடு பற்றி...-

-மாவோ-

நடைமுறைக்கு முன் சித்தாந்தம் சரியாக இனம்காண்பது செயற்பாட்டை சரியாக வழிகாட்டும். இதன் வழிகளில் ஐக்கிய முன்னணியும்கூட தீர்க்கமான அம்சமாக இருக்கும்

ஒரு பிரதான முரண்பாட்டின் மீது இரண்டாவது, மூன்றாவது அம்சங்கள் இணைந்திருக்கவும், ஒரு பிரதான முரண்பாட்டின் கீழ் பல்வேறு பிரிவுகளின் முரண்பாடுகள் இணைந்திருப்பதும், ஒரு பிரதான முரண்பாட்டின் கீழ் எதிரான முரண்பாடுகள் இணைந்திருக்கவும் முடியும். இது ஐக்கிய முன்னணியாகப் பிரதிபலிக்கிறது.

தேசிய முரண்பாடு பிரதான முரண்பாடாக இன்றுள்ள நிலையில் வர்க்கமுரண்பாடு இரண்டாவது பட்ச முரண்பாடாக மாறியுள்ளது. இவையிரண்டும் ஒரு ஐக்கிய முன்னணியாக இணைந்து செயற்பட முடியும். தேசிய முரண்பாட்டின் கீழ் பெண் விடுதலை, சாதிப் போராட்டம், மாணவர், இளைஞர் போராட்டம், தொழிலாளர், விவசாயிகள் போராட்டம், கலை, இலக்கியப் போராட்டம் என அனைத்தும் இணைந்து நிற்கமுடியும்.

பிரதான முரண்பாட்டின் மீது இவை தொழிற்படும்போது இரண்டாவது முரண்பாடாகவுள்ள வர்க்கமுரண்பாடு இவ் ஒவ்வொன்றின் மீதும் தாக்கத்தைச் செலுத்தும். ஒவ்வொரு பிரதான முரண்பாட்டில் ஐக்கியப்படத் தயராகவுள்ள அதேநேரம் தனக்குள் இரண்டாவது முரண்பாடு வர்க்க அடிப்படையில் பிரிந்து நிற்கும். இம்முரண்பாடானது முதன்மை முரண்பாடாக மாற இடைவிடாது போராடும். இதன் முதல் முரண்பாடாக மாறும் நிலைமை தேசிய முரண்பாட்டைப் பின்தள்ளி வாக்கப்போரை முன்தள்ளி இலங்கையில் ஐக்கியப் புரட்சியாக வெடிக்கும்.

ஏகலைவன் தமிழீழம் பற்றிய கோட்பாட்டில் இயங்கியல் இயக்கவியற் போக்கில் தேசியத்தைக்காண முயல்கிறார். இயங்கியல் மறுப்பில் சென்றுவிடும் ஏகலைவன் தமிழீழம் சாத்தியமா? என்ற கேள்வியை மெதுவாகக் கைகழுவிவிடுகிறார்.

ஐக்கிய முன்னணியைப் பொறுத்த வரையில் எதிர்ப்புரட்சியைச் செய்யக்கூடிய வர்க்கங்களுடன் கூட சிலவேளைகளில் தேசிய எழுச்சிக் கட்டத்தில் ஐக்கிய முன்னணி அமைய வாய்ப்புக்களுண்டு. தமிழ் நிலப்பிரபு வர்க்கம், தமிழ்த் தரகுமுதலாளிகளுடன் கூட இது சாத்தியமானது. இந்திய இராணுவம் இலங்கைக்குள் நுழைந்தபோது, புலிகள் இலங்கை அரசுடன் ஐக்கிய முன்னணி அமைத்தது (அவர்களின் அரசியல் அல்ல) சரியானதே.

ஐக்கிய முன்னணி என்பது முரண்பாட்டின் தன்மையுடன் மாறுபட்டது. இது நிலையானது அல்ல. இன்றய உலகம் நாளை அப்படியே இருப்பது அல்ல. ஆபிரிக்காக் கண்டம் ஒரு நீண்ட வரலாற்றின் பின் இரண்டாக நிலப்பரப்புப் பிரிந்துவிடும் என்பதை விஞ்ஞானம் நிரூபித்து வருகிறது. நிலத்தொடர்கள் உலகம் உருவானபோது ஒரே நிலத்தொடராக இருந்தன. இன்று அவை பலகூறுகளாக பிரிந்து வருகின்றன. பூமி ஆரம்பத்தில் நெருப்புப் பந்தாக இருந்தது. அது குளிர்ந்து வரும் இன்றைய நிலையில் தொடர்ந்து குளிர்ந்து சென்று முழுமையாக பனிக்கட்டியாக மாறிவிடும். இறுதியாகப் பூமி இன்னுமொர் கோளத்தால் (அண்மையில் வியாழனில் ஏற்பட்டதைப்போல) விழுங்கப்பட்டு அழிந்துவிடும்.

எனவே உலகில் நிலையானது எதுவுமில்லை. எல்லாக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்துக்களும் காலத்தால் முற்போக்காக வரையறுக்கமுடியும். எனவே ஐக்கிய முன்னணி என்பது நிலையானவை அல்ல. அவை நிலைமைகளுடன் மாறிச்செல் லும். அவைகளுள் நட்பு, பகையென முரண்பாடுகள் இயங்குகின்றன. அது ஒன்றையொன்று விஞ்சக்கூடியதாக மாறுவதைப் பொறுத்து அது உயிர்வாழ முடியும். இது பிரதான முரண்பாட்டுடன் மற்றய முரண்பாட்டின் செற்பாட்டின் தன்மையுடன் செயற்படுகிறது.

தேசிய இனமுரண்பாடு இல்லாமல் போய் வர்க்க முரண்பாடு பிரதான முரண்பாடாக மாறும் நிலை உருவாகுது என்றில்லை. அது இலங்கையிலுள்ள போராடும் சக்திகள், பேரினவாத சக்திகள், சர்வதேச நிலமையென்பன திடீரென நிலைமையை மாற்றிவிடக் கூடியனவே. இதைத் தென்னாபிரிக்காவிலும் காணமுடியும். நிலைமைகளும், காலத்தாலுமே ஒரு பிரதான முரண்பாட்டின் இருப்புத் தங்கியிருக்கிறது.

அடுத்து தமிழீழம் சாத்தியமா? என்கின்ற போது தமிழீழ மக்கள் ஒரு தேசிய இனத்துக்கான சகல தகுதியையும், ஒரு அரசாகவாழும் தகுதியையும் கொண்டுள்ளனர். இருந்தபோதும் ஒரு தமிழீழம் உயிர்வாழ வேண்டுமெனில் குறைந்தது பின்வரும் நிபந்தனைகளில் ஏதாவது ஒன்று இருக்கவேண்டும்.

(1) ஒரு ஏகாதிபத்தியம் அங்கீகரித்தல்.
(2) ஒரு பெரிய புரட்சிகர நாடு உலகில் – –இருத்தல்.
(3) தென்கிழக்கு ஆசியாவில் புரட்சிகர சக்திகளின் பரவலான எழுச்சி குறிப்பாக சிங்கள புரட்சிகர எழுச்சியும், இந்தியப் புரட்சிகர எழுச்சியும் அவசியம்.

இந்த மூன்றில் ஒன்றுமே இல்லாத நிலையில் தமிழீழம் சாத்தியமல்ல. இன்று இவையில்லாத நிலையில் தமிழீழத்துக்காக போராட தமிழ் மக்கள் முன்தள்ளப்பட் டுள்ளனர். எதிகாலத்தில் இதில் ஒரு நிலைமை இதற்குச் சாதகமாக அமையும் வாய்ப்புக்கள் ஏற்படும் நிலைமையும், அதேநேரம் சாத்தியமல்லாமல் போனால், அல்லது அந்த நிலைமைகள் உள்ள போதிலும் தமிழீழ போராட்டம் ஐக்கிய இலங்கைப் புரட்சிக்கான ஒரு முன் நிபந்தனையாகவும் அமையும். இது தொடர்பாக விரிவான கட்டுரை 'சமர்' 14, 15 களில் தருகிறோம்.

## விமர்சனம் என்றால் என்ன?

விமர்சனம் என்றால் என்ன என்ற பிரச்சனையை விமர்சிக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. கடந்தகாலங்களில் விமர்ச னங்கள் எழுந்தபோது அதை முகம்கொடுக்க தயாரின்றியும், அதைத்தவிர்க்க அனைத்து வழிகளும் கையாளப்பட்டன. அதேநேரம் விமர்சன உரிமையை எதிரியிடம் கோருவதையும் காணமுடிகிறது. எமது விமர்சனத்திற்கு பதில் கொடுக்க முடியாது போன அனைத்துத் தரப்பினரும் 'சமர்' மீது அவதூறுகளை வாயால் பரப்பி, சமரை உண்மையைத்தேடும் வாசகர்களிடம் இருந்து அன்னியப்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டவண்ணம் உள்ளனர். சமர் எத்தகைய விமர்சனங்களையும், யாரைப்பற்றியும் முதுகிற்குப் பின்னால் கதைக்காது நேரடியாகவே வைத்து வந்துள்ளது. சரி, பிழைகளை எப்பொழுதுமே நேரடியாக சுய விமர்சனம் செய்துகொள்ளும் நாம், யாரைப்பற்றியும், எந்தக் கருத்தின் மீதும் முதுகுக்குப் பின் கதைக்கவேண்டிய அவசியம் எழுந்தது கிடையாது. இனியும் அவ்வாறு எழாது.

ஆனால் மாற்றுக் கருத்துள்ளோர் சமரின் கருத்திற்கு பதிலளிக்க முடியாமல் முதுகுக்குப் பின் ஒரு பிரமையை, அவதூறுகளைச் செய்தவண்ணமே உள்ளனர். இது கடந்த காலத்தில் ஒவ்வொரு இயக்கமும், மற்றய இயக்கங்கள் பற்றி அரசியல் ரீதியில் விமர்சிக்கப் பலமின்றி தமது கீழ்மட்ட உறுப்பினர்களுக்கு மற்றய இயக்கங்கள் பற்றிய அவதூறுகளைக் கூறியபடி உயிர்வாழ முனைந்தனர். இது நடைமுறையூடாக இனம் காணப்பட்டு அவை சின்னாபின்னமாகக் காரணமாக இருந்தன.

இன்று சமரானது நடைமுறையில் ஈடுபடவில்லை. இந்த நிலையிலும் நாம் வைக்கும் கருத்தானது நடைமுறை இயக்கத்திற்கானதே. நடைமுறை ஏற்படும்போதே இவ் அவதூறுகள் பொடிப்பொடியாக நொருங்கும். அது காலத்தால் மட்டுமே சாத்தியமானது. அடுத்து எம் கருத்துக்களை ஆழமாக சுயசிந்தனையுடன் ஆராயத் தயாராகவுள்ள போது பல படிப்பினைகளைக் கண்டறியமுடியம்.

எமது கடந்தகால விமாசனங்களை எதிர் கொண்ட மனிதம், உயிர்ப்பு எழுத்தாளர்களும், மனிதம், உயிர்ப்பு பத்திரிகைகளும் எமது விமர்சனங்களுக்குப் பதில்தராது அதைத் தவிர்த்துக்கொள்ளும் நோக்கில் இயன்ற அனைத்தையும் செய்ய முனைந்தனர்.

எமது கடந்தகால விமர்சனங்களை பொது புத்திமட்டம் என்றும், வரட்டுவாதம் என்றும், (இதற்கு விளக்கம் எதுவும் கிடையாது) இன்று ஐக்கிய முன்னணி அவசியமென்றும், எனவே இவ்விவாதங்கள் அவசியமில்லை என்றும், இன்று புரட்சியின் உச்சத்தில் நிற்பதாக நினைத்து விவாதிப்பதாகவும், எம்மை கண்ணில்லாக் குருடராகவும், மலையில் ஏறப்பயப்படும் கோழைகள் எனவும்,...... எண்ணற்ற வழிகளில் எமது விமர்சனங்களைத் தவிர்க்க, நிறுத்திவிட முயன்றபடி வாசகர்களைத் திசைதிருப்ப முனைந்துநின்றதை நாம் திரும்பிப்பார்க்க முடியும்.

ஒரு விமர்சகர் தனது மாற்றுக்கருத்தை சமுகத்தில் இயங்கும்சக்தியாக நிறுவும் வழிவகைகள் எது? சமருக்குப் பதில்தர முடியாது எனப் பலதரம் அடித்துக் கூறுபவர்கள் எப்படி தமது கருத்தை வைத்து இச் சமூகத்தை ஒரு புரட்சியாக மாற்றிவிடுவர்? புலிகளின் அரசியலில் ஒவ்வொரு விடயம் மீதிலும் விமர்ச்சிக்காமல் இருந்தால் புலிகளை முறியடிக்க முடியாது. அதன்மீதான மாற்றுவிமர்சனம் மட்டுமே மாற்று அமைப்பைப் பிரதிபீடு செய்யும். இதை எமது மாக்சிச, லெனினிய, மாவோயிச சிந்தனைகளின் மீது உங்கள் அல்தூஸரின் கருத்தை வைக்காது ஒரு அடிகூட உங்களால் முன்னேற (உங்கள் நினைப்பில்) முடியாது.

நாம் உங்களின் ஒவ்வொரு அடிகள் மீதும் விமர்சித்து, அம்பலப்படுத்தி, அதில்தான் அமைப்பாக முனைகின்றோம். அதுவே உங்களுக்குமான வழியாகும். அதைச்செய்யு முனையுங்கள். எங்கள் விவாதம் பொது புத்திமட்டம் என நீங்கள் கருதின், அது விமர்சிக்கப்படத் தேவையற்றது என ஆகிவிட்டதா? அப்படியாயின் பொது புத்திமட்டத்தில் மக்களிடமிருந்து கேள்விகள் எழும்பொழுதில், அதற்குப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதிலளிக்க மாட்டீர்களா? மாறாக மக்களை மந்தைகளாகக் கருதி துப்பாக்கிமுனையில் நடத்திச் செல்ல விரும்புகின்றீர்கள். எம்மை துப்பாக்கிமுனையில் மட்டும் சந்திக்க விரும்புகின்றீர்களா? எமக்குப்பதில் அளியுங்கள். அதுவே எப்பொழுதும் இறுதியானதும் முடிவானதுமாகும். உங்களின் ஒவ்வொரு வரிகள்மீதும் பதிலளிக்கமுனையும் எம்மை வரட்டுவாதிகள் எனக் கூறியபடி எம் கருத்துக்கு பதிலளிக்காது தப்பியோட முனைவது ஏன்?

## அல்தூஸர் மாக்சிசத்தை வளர்த்து எடுக்கின்றாரா? அல்லது மறுதலிக்கின்றாரா?

இவைதொடர்பாக கட்டுரையின் ஒவ்வொரு வரிகளின் மீதிலும் தெளிவாக விமர்சனத்தை முன்வைக்க முனைந்தோம். வரட்டுவாதிகள் என்ற பொருந்தாத, எந்த விளக்கமுமற்ற ஒரு முத்திரையின் ஊடாக மாக்சிச, லெனினிய, மாவோ கட்சிகளை இயங்காத சிறுகுழுக்களாக காட்டியபடி அல்தூஸரின் கருத்துக்களை திணித்துவிட முனைகின்றனர். உலகில் நடைமுறையில் இயங்கிக் கொண்டிருக்கும் எந்தப் புரட்சிகர அமைப்புமே மாக்சிச, லெனினிய, மாவோ அமைப்புக்களாகத்தான் உள்ளன. அவாகள் அனைவருமே அல்தூஸரை நிராகரிக்கின்றனர் என்பதுடன், புரட்சியை நடைமுறையில் வழிநடத்தும் முன்னெடுப்புக்களையும் பெற்றுள்ளனர்.

அல்தூஸர் மாக்சிச, லெனினிய, மாவோ வழிகளில் மாக்சிசத்தை வளர்த்தெடுக்கும்போது அது எதிர்க்கப்படுவது இல்லை. மாறாக அல்தூஸர் மாக்சிச, லெனினிய, மாவோவாதிகளை நிராகரித்து புதிய வழிகளை முன்வைக்கும்போது மாக்சிச, லெனினிய, மாவோ கட்சிகளால் நிராகரிக்கப்படுகின்றன.

அல்தூஸரை தமிழில் அறிமுகம் செய்த எஸ். வி. ராஜதுரை நடைமுறை அரசியலிலிருந்து வந்தவரே. இன்று அவரொரு அரசியற்பிரமுகராக, எந்த நடைமுறை அரசியலையும் நிராகரித்து, நடைமுறை அரசியலில் ஈடுபட்டு வருபவர்களை நிராகரித்து மாக்சிசத் தைத் திரிக்க முனைந் துள்ளார். அந்த வகையில் இவர் வெளியிட்ட புத்தகங் கள், எழுத்துக்கள் சாட்சியாகவுள்ளன. 'ரஷ்யப்புரட்சி இலக்கிய சாட்சி' என்ற எஸ். வி. யின் புத்தகத்தில் கொப்பர்ச்சோவின் சோச லிசமே உண்மையான சோசலிசமெனப் புகழ்ந்து அதை அங்கீ கரித்து நிற்கின்றார். கொப்பர்ச்சோவின் சோச லிசம் என்னவென்பது சாதாரண அறிவுள்ள அனைவருக்குமே தெரியும். ஆனால் எஸ்.வி.யோ அதனூடாக புரட்சிகர சக்திகளை திசைதிருப்ப புரட்சிக்கெதிரான சக்திகளின் இலக்கியத்தின் மீது, அவ் இலக்கியம் பொருள்சார்ந்து இனம்காணக்கூடாது என்ற அல்தூஸரின் கருத்துக்கு இசைவாக, கருத்து என்றும் படைப்பாளியின் சுதந்திரம் என்று கூறி கருத்து முதல்வாதக் கருத்துக்கும், உலக முதலாளித்துவ ஆட்சிக்குள் நீடித்துவைக்க தன்னால் இயன்றளவில் முனைப்புப் பெற்றுள்ளார்.

இதுவெறும் எஸ். வி. ராயதுரையின் கருத்துக்கள் மட்டுமல்ல, மாறாக அல்தூஸர் கருத்துக்களும் மட்டுமன்றி, நடைமுறை அரசியலை நிராகரித்து தம்மைப் புரட்சியாளர்களாகக் காட்டும் நடிகர்கள் அனைவரினதும் கருத்துக்களாகும். இதை எஸ்.வி யின் எழுத்துக்களில் ஆராயும்போது- 'மௌனம்' 4 இல் - மௌனம் குழுவினருக்கு எஸ்.வி வழங்கிய ஆலோசனையைப் பார்ப்போம்.

அரசியல், இலக்கியக் குழுச்சண்டைகளில் 'மௌனம்' சிக்கிக்கொள்ளாமல் இருக்க வேண்டும்.,, என்கிறார் எஸ். வி. ஆர். இதைவிட ஒரு சிறந்த ஆலோசனையை ஒரு மக்கள்விரோதி வழங்கமாட்டான். இதை யொட்டி எங்கெல்ஸ் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் நடைமுறைபற்றி என்ற விமர்சனத்தில்

" வர்க்கங்கள் ஒழிக்கப்பட வேண்டுமென்று நாம் விரும்புகின்றோம். இதை நிறைவேற்றுகின்ற வழி எது? பாட்டாளிவர்க்கத்தின் அரசியல் ஆதிக்கம் ஒன்றே வழியாகும். இது எங்குமே அங்கீகரிக்கப்பட்டிருக்கும் பொழுது, அரசியலில் தலையிட வேண்டாமென்று நம்மிடம் சொல்லுகிறார்கள்! தலையிடாமையைப் பின்பற்றுகின்ற எல்லோரும் தங்களை புரட்சியாளர்கள் என்றுகூட - சொல்லுகின்றார்கள். ஆனால் புரட்சி என்பது தலைமையான அரசியல் நடவடிக்கை."

அரசியல் விவாதத்தில், இலக்கிய விவாதத்தில் ஈடுபட வேண்டாமென்று மௌனம் குழுவிற்கு ஆலோசனைவழங்கும் எஸ்.வி. யின்கருத்து அல்தூஸர் போன்றோ ரின் கருத்துப்போக்கே ஆகும். இவர்கள் போலிப்புரட்சியாளர்கள் என்பதை எங்கல்சின் கூற்றே தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது. போலிகளைத் தோலு ரித்துக் காட்டுவதே இன்று அவசியமும், அவசரமுமான அரசி யற் பணியாகும்.●●

---

**வாசகர்களே! உங்களிடமிருந்து ஆக்கங்களையும் ஆரோக்கியமான விமர்சனங்களையும் எதிர்பார்க்கிறோம்.**

**...சமர் ஆசிரியர் குழு...**

---

தொடர்பு முகவரி:
"SAMAR"
87,Rue De Colombes
92600-Asnieres Sur- Seine
France

❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄

**சந்தா அனுப்ப வேண்டிய தபாற்கணக்கு:-**
2.674.73 M
Centre De Chequees Postaux
75900 Paris Cheques France

❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄

**சந்தாவுக்கான அன்பளிப்பு**

| | | |
|---|---|---|
| பிரான்ஸ் | 6 பிரதிகள் | 60 பிராங்குகள் |
| | 12 பிரதிகள் | 120 பிராங்குகள் |
| ஐரோப்பியநாடுகள் | 6 பிரதிகள் | 100 பிராங்குகள் |
| | 12 பிரதிகள் | 200 பிராங்குகள் |
| ஏனைய நாடுகள் | 12 பிரதிகள் | 225 பிராங்குகள் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 2 ம் உலக மகா யுத்தத்தின் 50 வது வருட கொண்டாட்டங்களின் ஊடாக, மறைக்கப்பட்டு வரும் உண்மைகள்.

**2ம்** உலக மகாயுத்தம் தொடர்பான சிறு கட்டுரை ஒன்றை வரையும் நாம் அதன் முழுமையான பாரம்பரியத்தை இக்கட்டுரையினூடாகச் செய்யமுடியாதும் உள்ளோம். இருந்தபோதும் ஒரு பொதுஅறிவைப் பெறும் வகையிலும், உண்மைகளை அறிந்து கொள்ளவும் இக்கட்டுரையைத் தர முயற்சிக்கின்றோம்.

2ம் உலக மகாயுத்தம் முடிந்து 50 வருடங்களைக் கடந்து கொண்டிருக்கும் இன்றய நிலையில், ஏகாதிபத்தியங்கள் யுத்தம் முடிந்த கையோடு தொடங்கிய பொய்யானதும், மிகைப் படுத்தியதுமான தமது வெற்றிகள் பற்றிக்கூறி மக்களை ஏமாற்றி வருகின்றனர். இவ்யுத்தம் நடந்த காலத்தில் பல்வேறு தரப்பினரும் இவ் ஏகாதிபத்தியங்களும், யுத்தத்தின் உண்மையான நிலைமைகளை ஓரளவு தெரிந்து வந்தனர். ஏனெனில் இவைகள் எல்லாமே ஓரளவுக்கு எல்லாமக்களுக்கும் தெரிந்தவைகளே. இன்று யுத்தத்தின் வெற்றிகள்மீதான திரிபுகளைச் செய்துவரும் சகல ஏகாதிபத்திய ஆதரவு எழுத்தாளர்களினதும் பொய்பிரச்சாரத்தை மக்கள்மீது திணித்துவிட கடும்முயற்சி செய்கின்றனர்.



நாசிகளால் தூக்கில் இடப்பட்டோர்

இந்நிலையில் யுத்தகாலத்தில் ஏகாதிபத்தியங்களும், அவர்களின் தலைவர்களும் விட்ட அறிக்கைகள், மற்றும் ஜெர்மனிய பாஸிச தலைவர்களின் பல அறிக்கைகளும் இக்கட்டுரையின் உண்மையின் பக்கத்தை இனம் கண்டுகொள்ளும் வகையில் எடுத்துக் கையாளுகின்றோம்.

ஜெர்மனியத் தோல்விகளின் பின் ஜப்பான் மீதான தாக்குதல் கூட, ஜப்பானின் சரணடைவு அணுக்குண்டு போட்டமையால் ஏற்படவில்லை. ஜப்பான் தொடர்ந்தும் போராடியது. அணுக்குண்டு தாக்குதலின் பின்னர் 4லட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவி மக்களை அமெரிக்கா தேவையின்றிக் கொன்றதுடன், ஜப்பானின் சரணடைவை சோவியத் தாக்குதலே ஏற்படுத்தியது. ஜப்பானின் பெரும்படையை சோவியத்படை அழித்ததைத் தொடர்ந்தே ஜப்பான் சரணடைந்தது.

மற்றும் எல்லாநாடுகளிலும் போராடிய கெரிலாக் குழுக்களே உண்மையில் அரசியல்அதிகாரத்தை பெற்றிருக்க வேண்டும். ஆனால் தப்பியோடியவரையும், காட்டிக்கொடுத்தவர்களையும், யுத்தத்தின் பின்னர் ஆட்சியில் அமர்த்துவதில் இவ் ஏகாதிபத்தியங்கள் ஈடுபட்டன. இதற்கெதிராக போராடிய குழுக்களைக் கைதுசெய்தும், படுகொலை செய்தும் தமது பொம்மை ஆட்சிகளை நிறுவினர்.

2ம் உலயுத்தின் தயாரிப்பில் இறங்கியகாலம் முதல் யுத்தம் தொடங்கிய ஆரம்பகாலத்தில் கூட ஜெர்மனியை உற்சாகப் படுத்தும் வழிவகையில் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா உட்பட பலர் தம்மால் இயன்றவரை உற்சாகப்படுத்தினர். யுத்தத்தைத் சோவியத்நோக்கி நகர்த்த எல்லாவித முயற்சியிலும் ஈடுபட்டனர். அதற்காக தமது காலனியாகவும், நட்புநாடுகளாகவும் இருந்த சில நாடுகளை ஜெர்மனிக்குக் கொடுத்தும், ஆக்கிரமிப்புக்கு பச்சைக்கொடி காட்டியது மட்டுமன்றி, விமானம், மற்றும் இராணுவ உற்பத்திக்கான மூலப்பொருட்களை என்றுமில்லாதவாறு வாரி வாரி வழங்கினர்.

ஹிட்லர் யுத்தத்தைத் தொடங்கிய காலத்தில் பிரிட்டனிலும், பிரான்சிலும் இருந்த படைகளின்வலிமை ஜெர்மனியைவிட அதிகமானதாக இருந்தது. இருந்தும் யுத்தத்தை சோவியத்யூனியனை நோக்கி திருப்ப எல்லாவகையிலும் முயன்றதால், தமது சக்தியில் பலவற்றை இழந்த பிரான்ஸ் ஆதிக்கவாதிகள் நாட்டைவிட்டோடினர்.

யுத்தம் ஆரம்பித்தபின் 1944 களில் ஐரோப்பாவில் ஹிட்லர் ஆக்கிரமித்த பிரதேசங்களில் 20லட்சம் கெரிலாக்கள் இயங்கினர். இது சோவியத்தில் மட்டுமே 13லட்சமாக இருந்தது. பல்வேறு நாடுகளில் கம்யூனிஸ்டுக்களே இக்கெரிலாக் குழுக்களுக்கு தலைமை தாங்கியதுடன், தற்காலிக அரசாங்கங்களையும் அமைத்திருந்தனர். யுத்தத்தின் இறுதியில் இவர்கள் பலபிரதேசங்களை தாமாகவே நேசநாட்டுப் படையெடுப்புடன் விடுவித்தனர்

2ம் உலகயுத்தம் 2194 நாட்கள்(6 வருடங்கள்) நீடித்தன. 170 கோடி மக்களைக்கொண்ட (இது உலக சனத்தொகையில் 80% மாகும்.) 61 நாடுகள் இவ்யுத்தத்தில் ஈடுபட்டன. 11 கோடி பேர் இராணுவவேலைகளில் அமர்த்தப்பட்டனர்.

1939 செப்ரெம்பர் 01. முதல்– 1945 செப்ரெம்பர் 02. படையின் நிலைமை.

| | விமானங்கள் | டாங்கி. | பீரங்கி. | மார்பீர |
|---|---|---|---|---|
| ஹிட்லர் எதிர்ப்பு நாடுகள். | 5,88,000. | 2,36,000 | 14,76,00. | 6,16,000 |
| ஜெர்மனி. | 1,09,000. | 46,000 | 4,35,000. | |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1938 ம் ஆண்டு விலைவாசிப்படி மொத்தமாக உலகில் 26,000 கோடி டொலர் பெறுமதியான பொருட்சேதம் ஏற்பட்டது. போரிட்ட நாடுகளின் இராணுவச்செலவு தேசிய வருமானத்தில் 70–80 சதவீதமாக இருந்தது.

இவ் யுத்தத்தில் 5 கோடிக்கு மேற்பட்டோர் இறந்தனர். ஆகக் கூடிய இழப்பை சோவியத் கொண்டிருந்தது. 2 கோடி மனிதரைப் பறிகொடுத்த சோவியத் 1,700 நகரங்களையும், 70,000 கிராமங்களையும் சோவியத் இடிபாடுகளாலே மீளப்பெற்றது. 32,000 தொழில் நிலையங்கள் தரைமட்டமாக்கப்பட்டது. போலந்து 60 லட்சம்பேரை பறிகொடுத்தது. யூகோஸ்லாவியா 17 லட்சம் பேரையும், பிரான்ஸ் 16 லட்சம்பேரையும், அமெரிக்கா 4 லட்சம் போரையும், பிரிட்டன் 3லட்சத்து 70ஆயிரம்பேரையும் பறி கொடுத்தது. ஜெர்மன்தரப்பில் ஒருகோடியே 36லட்சம்பேர் கொல்லப் பட்டனர், சிறை பிடிக்கப்பட்டனர், காயப்பட்டனர். இதனுடைய கூட்டாளி நாடுகளில் 50லட்சம் பேருக்குமேல் பாதிக்கப்பட்டனர்.

இவ்விழப்புக்களே யுத்தத்தில் யார் தீவிரமாக இயங்கியது என்பதையும், 2ம் உலகயுத்தம் தோற்கடிக்கப்பட்டு பாஸிசத்தைக் குழிதோண்டிப் புதைக்க சோவியத் முயன்றதையும் மேற்படி தரவுகளே நிரூபிக்கின்றன.

2ம் உலகயுத்தத்தில் பிரதான யுத்தமுனை சோவியத்திலும், பலபடைகளை கட்டிப்போட்டு வைப்பதில் சோவியத் போர்முனை தீர்க்கமான பங்காற்றியது. ஜெர்மனிலும், அதன் கூட்டாளி நாடுகளிலும், அதன் படைத்தொகுதியில் 70–76சதவீதம் 1941–1942 வரை சோவியத்முனையில் இருந்தது. 2–4சதவீதமே பிரிட்டன், அமெரிக்கப் போர்முனைகளில் செயற்பட்டன. 1944இல் இரண்டாவது போர்முனை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 50சத வீதத்திற்கு அதிகமானவை சோவியத் போர்முனையிலும், பிரிட்டன், அமெரிக்காவுக்கு எதிராக 30சதவீதம் மட்டுமே போரில் ஈடுபட்டன.

போர்முனையின் நீளம் இத்தாலிலும், மேற்கு ஆபிரிக்காவிலும் 300–500 கி.மீற்றர்களும், மேற்க்கு ஐரோப்பாவில் 800 கி.மீ ஆகவும், சோவியத்தித்–ஜெர்மனி போர்முனை 3000 முதல் 6200 கி.மீற்றர்களாகவும் இருந்தன.



லெனின்கிராட் முற்றுகை தகர்ப்பு

போர்முனையில் நிலவியநேரம் இத்தாலிய போர்முனை இருந்த நேரம் 74சதவீதமும், வட ஆபிரிக்காவில் 29சதவீதமும், ஐரோப்பா வில் 86.7சதவீதமும், சோவியத்திலோ 93சதவீதமாவும் இருந்தது. சோவியத்–ஜெர்மனி போர்முனையில், சோவியத்–ஜெர்மனி மற்றும் துணைநாடுகளில் 607 டிவிஷன்களை அழித்தனர். வட ஆபிரிக்காவிலும், மேற்கு ஐரோப்பாவிலும் நேசநாட்டினர் 176 டிவிஷன்களையே அழித்தனர்.

சோவியத் துருப்புக்களுக்கு எதிராக நடைபெற்ற சண்டையில் பாசிஸ்டுக்களின் பெரும்பகுதிப் பீரங்கிகளையும், டாங்கிகளையும், மூன்றில் ஒருபகுதி விமானங்களையும், 1,600க்கு மேற்பட்ட போர் கப்பல்களையும் இழந்தனர். அத்துடன் ஒருகோடிக்கும் குறையாத போர்வீரர்களை சோவியத்–ஜெர்மனி போர்முனையில் இழந்தனர். இது ஜெர்மன்தரப்பில் இழந்த ஒருகோடியே 36லட்சம் பேரில் 73 சதவீதமாக இருந்தது.

30ம் ஆண்டுகளில் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகளில் யுத்தவெறிகொண்ட பாசிஸ்டுக்கள் ஆட்சிக்குவந்தனர். கம்யூனிஸ பூச்சாண்டி காட்டியபடி, முதலாளித்துவ ஜனநாயம் என்ற சுரண்டும்வர்க்க அமைப்பு முறைமினூடாவே இப் பாசிஸ்டுக்கள் ஆட்சிப்பீடம் ஏறினர்.

1ம் உலகயுத்தத்தின் முடிவில் ஜெர்மன்மீது ஏகாதிபத்தியங்கள் திணித்த 'வெர் சேய்' எனப்படும் நியாயமற்ற ஒப்பந்தத்தை ஒழிப்பது என்ற பாசாங்கில், புதிய உலக ஒழுங்கை கோரியபடியே பாசிஸ்டுக்கள் 'தேசிய தொழிலாளர் கட்சி என்ற பொய்யான பதாகையை உயர்த்தியபடி 1933ல் ஆட்சிக்கு வந்தனர்.

கம்யூனிஸத்தையும், சோசலிஸத்தையும் "உலகம் முழுவதன் எதிரி என அறிவித்தபடி, "மூன்றாவது பேரரசு" (ஜெர்மன்), "மேற்கத்திய நாகரீகத்தின் கோட்டை" என்றும், "சிலுவைப் போருக்கு ஆயுதம்தரிக்கும் உரிமை வேண்டும்" என்ற கோரிக்கையுடன் ஆயுதபாணியாகினர். 1935ம் ஆண்டு மார்ச் 16ம் திகதி கட்டாய இராணுவசேவை குறித்து ஜெர்மன் சட்டம் இயற்றியது. மே 21ம் திகதி "பேரரசின் தற்காப்பு" பற்றிய சட்டமும் இயற்றப்பட்டது. இது யுத்தம் தொடங்கும்வரை இரகசியமாவே வைக்கப்பட்டது. யுத்தத்தின் பின்னர் நடைபெற்ற 'நியூ ரென்பர்க்' விசாரணையில், இந்த தற்காப்புச் சட்டம் தான் அனைத்திற்கும் காரணமெனத் தெரியவந்தது.

1936ம் ஆண்டு முதலாவது ஆக்கிரமிப்பை 'ரைன்' பிரதேசத்திற்குள் ஜெர்மன் நிகழ்த்தியது. இந்நிலையிலும், தொடர்ந்து ஏற்பட்ட பல ஆக்கிரமிப்புக்களிலும் பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா "தலையிடாமை", "நடு நிலைமை" பற்றிக் கூறியபடி யுத்தத்தை சோவியத்தின்பால் திருப்பவும், ஜெர்மன் தனது ஆயுத பலத்தை பெருக்கத்தேவையான அளவு பொருட்களை என்றுமில்லாதவாறு அனுப்பி வைத்தனர். இதனால் 30களில் ஜெர்மனியின் இராணுவத் தொழில்துறை மற்றைய ஏகாதிபத்தியத்தின் தரத்தைவிடவும் அதிக உயர்ந்தநிலையை அடைந்தது.

1936ம் ஆண்டு ஒட்டோபரில் பிரபல ஜெர்மன் தொழிலதிபரான ஷாஹ்ட் மூன்றாவது பேரரசின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருளாதார அமைச்சராக இருந்தபோது ஆண்டுதோறும் 3 1/2 பில்லியன் மார்க்குக்கு கூடுதலான பொறுமதியான இரும்புத்தாதுவை பெறுவதற்கு ஒப்பந்தம் பிரான்சுடன் செய்யப்பட்டிருந்தது. ஜெர்மனிக்கு பாக்சைட்டின் வரவு 6 மடங்காக அதிகரித்தது. இது விமானக் கட்டுமானத்திற்காக அலுமினியத்தை உற்பத்தி செய்வதில் உலகின் முதலாவது இடத்தை ஜெர்மன் பெற்றுக்கொண்டது.

ஜெர்மனிய புள்ளி விபரப்படி 1933 முதல் 1939வரை ஆயுத உற்பத்தியானது 10 மடங்காகவும், விமானக் கட்டுமானம் 23 மடங்காகவும், இயந்திரக்கட்டுமான தொழில்சாலை உற்பத்தி 4 மடங்காகவும் அதிகரித்தது. அமெரிக்க ஏகபோக கம்பனிகளின் உதவியுடன் 1938ல் ஜெர்மனி சேர்க்கை எரிபொருளின் உற்பத் தியை 1,600 ஆயிரம் டன் வரை உயர்த்தியது. 2ம் உலகயுத்தம் தொடங்கியபோது உலகில் அதிகளவு கடைசல் இயந்திரத்ததை (18 லட்சம்.) ஜெர்மனி வைத்திருந்தது. 1935–1940 வரைக்கும் அதன் இராணுவ உற்பத்தி 23 மடங்காகவும், துருப்புக்களின் எண்ணிக்கையோ 35 மடங்காகவும் அதிகரித்தது.

சோவியத்மீதான கம்யூனிஸ விரோதப் பிரச்சாரத்தில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஈடுபட்ட அதேநேரம், ஜெர்மனியை சோவியத்மீது தாக்குதல் தொடுக்க எல்லாவகைகளிலும் உந்தித் தள்ளினர் இதைப் பயன்படுத்திய ஹிட்லர் பின்வருமாறு கூறினார்.

"போல்ஷிவிக் பூதத்தின் உதவி கொண்டு, சிவப்பு பிரளயத்திற்கு எதிரான கடைசி அரண் ஜெர்மனி மட்டுமே என்று நம்பச் செய்துதான் என்னால் வெர்சேய் வல்லரசுகளை கட்டுப்படுத்தி வைக்க முடியும்..... நெருக்கடியான காலகட்டத்தைக் கடக்க நமக்குள்ள ஒரே வழி வெர்சோயிடமிருந்து பிரிந்து மீண்டும் ஆயுதந்தரிப்பதாகும்."

-K. Ludecke, I knew Hitler, New Youk, 1936, p. 468.-

எந்தளவுக்கு ஜெர்மனியை வளர்ப்பதில் இவ் ஏகாதிபத்தியங்கள் போட்டியிட்டன என்பதை விளங்கிக்கொள்ள ஹிட்லரின் இக்கூற்றே போதுமானது. ஜெர்மனி மட்டுமல்லாது இவ் ஏகாதிபத்தியங்களும் குற்றவாளிகளே.

1936ல் இத்தாலியும், ஜெர்மனியும் கம்யூனிஸ எதிர்ப்பு, சோவியத் எதிர்ப்பு ஒப்பந்தம் செய்துகொண்டன. பின் ஜப்பானும் இதில் சேர்ந்துகொண்டது. 1938 மார்ச்சில் ஆஸ்திரியாவை ஒன்றி னைத்தல் என்ற பெயரில் ஆக்கிரமிப்பை ஜெர்மன் நிகழ்த்தியது. இதன்பின் செக்கோஸ்லொவாக்கியாவில் மிகமுக்கிய எல்லைகளை ஜெர்மனிக்கு வழங்கும் ஒரு ஒப்பந்தத்தை சோவியத்தின்மீது தாக்குதலை தொடுக்க ஊக்குவிக்கும் வகையில் 1938 செப்ரெம்பர் 29ல் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மன், இத்தாலி பிரதிநிதிகள் மூனிக்கில் கைச்சாத்திட்டனர். இவ்வொப்பந்தம் செக்கோஸ்லொவாக்கியாவின் பிரதிநிதி இன்றி ஹிட்லரும், முஸ்ஸோலீனியும், பிரஞ்சுப் பிரதமர் ஏ. டலடியேவும், பிரிட்டன் பிரதமர் நே. சேம்பர்லேனும் கையொப்பமிட்டனர்.

இந்த ஒப்பந்தத்திற்கு அப்பால் செப்ரெம்பர் 30ல் மூனி உடன்படிக்கைக்கு கூடுதலாக பிரிட்டன்–ஜெர்மன் ஒப்பந்தம் வெளியானது. இது பரஸ்பரம் தாக்குவதில்லை என அறிவித்தது. பின் டிசம்பர் 6ல் பிரான்சும் சேர்ந்துகொண்டது. இவ் ஆக்கிரமிப்பு ஒப்பந்தத்தை சோவியத் கண்டித்தது. இதற்குப் பதிலளித்த சேம்பர் "உலக அமைதியைக் காப்பாற்ற" என்று பதிலளித்து, ஆக்கிரமிற்பிற்கான வகையில் புதிய உலக ஒழுங்கு வழியைத் திறந்துவிட்டனர்

மூனிக் ஒப்பந்தத்தை ஒட்டி அமெரிக்க வரலாற்றாசிரியர் பிரெடெரிக்ஷூமன் எழுதியதைப் பார்ப்போம்.

"இரண்டாம் உலக யுத்தத்தின் முன்னணைப் பொழுதில் ஜனநாயக மக்களின் பொறுப்பு மிக்க பிரதிநிதிகள் வெளிப்படுத்திய முட்டாள்தனம் மற்றும் கபடத்தோடு ஒப்பிடக்கூடிய எதையுமே மனித பலவீனம், முட்டாள்தனம் மற்றம் மனிதர்களால் இழைக்கப்பட்ட குற்றங்கள் குறித்து எழுதப்பட்டுள்ள வரலாற்றில் காணமுடியாது."

இவ் ஒப்பந்தத்தை ஒட்டி ஜெர்மனிய அயல்விவகாரத்துறை அமைச்சர் ரிபென்ட்ரோப் பிரிட்டீஸ் பிரதமர் சோம்பர்லேனின் பங்கைக் குறித்து இப்படிக் கூறுகின்றார்.

"இந்தக் கிழவர் இன்று பிரிட்டீஷ் பேரரசின் மரணதண்டனையில் கையொப்பமிட்டு இந்தத் தண்டனையை நிறைவேற்றும் தேதியை முடிவு செய்யும் பொறுப்பை எங்களக்கு விட்டுள்ளார்."

2ம் உலகயுத்தத்தை நடத்த எல்லாவகையிலும் உதவியோர் இவ் ஏகாதிபத்தியங்களே இதை ஜெர்மனிய பாசிஸ்டுகளின் கூற்றுக்களே நிறுவிவிடுகின்றன. 1939ம் ஆண்டு பிரிட்டன்–ஜப்பான் ஒப்பந்தம் கையெழுத்தானதன் மூலம் பிரிட்டீஷ் காலனியான சீனாவை தாரைவார்பதில் இட்டுச்சென்றது. 1938ல் ஜெர்மனிய இராணுவம் சுதேத் பிரதேசத்திற்குள் ஊடுருவியது 1939 மார்ச்சில் செக்கோஸ்லொவாக்கியா முழுவதையும் ஜெர்மனி ஆக்கிரமித்தது. 1939 வசந்தகாலத்தில் லித்துவேனியாவின் கிளைபெத் பிரதேசத்தைக் கைப்பற்றினர். ருமேனியாமீது தளைபூட்டும் "பொருளாதார" ஒப்பந்தத்தை திணித்தனர்.

1939ம் ஆண்டு ஏப்பிரலில் அல்பானியாவை இத்தாலி கைப்பற்றியது. 1938இன் இறுதியில் ஜெர்மனி டான்ட்ஸிங் நெருக்கடியை ஏற்படுத்தி சுயேச்சையான டான்ட்ஸிங் பிரதேசம் மீது நியாயமற்றதன்மையை ஒழிப்பது என்ற போர் வையில் போலந்தின் மீது தாக்குதல் தொடுக்கத் தயாராகினர். பிரிட்டனும், பிரான்சும் "பாதுகாப்பு உத்தரவாதங்கள்" என்ற பெயரில் தமது பொருளாதார நலன்கள்மீது போலந்து, ருமேனியா, கிரீஸ், துருக்கி போன்ற நாடுகள்மீது உத்தரவாதத்தை அளித்தபோதும், ஆனால் நடைமுறையில் இவர்கள் ஆக்கிரமிப்புக்கு பச்சைக்கொடியையே காட்டினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1939து ஏப்பிரல்–மேயில், 1935ம் ஆண்டு செய்துகொண்ட பிரிட்டீஷ்–ஜெர்மனி கடல் உடன்படிக்கையை ஜெர்மன் ரத்துச் செய்தது. அத்துடன் 1934ல் போலந்துடன் படையெடுப்பது இல்லையென்ற ஒப்பந்தத்தையும் முறித்துக்கொண்டது. இத்தாலியுடன் "இரும்பு உடன்படிக்கை" ஒன்றை செய்துகொண்டது. இது ஜெர்மனுடன் மேற்குநாடுகளுடன் போர் மூண்டால் இத்தாலி உதவுமென வரையறுத்திருந்தது.

2ம் உலகயுத்த ஆரம்பத்தில் அதாவது 1939 செப்ரெ. 1.ம் நாள் இராணுவபலம்.

| நாடுகள். | இராணுவம். | பீரங்கி | டாங்கி | விமானம். | நீர்மூழ்கி.–மொத்தம். |
|---|---|---|---|---|---|
| ஜெர்மன். | 46,00,000. | 26,000. | 3,195. | 4,093. | 53.– 107. |
| பிரான்ஸ். | 26,70,000. | 26,000. | 3,100. | 3,335. | 77.– 174. |
| பிரிட்டன் | 16,26,000. | 5,600. | 547. | 3,891. | தெரி–328+ யாது.1,222. |

இப் புள்ளிவிரப்படி ஜெர்மனிய இராணுவத்தின் பலத்தைவிட பிரிட்டன், பிரான்சின் பலம் அதிகமாகவிருந்தது. யுத்த ஆரம்பத்தில் யுத்தத்தை சோவியத்தின்மீது நிகழ்த்தும் கொள்கையினால், யுத்தத்தை வளர்த்து 6கோடி மக்களை படுகொலை செய்யப்பட காரணகர்த்தாக்களாக இவ்விரு நாடுகளும் முனைந்து நின்றன. இதேபோது சோவியத்மீது ஜப்பானானது யுத்தத்தில் இறங்க இவ்நாடுகள் பகிரத்தனமான முயற்சியில் ஈடுபட்டன. அதற்காக ஜப்பானை ஆயுதபாணியாக்க 1939ன் ஆரம்பத்தில் பெரும்முயற்சி செய்தனர். 1939தின் ஆரம்பத்தில் ஜப்பான் இறக்குமதிசெய்த இராணுவத் தளவாடங்களில் 86 சதவீதத்தை அமெரிக்கா, பிரிட்டன், நெதர்லாந் ஆகியவைகளிடமிருந்து பெற்றுக்கொண்டது.

1931ல் வடகிழக்கு சீனாவையும், பின் உள் மங்கோலியாவின் பகுதியையும் ஜப்பான் கைப்பற்றிக் கொண்டது. 1934ல் மஞ்சூரியாவிலும், கொரியாவிலும் சுமார் 40 விமானத்தளங்களும், 50 இறங்குமிடங்களையும், கட்டினர். இதுதவிர போர்நடவடிக்கைக்கு அவசியமான 1000கி.மீ இரும்புப்பாதையையும் போட்டனர். இவை அனைத்தும் சோவியத் எல்லையிலும், சோவியத்மீதான தாக்குதலுக்கான அடிப்படையில் நிகழ்ந்தன. சோவியத்திற்கு எதிராக மஞ்சூரியாவில் இருந்த இராணுவத்தின் எண்ணிக்கையை அதிகரித்தவண்ணம் இருந்தனர். 1932ல் 50ஆயிரம் பேர் இருந்தனர். இது ஜப்பானிய இராணுவத்தின் 20 சதவீதமாகும். இது 1937ல் ஐந்துமடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தது.

.................அடுத்த இதழில் தொடரும் ........................................

**சந்திரிகா முன்னணி அரசு ............ தொடர்ச்சி**

வடக்கு, கிழக்கு நோக்கிய ஸ்ரீலங்கா அரசு கூலிப்படையின் அட்டகாசங்கள் எழுத்தில் அடங்காதவை. அதுவும் வடக்குநோக்கிய ஸ்ரீலங்கா கூலிப்படைகள் நடாத்தும் விமானத்தாக்குதல், தரை கடல் செல் தாக்குதல்கள் என முழு பொறுக்கித்தனமான நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தமிழீழத்தைப் பற்றிய பொய்யான கனவுகளை ஏற்படுத்தியுள்ள தமிழர்களின் நவீன எஜமானர்களான L.T.T.E தமிழ்த் தேசிய பிரச்சனையை தனது கைபிலே விடாப்பிடியாக வைத்துள்ளது. புலிகளின் போராட்டம், மக்களின் நிர்வாகம் ஒவ்வொன்றும் வெடிமருந்தினை அடைத்துக் காவியபடியே நடாத்தப்படுகிறது. புலிகள் வாயால் சமாதானத் தீர்வு என்றும், கருத்தில் சயனைட்டுடனும் கையில் வெடிகுண்டுடனும், தற்கொலைப்படையாகவும் தாக்குதல் படையாகவும் இருந்தபடி அரசுபோல் இரட்டை வேடத்தில் செயற்படுகின்றனர்.

பாஸிச U.N.P இனரின் ஆட்சியில் அத்தியாவசியப் பொருட்களுக்கே அதிக விலை கொடுத்தும் அரசின் ஏவல் நாய்களான பொலிஸ், இராணுவத்தின் தாக்குதலில் தப்பி வாழ்ந்தமக்கள் ஒரு மாற்றத்தை (தமிழ்மக்களின் குறைந்த பட்ஷசத் தீர்வுடன்) விரும்பினார்கள் என்பது உண்மையே. தமிழ், சிங்கள மக்கள் இனவாதங்களையும் பாஸிட்டுக்களையும் வெறுத்தனர். இச் சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்திய சந்திரிகாவைசுத்தமான தலைவர் என்ற நிலையினை ஏற்படுத்தி வழிபாட்டைத் தொடங்கியுள்ளனர்.
மக்களின் உணர்வுகளைக் கவர்ந்து இழுக்கக்கூடிய வகையில் பொய்யான வாக்குறுதிகளை அள்ளிவீசியும் பொதுத் தோர்தலில் பொரும்பான்மையற்ற ஆட்சியையே கைப்பற்றியுள்ளனர். பாராளுமன்றத்தில் பிரதமரானதும் சந்திரிகா சிறுபான் மை இனமக்களின் உரிமைபற்றி வாய்ச் சவாடல் அடித்துவருகிறார். இனப்பிரச்சனையைத் தீர்ப்பதில் அக்கறையுள்ளவர் போல் நடிக்கிறார். மனிதாபிமானம், ஜனநாயகம், பண்புள்ள ஆட்சியென்று முழங்கி தள்ளுகிறார். புலிகளின் தலைவர்களுக்கு சமாதான அழைப்பு விடுகிறார். மக்களும், அவரை துதிபாடும் பத்திரிகைகளும் விசித்திரமான பாராளுமன்றக் கனவுகளை செய்தியாக்கி வெளியிடுகின்றன.

வடபகுதியை நோக்கிய பொருளாதாரத் தடையை சற்றுத் தளர்த்தினார், சுற்றிவளைப்புக்களை சற்றுக் குறைத்துள்ளார், எனப் பத்திரிகைகளும் செய்தி அமைப்புக்களும் வழமைபோல் உறுதியானவர், அதிகநேரம் உழைப்பவர், பெரும்பழுவைச் சுமப்பவர் என்றெல்லாம் புகழாரத்துடன் கூடிய குழையடிப்புக்களைச் செய்து வருகின்றன.

வீரகேசரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சிவநேசச் செல்வன் மேலும் ஒருபடி உயர்த்தி 'இந்தியா ருடே'(6–20,94) இல் "சந்திரிகா சென்னதை செய்துகாட்டுவார்" என்று 'லொள்ளு' வேறு விடுகிறார். இன்று நாடெங்கிலும் சந்திரிகா என்ற பிரமை உருவெடுத்தாடுகிறது. புலிகள் ஒரு கரத்தில் வெடிமருந்தை ஒழித்தபடி மறுகரத்தை சாமாதானத்திற்காக நீட்டுவது வேடிக்கையாகவே உள்ளது. யுத்த நிறுத்தம், நல்லெண்ண நடவடிக்கை, வாழ்த்துக்கள் அனுப்புதல் என்றுமட்டும் நின்றுவிடாமல் புலிகளின் 'களத்தில்'(16–9 –94) பத்திரிகையில் இப்படிக் குறிப்பிடுகின்றனர். "பிரதமர் சந்திரிகாவுக்கு வீராப்புடன் மட்டுமல்லாமல் வீரமுடனும் செயல்பட வேண்டிய காலம் இதுவென்பது தமது கருத்தாம்."

வீரத்துடன் கூடிய செயல்பாட்டை நிரந்தர அமைதியைத் தோற்றுவிக்குமாம் என்று எழுதுகின்றனர் புலிகள். இது எப்படி? இதுபற்றி புலிகளுக்குத்தான் புரியும். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக ஆட்சியாளரின் பாராளுமன்றத்தில் எதிர் வரிசையில் தொழுவங்களில் வாழ்ந்து வாழ்ந்து கொழுத்த பன்றிகளைப் போல் 94 U.N.P குண்டர்கள் உள்ளனர். இவர்கள் பாராளுமன்றத்தில் ரவுடிகளாகவே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளர்ந்தவர்கள். இத்துடன் இவர்கள் அமைச்சர்களாகவும் இருந்தவர்கள். இந்த பாசிஸ்டுகளின் முன் பாராளுமன்ற முன்அனுபவ பரீட்சாத்தியம் இல்லாத சந்திரிகா தலைமையிலான நவ பாசிஸ பொ.ஐ.முன்னணி தடுமாறுகிறது.

40 வருடங்களுக்கு முன் சுச்சரித் தாவில் தனது அரசியலை ஆரம்பித்து U.N.P யின் அசைக்கமுடியாத தலைவராகவும், சர்வாதிகாரியாகவும், பன்னாட்டுத் தலைவர்களை கைக்குள்போட்டு வைத்திருந்த இரட்டைக் கொம்பன் ரணசிங்க பிரேமதாசவாலேயே புலிகளை (பிரபாவி னரை) பேரத்திற்கும், பேச்சிற்கும் அழைக்க முடிந்ததுடன் ஏமாற்றவும் முடிந்தது. இந்தநிலையில் சந்திரிகா முன்னணி வெறும் 'கொசுறு' ஆகவே உள்ளது.

இன்று நடந்துகொண்டிருப்பது வெறுமையான அதிகார மாற்றமே. U.N.P கொள்ளைக்காரர்களுக்குப் பதிலாக சு.கட்சியும், அதன் கூட்டாளிகளும் வழமை போல உழைக்கும் மக்களின் இரத்தத்தை ஒட்ட உறிஞ்சப் போகிறார்கள். சந்திரிகா முன்னணி, தனக்கு வாக்களித்தவர்களை திருப்திப்படுத்தவும், பழிவாங்கும் நோக்குடன் U.N.P யின் ஊழல், முறைகேடுகள், அதிகாரத் துஸ்பிரயோகங்கள் போன்ற நடவடிக்கையில் ஈடுபடலாம். அதேநேரம் தாம் புதிய ஊழல்களில் குளித்து எழும்புவர். புதைகுழிகளைத் தோண்டுவார்கள், ஆனால் புதிய புதைகுழிகளை உருவாக்குவார்கள்.

விலை குறைப்பு, மானியம் வழங்குதல், சம்பள உயர்வு போன்றவைகளை வழங்கி மக்களுக்கு இன்ப அதிர்ச்சியை (தற்காலிகமாக) உண்டாக்கலாம். இவை யெல்லாம் முழுமையான அதிகாரத்தை கைப்பற்றப் போடும் அத்திபாரங்களே. இந்த அரச யந்திரத்தில் புதிய ஆட்சி யாளர்கள் வேறு அணுகுமுறையூடாக மக்களைக் கசக்கிப் பிழிய காத்திருக் கின்றனர்.

புலிகளின் அதிகாரத்திற்குள் வாழும் மக்களும் வரிச்சுமை, விலை உயர்வு, மிரட்டல்கள், ஜனநாயக மறுப்பு, சொத்துககள் பணம் பறிப்பு என்று ஒரு சூனிய நிலைக்குள் வாழ்ந்து செய்வதறி யாது. இவர்கள் என்ன விடுதலைப் புலிகளா? வியாபாரப் புலிகளா? என்கின்ற முணுமுணுப்புக்களைக் கேட்க்கக் கூடியதாக உள்ளது. இப்படியான நிலையிலே புலிகள் மக்களின் மேல் துப்பாக்கியைால் இடித்தபடியே ஆட்சி நடாத்துகிறார்கள்.

சமாதானம் வேண்டுமென்ற மக்களின் குறைந்தபட்ச தீர்வைக்கூட ஆரசோ, புலிகளோ வழங்கப்போவது இல்லை. ஜனநாயக நீரோட்டத்தில் குதித்த துரோகக் குழுக்கள் கூட தமது அதிகார எல்லைக்குள் மக்கள்மீதும், மாற்றுக்குழுக்கள் மீதும் வன்முறையைக் கையாளுவதை நாம் காண்கின்றோம். எச்சில் இலைகளை நக்கும் இவர்களே இப்படியென்றால், புலிகள் தமது அதிகாரத்தையும், சுரண்டலையும் இலேசில் கைவிட்டுவிடுவார்கள் என்பது கனவுகளே. இதை நாம் துரோகக் குழுக்களின் ஜனநாயகத்திலிருந்தே தெளிவாக புரிந்துகொள்ள முடியும்.

அரசானது இனவாத அரசயந்திரத்தில் இருந்தவாறே அதே துரோகக்குழுக்களின் ஆதரவுடன் சத்திரி சேகர், அஸ்ராப் போன்ற மக்களை விற்றுப் பிழைக்கும் பச்சோந்திகளும் இருக்க இந்த அரசால் எப்படி சமாதானத்தை, மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து வைப்பார்கள்.

இந்த சந்திரிகா முன்னணிக்குள் உள்ள இனவாதிகள், மக்களை ஏமாற்றும் போலி இடதுசாரிகள், பச்சோந்திகள் அடங்கிய இந்தக்கூட்டம் தீர்வைத தரப் போகிறதாம். இது உலகில் எங்கேனும் நடந்ததாக வரலாறும் கிடையாது. சுரண்டல், கொள்ளை, அடக்குமுறை, யுத்தப்பிரகடனம் இதுவே இவர்கள் அழகிய தட்டில் வைத்துத்தரும் தீர்வுகளாக இருக்கும். இதற்குமேல் ஒரு துரும்பையும் தராது.---------

**சந்திரிகா அரசின்.......... தொடர்ச்சி**

'திருச்சபை'யின் போலித்தனங்கள் அம்பலப்பட்ட நிலைகளின் பின்னரும் அம்மக்கள் தன்னிச்சையாகப் போராடினர். முற்போக்கு(?) சந்திரிகா அரசோ அமெரிக்க ஏகாதிபத்திய சார்பை மெய்பிக்கும் வகையில் துப்பாக்கிக் குண்டுகளை அம்மக்களுக்கு பரிசாக வழங்கினர். இதனால் ஒருவர் கொல்லப்பட்டும், பலர் படுகாயம் அடைந்துமுள்ளனர். முற்போக்கு, 'இடதுகள்' எனக்கூறும் பல முற்போக்குகள் கூட இவ்வரசின் கொலை வெறிக்கு துணைபோகும் விதத்தில் வாயைத் திறக்கவேயில்லை.

இன்று இருக்கும் அரசயந்திரத்தில் சந்திரிகா மாற்றப்பட்ட ஒரு பொம்மையே. அரசுக்குவந்து இரண்டு மாதங்கள்கூட ஆகவில்லை, யூ.என்.பி க்கு சற்றும் சளைத்தவர்கள் இல்லையென்பதை இக் கொலைகார அரசு நிரூபித்துவிட்டது. இவ்வளவு சீக்கிரத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் சபாஷ் பட்டமும் வாங்கி, தமது தரகுத்தனத்தையும் காட்டிவிட்டனர். கத்தோலிக்க திருச்சபையோ இக்கொலையை துரதிஸ்டவசமானது எனக் குழைந்து, மக்களின் போராட்டத்தை அமத்த களத்தில் மீண்டும் இறங்கியுள்ளது. அமெரிக்காவிடம் பணத்தைப் பெற்றுவரும் இப்புனித 'திருச்சபை' தனது பைபிளையே மீறுகின்றது. முன்பு தம்புல்ல உல்லாசவிடுதி அமைந்த காலத்தில் இதே திருச்சபை மக்களின் போராட்டத்தை திசைதிருப்பவென்றே தலைமைதாங்கி பின்னர் 'அம்போ' வென கைவிட்டது.

சிங்கள கைதிகளை மீட்க்க புலிகளிடம் வேண்டியும், பேச்சுவார்த்தைகளை நடத்தும் திருச்சபையானது தமிழ்மக்கள் அரச கொடுஞ்சிறையில் வாடும்போது மட்டும் மௌனப்பிரார்த்தனை செய்தது. வடக்குக், கிழக்கு மக்களை மட்டுமன்றி சிங்கள இளைஞர்களையும் கொன்று குவிக்கும் இராணுவத்திற்கு குளிர்மையான ஆசீர்வாதங்களையும் வழங்கி, தேவாலயங்களில் சமாதானப் பிராத்தனையும் செய்கிறது.

யாரை ஏமாற்றுகின்றனர்? ஒலிபரப்பு நிலையத்திற்கு எதிராக-தமது நிலங்களுக்காக போராடிய மக்களின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த அரசு குண்டர்களுக்கு ஆசிகளை இறைத்துவிட்டு, மறுபுறம் அம்மக்களுக்கு தலைமையும் கொடுக்கிறது இந்தத் தேவ ஆட்டுக்குட்டிகள். இதற்குள் முற்போக்கு(?) சந்திரிகா அரசுக்கோ பிரத்தியேக ஆசிகள்வேறு. இவைகளெல்லாம் ஏமாற்று வித்தைகளே. மக்கள் தாமே தம்கரங்களில் அதிகாரத்தைப் பெறுவதற்குப் போராடுவதன்மூலம் மாத்திரமே மக்கள் விடுதலையை அடையமுடியும். ****



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்